# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20

பக்கங்கள்: 28

சுடர் 32 கதிர் 306 புரட்டாதி 12ஆம் நாள் வியாழக்கிழமை 28 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


## வித்தியாவை வன்புணர்ந்து கொன்ற

# 7 பேருக்கு தூக்கு!

### இருவர் விடுவிப்பு; தலா 10 லட்சம் இழப்பீடு வழங்கவும் தீர்ப்பாயம் உத்தரவு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 28

பாலியல் வன்கொடுமையின் பின்னர் கொடூரமாகக் கொல்லப்பட்ட புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வழக்கு நேற்று முடிவுக்கு வந்தது. சுவிஸ்குமார் உள்ளிட்ட 7 பேர் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது இந்த வழக்கை விசாரித்த சிறப்புத் தீர்ப்பாயம்.

மாணவியைக் கடத்திச் ›› 25



மேலும் படங்கள் பக். 04



## கண்ணீருடன் நன்றி

யாழ்ப்பாணம், செப்.28

"என்னைப் போன்று இனி எந்தத் தாயும் அழக்கூடாது. என் மகள் வித்தியாவுக்காக கஷ்டப்பட்ட அனைவருக்கும் கண்ணீருடன் வித்தியா சார்பில் நன்றி கூறுகின்றேன்"

இவ்வாறு புங்குடுதீவு மாணவி வித்தியாவின் தாய் சிவலோகநாதன் சரஸ்வதி கண்ணீருடன் தெரிவித்தார்.

வன்கொடுமையின் பின்னர் கொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவியின் வழக்கில் குற்றவாளிகள் 7 பேருக்கு நேற்றுத் தூக்குத் தண் ›› 25

## மன்றில் மயங்கினார் வித்தியாவின் தாய்

யாழ்ப்பாணம், செப்.28

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் மாணவி வித்தியாவின் தாய் மயங்கி விழுந்தால் பரபரப்பு ஏற்பட்டது.

திறந்த தீர்ப்பாயத்தில் நேற்று தீர்ப்பு நீதிபதிகளால் வாசிக்கப்பட்டது. அதன்பின்னர் எதிரிகளிடம் உங்களுக்கு ஏன் தூக்குத் தண்டனை விதிக்கப்படக் கூடாது? என்று தீர்ப்பாயத்தால் வினவப்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் தீர்ப்பாயத்துக்கு வந்திருந்த வித்தியாவின் தாய் சிவலோகநா ›› 25

## வித்தியா வழக்கில் விடுவிக்கப்பட்டவர் மீளவும் சிறையில்

யாழ்ப்பாணம், செப்.28

வித்தியா படுகொலை வழக்கில் முதலாம் எதிரியான பூபாலசிங்கம் இந்திரகுமார் நிரபராதி என தீர்ப்பாயத்தால் விடுவிக்கப்பட்ட போதும், தம்மை கைது செய்த பொலிஸ் உத்தியோகத்தரை வெளியில் வந்து வெட்டுவேன் என மிரட்டிய வழக்குத் தொடர்பில் விளக்க மறியலில் வைக்கப்பட்டார். அந்த வழக்கில் இவர் விளக்க மறியல் கைதியாக ›› 25

## மேன்முறையீடுக்கு உடனே செல்வோம்

*தீர்ப்பு வந்த கையோடு குற்றவாளிகளின் சட்டத்தரணி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், செப். 28

இலங்கையின் சட்டம்தான் கடத்தப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த குற்றவாளிகள் தரப்புச் சட்டத்தரணி, தீர்ப்பாயத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படும் என்றும் கூறினார்.

வித்தியா கொலை வழக்கின் 2,3,6,8ஆம் குற்றவாளிகளின் சார்பில் ›› 25

## குழந்தையின் சாவில் சந்தேகம் சடலம் மீளத்தோண்டியெடுப்பு

### தந்தை கைது

மன்னார், செப். 28

மன்னார் சிலாபத்துறை, பெற்கேணி கிராமத்தைச் சேர்ந்த ஒன்றரை வயதுக் குழந்தையின் இறப்பில் சந்தேகம் கொண்ட பொலிஸார், மன்னார் நீதிமன்றத்தின் அனுமதியு ›› 05



## யாழ். நீதிமன்ற வளாகத்துக்கு கடும் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், செப்.29

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் தீர்ப்பு நேற்று தீர்ப்பாயத்தால் வழங்கப்பட்டது. தீர்ப்பு வழங்கப்படுவதை முன்னிட்டு யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்திலும், சுற்றுப்புறத்திலும் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந் தன.

பெரும் எண்ணிக்கையான பொலிஸாரும், சிறப்பு அதிரடிப் படையினரும் சுற்றுப்புறங்களில் ›› 25

## பொங்கல் பொங்கி வெடி கொளுத்தி தீர்ப்புக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், செப்.28

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் குற்றவாளிகள் 7 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அதை வரவேற்று யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வெடிகள் கொழுத்தப்பட்டதுடன், பெண்கள் பொங்கலும் பொங்கினர். வித்தியா கொலை மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. தீர்ப்பாயத்தால் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டதை அடுத்து ›› 25



## சுவிஸ்குமார் தப்பிக்க விஜயகலா உதவினார்

*தீர்ப்பில் கோடிட்டுக்காட்டினார் நீதிபதி இளஞ்செழியன்*



யாழ்ப்பாணம், செப். 28

"வித்தியா படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிகுமாரை முதன்முறையாகத் தப்பிக்கவைக்கும் செயற்பாட்டைச் செய்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன். பொதுமக்களிடமிருந்து சுவிஸ்குமாரைக் காப்பறிய அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்காதது தவறு"

இவ்வாறு தீர்ப்பாயத்தின் நீதிபதிகளில் ஒருவரான மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் ›› 05

## விக்கி, சுரேஸ்க்கு நேசக்கரம் நீட்டுகிறது தமிழ் அரசுக் கட்சி

மட்டக்களப்பு, செப். 28

தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, தலைமை என்கின்ற வார்த்தைகளுக்கு மதிப்பளித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல். ›› 05



மக்கள் எழுச்சிக்கு கிடைத்த வெற்றி...

## தமிழக ஊடகங்களும் தீர்ப்புக்கு முக்கியத்துவம்

சென்னை, செப். 28

வித்தியா கொலை வழக்கின் தீர்ப்புக்கு தமிழக ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுத்துச் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்தச் செய்திக் ›› 25

## காஸ் சிலிண்டருக்கு வடக்கில் விலைக் குறைப்பு

›› 04





நேஷன்ஸ் பிளக்சி டிபோசிட் உங்கள் விருப்புக் காலத்தின்படி நிலையான வைப்பு

உங்கள் நிலையான வைப்புக் காலத்தை உங்கள் விருப்பின்படி நீங்களே தீர்மானியுங்கள்

(குறைந்தபட்சம் 30 – அதிகபட்சம் 365 நாட்கள் வரை)

மேலதிக விபரங்களுக்கு 0114 711 411 www.nationstrust.com அல்லது அருகிலுள்ள கிளைக்கு விஜயம் செய்யுங்கள்

Nations Trust Bank Nations Flexi Deposit

நிபந்தனைகளுக்கு உட்பட்டது. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி.எல்.சி-PQ118 | பிச் ரேடிங் A(lka) | நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வைசெய்யப்படும் ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

# நிரந்தர நியமனம் கோரி துறைமுக ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு,செப்.28
நிரந்தர நியமனம் வழங்கக் கோரி, அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
துறைமுகத்தில் கடமையாற்றும் 466 ஊழி பர்களுக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை. தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் அல்லது தம்மைச் சேவையில் இருந்து நீக்கினால் நியாயமான நட்ட ஈட்டைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
துறைமுக ஊழியர்கள் ஒன்று திரண்டு பிரதான நுழைவாயிலுக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
அதேவேளை கடந்த டிசெம்பர் மாதம் சீன நிறுவனத்துக்கு, அம்பாந்தோட்டை துறைமுகத்தைக் குத்தகைக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, துறைமுக ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## இ.போ.ச.பேருந்து மீது மட்டக்களப்பில் தாக்குதல்

மட்டக்களப்பு,செப்.28
கட்டுநாயக்காவிலிருந்து காத்தான்குடி நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்து மீது நேற்று அதிகாலை கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.
மட்டக்களப்பு, சத்துருக்கொண்டானில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
தாக்குதலில் பேருந்தின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-ரி-2)

## நெல் மூடைகளுக்கு விசமிகள் தீ வைப்பு

மட்டக்களப்பு,செப்.28
மட்டக்களப்பு, பருத்திச்சேனையில் விவசாயத்துக்காக வைக்கப்பட்டிருந்த விதை நெல் மூடைகள் மீது விசமிகள் தீ வைத்துள்ளனர். அதில் 39 விதை நெல் மூடைகள் தீக்கிரையாகின எனத் தெரிவிக்கப்பட்டது.
நெல் களஞ்சியசாலையின் பின்புறமாக உள்ள கம்பி வேலியை வெட்டி உள்நுழைந்தவர்கள், பெற்றோலை களஞ்சிய சாலைக்குள் ஊற்றி, நெல் மூடைகளுக்குத் தீ வைத்துள்ளனர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
வவுணதீவுப் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



### 3 மாவட்டங்களில் கையகப்படுத்தப்பட்ட

# காணிகளை விடுவிக்க படையினர் இணக்கம்

## இராஜாங்க அமைச்சர் இராதகிருஸ்ணன் தெரிவிப்பு

வவுனியா, செப்.28
வடக்கில் குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களில் படையினரால் கையகப்படுத்தப்பட்ட, பொதுமக்களின் காணிகளை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் விடுவிப்பதற்குப் படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று கல்வி இராஜாங்க அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.
வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் படையினர் வசம் உள்ள பொது மக்களின் காணிகளை விடுவிப்பதற்குப் படையினர் சம்மதம் தெரிவித்துள்ளனர். விடுவிக்க முடியாத காணிகள் தொடர்பாக மாற்றுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
வவுனியா மன்னார் முல்லைத்தீவு பகுதிகளில் படையினர் வசம் உள்ள பாடசாலைகள், ஆலயங்கள், தேவாலயங்கள்,பள்ளிவாசல்,விகாரைகள்,சுகாதார நிறுவனங்களை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் வவுனியா மாவட்டச் செயலர் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.
மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் படையினர்வசம் அல்லது அவர்களுடைய ஆளுமைக்குள் உள்ள பாடசாலைகள் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை அதிகாரிகள் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பித்தல், மீண்டும் இயங்க வேண்டிய தேவை உள்ள பாடசாலைகளை இயக்குவதற்கும், அதற்கான கட்டடங்கள் தளபாடங்களை கல்வி அமைச்சு மூலம் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல், இயங்க வேண்டிய தேவையில்லாத பாடசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல், பூந்தோட்டம் நலன்புரி முகாமை விடுவிக்க நடவடிக்கை எடுத்தல், வவுனியா வடக்குப் பகுதியில் அமைப்பதற்கு கலந்தாலோசிக்கப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்சி நிலையம் தொடர்பாகக் காணியை இனம் கண்ட பின்பு, இது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல், அதற்கு அரச காணிகள் இல்லாத பட்சத்தில் தனியாரிடம் இருந்து காணியைக் கொள்வனவு செய்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
அதேவேளை முல்லைத்தீவுப் பகுதியில் அமைந்துள்ள இரண்டு ஆலயங்களை மிக விரைவில் விடுவிப்பதற்கும், அதே நேரம் அங்குள்ள 131 ஏக்கர் காணியையும் 81 உரிமையாளர்களுக்குக் கையளிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று படையினர் தெரிவித்தனர்.
"படையினர் காணி விடுவிப்பு தொடர்பாக மிகவும் அக்கறையுடன் செயற்படுகின்றமை வரவேற்கக்கூடிய ஒரு செயற்பாடாகும்.
எதிர்வரும் டிசெம்பர் மாதம் அளவில் அநேகமான காணிகளை விடுவித்துக் கொள்ள முடியும்" என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.
இந்தக் கலந்துரையாடலில் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.சுரேஸ், வவுனியா மாவட்டச் செயலர் எம்.பி.ஆர்.புஸ்பகுமார,கல்வி அமைச்சின் தமிழ் பாடசாலைகளுக்கான அபிவிருத்திப் பணிப்பாளர் முரளீதரன்,கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாதுகாப்புப் பிரிவினர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## தரித்து விடப்பட்ட தனியார் பஸ் மாயம்

கொழும்பு,செப்.28
களுத்துறை - மத்துகம பிரதேசத்தில் தரித்து விடப்பட்டிருந்த தனியார் பேருந்து நேற்று மாயமாகியுள்ளது. பேருந்து காணாமல் போயுள்ளதாக உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
காணாமல் போனதாகக் கூறப்படும் தனியார் பேருந்து, பாணந்துறைப் பகுதியில் இருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



## சுயநல அரசியல்வாதிகள் சிலரால் முஸ்லிம்களின் இருப்புக்குப் பாதிப்பு

### கிழக்கு மாகாண உறுப்பினர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,செப்.28
சுயநலம் கொண்ட அரசியல்வாதிகள் சிலரால், முஸ்லிம் சமூகத்தின் இருப்புக் கேள்விக்குறியாகியுள்ளது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் தெரிவித்தார்.
ஏறாவூர் அல்முனீறா பாலிகா மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட ஆராதனை மண்டபத் திறப்பு விழா மற்றும் அலுவலக உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.
அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது,
நீண்ட காலமாக சிதறுண்டிருந்த தமிழ் முஸ்லிம் உறவு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நேசம் சிறுபான்மையினரின் எதிர்கால தனித்துவத்துக்கு ஒரு அடித்தளமாகும். ஆனால் தூர நோக்கற்று விமர்சிக்கும் ஒரு சிலர், தமது அறியாமை காரணமாக இந்தச் சமூகத்தை தறவாக வழி நடத்துகின்றனர்.
கடந்த கால அரசுகளால் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. தற்போதை கிழக்கு மாகாண முதலமைச்சரால் தமிழ் மக்கள் உட்பட முஸ்லிம் மக்களும் எதிர்பார்த்த சில நன்மைகளை அடைந்துள்ளனர். பிரதேசம் அபிவிருத்தி அடைந்துள்ளது. இதனை ஏற்றுக் கொள்ளாத குழப்பவாதிகள் சிலர் தமது சுயநலத்துக்காக மக்களைத் திசை திரும்ப முயல்கின்றனர். என்றார். (ஐ-46)



வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் , முதியோர் விழிப்புணர்வு செயல்திட்டம் பாடசாலை அதிபர் எஸ்.திருஞானசம்பந்தமூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் சிறப்புரை நிகழ்த்தினார். (ஐ)

## சைட்டத்தால் நிதி மோசடி என முறைப்பாடு

கொழும்பு.செப்.28
சைட்டம் நிறுவனத்தால் பொது மக்களின் நிதி மோசடி செய்யப்பட்டதாகத் தெரிவித்து, அது தொடர்பான முறைப்பாட்டுக் கடிதம் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.
அனைத்து இலங்கை மருத்து அதிகாரிகள் சங்கத்தால் அந்தக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உடனடியாக சட்டத்தை நடைமுறைப்படுத்தி, உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சங்கத்தின் முதன்மைச் செயலாளர் மருத்துவர் ஜெயந்த பண்டார கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)



## யானைகளின் அச்சுறுத்தல்: பற்றைக்காடுகள் அழிப்பு

மட்டக்களப்பு,செப்.28
மட்டக்களப்பு போரதீவுப்பற்றுப் பிரதேசத்துக்குட்பட்ட இளைஞர் விவசாயத் திட்டக் கிராமத்தில் காட்டு யானைகள் தரித்து நிற்கும் பற்றைக் காடுகள் நேற்று அழிக்கப்பட்டன.
போரதீவுப்பற்றுப் பிரதேச சபையின் உதவியுடன், பெக்கோ இயந்திரம் மூலம் காடுகள் அழிக்கப்பட்டன. சுமார் 2 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள காடுகள் அழிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மார்க்கண்டு நடராசாவிடம், இளைஞர் விவசாயத் திட்டக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க காடழிப்பு மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விபத்திலிருந்து பாதுகாத்தல்; மன்னாரில் ஒத்திகை நிகழ்வு





மன்னார்,செப்.28
விபத்தில் பாதிக்கப்பட்ட ஒருவரை மீட்டு, அவருக்கு எவ்வாறு முதலுதவிகளை மேற்கொள்ளல் தொடர்பான ஒத்திகை நிகழ்வு மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது.
மருத்துவமனைப் பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் ஒத்திகை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.
விபத்தில் பாதிக்கப்பட்டவரை மருத்துவமனையில் எவ்வாறு சேர்த்தல், காயமடைந்தவரை மருத்துவமனைக்குக் கொண்டு வருவதற்கு முன்னரான தயார்ப்படுத்தல், மருத்துவர்கள், பணியாளர்கள் தயார் நிலையில் இருத்தல் போன்ற ஒத்திகைகள் இடம் பெற்றன.
விபத்தில் பலர் காயமடைந்தனர் போன்ற காட்சிகள் அமைக்கப்பட்டு, நோயாளர் காவு வண்டி மூலம் மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்களுக்கு அங்கு அவசர சிகிச்சை, முதலுதவிகள் வழங்கப்பட்டன.
மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் திருமதி அன்ரன் சிசில் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.
அதில் இடர் பாதுகாப்பு பிரிவினர், போக்குவரத்துப் பொலிஸார், இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் மன்னார் கிளை தொண்டர்கள், மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனை மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள்,மற்றும் பொது மக்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-56)

# நாட்டின் அபிவிருத்திக்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம்

## அரச தலைவர் கோரிக்கை



பதுளை,செப்.28
நாட்டின் துரித அபிவிருத்திக்கு பன்னாடுகளின் முழுமையான ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம் தேவை. நாட்டின் மீது பன்னாடுகள் கொண்ட அபகீர்த்தி எமது ஆட்சியில் நீக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
பதுளையில் குடிதண்ணீர் விநியோகத் திட்டம், 250 வாகனங்கள் தரித்து நிற்கக் கூடிய வாகன தரிப்பிடம், சமிக்ஞை வர்ணத் திட்டம் என்பவற்றின் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நாட்டைத் துரித அபிவிருத்தி செய்ய வேண்டுமானால், ஸ்தீரமான அரசியல் சூழல் மற்றும் பன்னாடுகளின் நாடுகளின் ஒத்துழைப்பு மேலோங்க வேண்டும்.
பன்னாடுகளில் நாடுகளில் எமது நாட்டைப் பற்றியிருந்த களங்கத்தை, நான் முற்றுமுழுதாகப் போக்கியுள்ளேன். ஐ.நா. செயலாளர், மனித உரிமை ஆணையாளர் உள்ளிட்ட பன்னாடுகளின் முக்கிய தலைவர்கள் பலரிடமும் நான் பேச்சுக்களை மேற்கொண்டு, நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்கம், சகவாழ்வு, ஐக்கியம் தொடர்பான விடயங்களைத் தெளிவுபடுத்தினேன். எனக்கு கிடைத்திருந்த வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொண்டேன். அத்துடன் எமது நாட்டின் மேம்பாடுகளைக் கருத்தில் கொண்டு உதவிகளை வழங்குமாறு உலகத் தலைவர்களிடம் என்னால் விடுவிக்கப்பட்ட கோரிக்கைகள் முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
எமது நாட்டின் அபிவிருத்தியைத் துரிதமாக மேற்கொள்வதற்கு எந்தவொரு தடையும் தற்போது இல்லை. வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றத்தால் எமது மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களை எதிர்நோக்கியுள்ளனர். அதனைக் கருத்தில் கொண்டும், உணவு உற்பத்தியை அதிகரிக்கு முகமாகவும் உணவு உற்பத்தி வாரமாகப் பிரகடனம் செய்துள்ளேன். அதன் ஆரம்ப நிகழ்வு மாத்தளைப் பகுதியில் தம்புள்ள என்ற இடத்தில் நடைபெறவுள்ளது.
எமது நாட்டு மக்களின் நீண்டகால வரலாற்றைப் பின்னோக்கிப் பார்ப்போமேயானால், அது ஒரு போராட்ட வரலாற்றுக்களை முன்னிலைப்படுத்தியதாகவே அமைந்திருந்தது. காலணித்துவ ஆட்சியாளர்கள், ஆங்கிலேயர் ஆட்சி, 30 வருடங்களுக்கு மேலான கொடூர போர் , வறுமை, வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச்சீற்றம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை எமது மக்கள் போராட்டங்களை மேற்கொண்டே வெற்றி கொண்டுள்ளனர்.
இனிமேல், இந்நாட்டில் போர் ஏற்பட வாய்ப்பே இல்லை. இந்நாட்டில் வாழும் அனைத்து அனைத்து இனங்களைக் கொண்ட மக்களும் நல்லிணக்கம், சகவாழ்வு ஆகியவற்றை முன்னிலைப் படுத்தியே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தேசிய கட்சிகளும் ஒன்றிணைந்த வகையில் செயல்படுகின்றன. இத்தகைய நிலையில் சமூகங்களுக்கிடையில், இனங்களுக்கிடையில், அரசியல் கட்சிகளுக்கிடையில் ஐக்கியம், சகவாழ்வு, நல்லிணக்கம் மேலோங்கி வருகின்றது.
பதுளை மாவட்டம் விவசாயம், பெருந்தோட்டத் தொழில் துறை ஆகியவற்றை முதன்மைபடுத்துகின்றன. மாவட்டத்தில் பல்வேறு குறைபாடுகள் மலிந்து காணப்படுகின்றன. அவற்றைத் தற்போதைய அரசு நிவர்த்தி செய்து வருகின்றது' என்றார். (ஐ)

## கடனை திருப்பிக் கேட்ட வர்த்தகர் மீது தாக்குதல்

கிளிநொச்சி,செப்.28
கடனைத் திருப்பிக் கேட்ட வர்த்தகரான பெண் மீது, இன்னொரு வர்த்தகர் போத்தலால் தாக்கினார். அதில் பெண் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் கிளிநொச்சி நகர்ப்பகுதியில் நேற்று நடந்தது.
கிளிநொச்சியில் அங்காடி வியாபாரம் செய்யும் வர்த்தகரான பெண், சக வர்த்தகரிடம் கொடுத்த கடனைக் கேட்கச் சென்றார். அதன் போது சக வர்த்தகர் பெண்ணைத் தேன் போத்தலால் தலையில் தாக்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது.
கிளிநொச்சியைச் சேர்ந்த 42 வயதையுடைய குடும்பப்பெண்ணே இவ்வாறு தாக்கப்பட்டார். படுகாயமடைந்த அவர் கிளிநொச்சி மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-101)

## தென்னை மரத்தில் ஏறியவர் தவறி விழுந்து உயிரிழப்பு

முல்லைத்தீவு,செப்.28
தேங்காய் பிடுங்க தென்னை மரத்தில் ஏறியவர் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.
இந்தத் துயரச் சம்பவம் முள்ளியவளை நாவற்காட்டுப்பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்றது.
படுகாயமடைந்த நிலையில் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், சிறிது நேரத்தில் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.
அதே இடத்தைச் சேர்ந்த லோகேஸ் வரதகுமார்(வயது 34) என்பவரே உயிரிழந்தவராவார்.
அவருக்கு ஏற்கனவே வலிப்பு நோய் இருப்பதால் தென்னை மரத்தில் ஏறிய நேரம் வலிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.
(ஐ-ரி3)



முள்ளியவளை தண்ணீரூற்று இ.த.க பாடசாலையில் கல்விக் கண்காட்சி நேற்று இடம்பெற்றது. பாடசாலை மாணவர்களின் திறன்களை ஊக்கிவிக்கும் நோக்கில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பாடசாலை மாணவர்களின் பல்வேறு திறன்களை வெளிக்கொணரும் பொருள்கள், மாணவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கி காட்சிப்படுத்தப்பட்டன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லை வலயக்கல்விப்பணிப்பாளர் உமாநிதி புவனராஜா கலந்து கொண்டார். (ஐ-ரி3)

# யாழ்ப்பாண நீதிமன்ற வளாகக் காட்சிகள்...



நீதிமன்ற பாதுகாப்பில் சிறப்பு அதிரடிப் படையினர், பொலிஸார்



வித்தியாவின் தாயார்

தீர்ப்பை எதிர்பார்த்து எதிரிகளாக வந்தபோது



குற்றவாளிகளாக சிறைக்கு புறப்படும் போது

(2-8,26,37,106)

## ஆஸி. இலங்கையின் கூட்டுறவை வெளிப்படுத்தும் ஒளிப்படக்கண்காட்சி



யாழ்ப்பாணம்,செப்.28

ஆஸ்திரேலியா மற்றும் இலங்கையின் கூட்டுறவை வெளிப்படுத்தும் ஒளிப்படக்கண்காட்சி

யாழ்ப்பாணம் கலாபவனத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதவர் பிரைஸ் ஹட்ஸிசன் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

"தொழில் நுட்பத்தை உள்ளடக்கியதாக சகல இலங்கையர்களுக்கும் சிறந்த தொழில் வாய்ப்புக்களையும் , சந்தர்ப்பங்களையும் பெண்களுக்குப் பெற்றுக் கொடுப்பதே எமது நோக்கமாக உள்ளது. இலங்கையில் கண்ணிவெடி அகழ்வு, வீடமைப்பு, பாடசாலை அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, சந்தை மீளமைப்பு, புதிய தொழில் வாய்ப்புக்கள் போன்றவற்றுக்கு ஆஸேஸ்திரேலியா பெரும் பங்களிப்பு வழங்கியுள்ளது. பல்வேறு கலாச்சாரங்களின் கலவையாகக் காணப்படும் ஆஸ்திரேலியாவில் இலங்கை மக்களின் பங்களிப்பின் ஒரு சிறிய மீள்நோக்கை அங்கு காட்சப்படுத்தப்பட்டுள்ள ஒளிப்படங்கள் எடுத்துக் காட்டும்" என்று ஆஸ்திரேலியத் தூதர் தெரிவித்தார்.

கண்காட்சியில் இலங்கையின் அபிவிருத்தியில் ஆஸ்திரேலியாவின் எதிர்கால ஒத்துழைப்புத் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

"இணைந்திருப்பதே சிறந்தது" என்ற தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி எதிர்வரும் முதலாம் திகதி வரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஐ-ரி2,8)

## சைட்டத்துக்கு எதிராக வவுனியாவில் ஊர்வலம்

வவுனியா,செப்.28

சைட்டம் தனியார் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் வவுனியா நகரில் நேற்று கண்டன ஊர்வலம் நடத்தினர்.

வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனை மருத்துவர் விடுதிக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம், ஹொறவப்பொத்தானை வீதியூடாக பஜார் வீதியைச்



சென்றடைந்து, மில் வீதியூடாக , சூசைப்பிள்ளையார் வீதிக்குச் சென்று, இரண்டாம் குறுக்கு வீதியூடாக வவுனியா பேருந்து நிலையத்தை அடைந்தது. அங்கிருந்து மணிக்கூட்டு சந்தியூடாக மீண்டும் வவுனியா பேருந்து நிலைத்தை அடைந்தது. "இலவச கல்வியைப் பாதுகாப்போம், சைட்டத்தை தடை செய் , ரயன் ஜெயலத்தை விடுதலை செய் , இலவசக் கல்வியையும் இலவச சுகாதாரத்தையும் அழிக்கும் சைட்டதை ரத்து செய்" என பல்வேறு வாகங்கள் எழுதப்பட்ட பாதாதைகளை மாணவர்கள் ஏந்தியிருந்தனர். ஊர்வலத்தில் அரச மருத்துவ அதிகாரி சங்கம், இலங்கை ஆசிரியர் அதிகாரிகள் சங்கம், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு , அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், வவுனியா மாவட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்தி சங்கம் என பல அமைப்புக்களின் பிரதிநிதிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(ஐ)



## ரோஹிங்யர்களை வெளியேற்றக்கோரி சிங்கள அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,செப்.28

ரோஹிங்யா முஸ்லிம்களை, இலங்கையில் இருந்து வெளியேற்றுமாறு கோரி சிங்கள அமைப்புகள் சில கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

சிங்கள அமைப்புகள் ஊர்வலமாகச் சென்று ஐ.நா. அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகம், ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமை அலுவலகம் ஆகியவற்றில் மனுக்களையும் கையளித்தன.

"இலங்கையின் குடிவரவு, குடியகல்வு சட்டத்தை மீறி இலங்கை வந்துள்ள ரோஹிங்யா முஸ்லிம் மக்களை நாட்டில் தங்க வைத்திருப்பது சட்ட விரோதமானது" என்று அந்த அமைப்புகள் கோசமிட்டன.

"ரோஹிங்யா முஸ்லிம்களைப் பாதுகாக்க அமைச்சர்கள் உட்பட முன்னணி அரசியலவாதிகள் தலையீடு செய்கின்றனர்.

கல்கிசையில் மாடி வீடுகளில் ரோஹிங்யா அவர்களைத் தங்க வைத்து ஆதரவு வழங்கியுள்ளனர்" என்று சிங்களே அமைப்பின் செயலாளர் அரம்பேபொல ரதன தேரர் தெரிவித்தார்.

(ஐ)

## காஸ்...

யாழ்ப்பாணம், செப். 28

நாடு முழுவதும் சமையல் எரிவாயுவின் விலை கடந்த ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு முதல் 110 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. எனினும் வடக்கு மாகாணத்தில் விலைக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது என வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தால் கொழும்பு அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தை அடுத்து இவ்வாறு விலைக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

"போர்க்காலத்தில் தெற்கிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்படும் சமையல் எரிவாயுக் கொள்கலன்கள் ஓமந்தை, முகமாலைச் சோதனைச் சாவடிகளில் சோதனைக்காக இறக்கி ஏற்றப்பட்டு வந்தன. இதனால் அதிக செலவீனம் ஏற்பட்டது. எனவே எரிவாயுவின் விலை தெற்கிலும் பார்க்க குறிப்பிட்டளவு வீதம் அதிகரித்துக் காணப்பட்டது.

நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் தெற்கிலிருந்து வடக்குக்கு வருகின்ற பொருள்கள் சோதனையிடப்படுவதில்லை. முன்பு கூறப்பட்ட செலவீன விடயங்களை இப்போது கருத்தில் எடுக்கத் தேவையில்லை. எனவே அந்த செலவீனங்கள் இல்லாமையால் வடக்குக்கான சமையல் எரிவாயுக் கொள்கலனின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்" என யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் முன்னாள் மாவட்ட இணைப்பதிகாரி தனசேகரன் வசந்தசேகரன் மாவட்டச் செயலர் ஊடக கொழும்பு அரசுக்கு எழுத்துமூலமாக கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இந்த முயற்சியின் பயனாக யாழ்ப்பாண மாவட்டம் மட்டுமன்றி வடக்கு முழுவதும் சமையல் எரிவாயு கொள்கலனின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. நாடுமுழுவதும் 12.5 கிலோகிராம் எடைகொண்ட சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவுமுதல் 110 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. எனினும், வடக்கில் அந்தவிலை அதிகரிப்பில் இருந்து கணிசமான தொகை குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 92 ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 25 ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 24 ரூபாவும், மன்னார் மாவட்டத்துக்கு 29 ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கு 19 ரூபாவும், விலைக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த விலைக்கழிப்பு நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(வ-ய-21,8)

## சுவிஸ்...

இளஞ்செழியன் சுட்டிக்காட்டினார்.

வித்தியா படுகொலை வழக்கின் தீர்ப்பை மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரடங்கிய தீர்ப்பாயம் வழங்கியது. அதன்போது 345 பக்கங்களைக் கொண்ட தனது தீர்ப்பின் தொகுப்பை மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் வழங்கினார். அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீர்ப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத் தீர்ப்புக்கள், ஐ.நா. தீர்ப்பாயங்களின் தீர்ப்புக்கள், மனித உரிமை ஆயங்களின் தீர்ப்புகள் , உகண்டா தீர்ப்பு , போர்க்குற்ற தீர்ப்புக்கள், இந்திய உயர் நீதிமன்ற தீர்ப்புக்கள் என்பவற்றைச் சுட்டிக்காட்டியும் , இலங்கையில் கிருஷாந்தி , சரத் அம்பேபிட்டிய, பண்டாரநாயக்க உள்ளிட்ட ட்ரயல் அட் பார் தீர்ப்புக்களை சுட்டிக்காட்டித் தீர்ப்பு எழுதப்பட்டுள்ளது.

2, 3, 5, 6 ஆகிய எதிரிகளுக்கு எதிராக கண்கண்ட சாட்சியங்கள் உள்ளன. அத்துடன் மரபணு பரிசோதனை அறிக்கையில் மாணவியின் உடலில் இருந்து மீட்கப்பட்ட முடியானது, மாணவியின் உடையது அல்லது தாயினுடையது அல்லது 1, 2 மற்றும் 3 ஆம் எதிரிகள் தாய் வழி உறவுள்ளவர்களினதாக இருக்க வேண்டும் என 53ஆவது சாட்சியமான ஜின்டெக் நிறுவனத்தின் மூத்த விஞ்ஞானி றுவான் இளையபெருமா சாட்சியம் அளித்துள்ளார்.

மாணவியின் உரோமம் அவரின் உடலில் உதிர்ந்த நிலையில் இருக்க சந்தர்ப்பம் குறைவு. தாயின் உரோமம் அந்த இடத்தில் வந்திருக்க முடியாது. எனவே அது 2ஆம் , 3ஆம் எதிரிகளினுடையதாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் , கண்கண்ட சாட்சியங்களின் சாட்சியத்தின் பிரகாரம் முதலில் பெரியாம்பி எனும் 6ஆம் எதிரி வன்புணர்ந்தார். பின்னர் 5ஆவதும் , 2 மற்றும் 3ஆம் எதிரிகள் தொடர்ச்சியாக வன்புணர்ந்தனர் என சாட்சியம் அளித்துள்ளனர்.

அவ்வாறு எனில் இறுதியாக வன்புணர்ந்த எதிர்களின் உரோமம் மாணவியின் உடலில் காணப்பட்டு இருக்கலாம்.

### சுவிஸ்குமார் தலைமையில் சதித்திட்டம்

4, 8, மற்றும் 9ஆம் எதிரிகள் 12ஆம் திகதி ஆலடிச் சந்தியில் 5 மற்றும் 6ஆம் எதிரிகளுடன் வெள்ளை நிற வாகனத்தில் இருந்துள்ளனர். அதன் பின்னர் சுவிஸ்குமார் தலைமையில் 4, 8ஆம் எதிரிகள் கொழும்புக்கு சென்றுள்ளனர்.

அந்தக் குழு சம்பவ தினமான 13ஆம் திகதி சி.சி.ரி.வி கமரா உள்ள இடங்களில் நடமாடி உள்ளனர். அது அவர்களின் சதித்திட்டம். தாம் குற்றம் நடந்த சமயம் கொழும்பில் நின்றமைக்கான சாட்சியங்களை அவர்கள் உருவாக்கியுள்ளனர். எனினும் அவர்கள் 12ஆம் திகதி கொழும்பில் நின்றமைக்கான எந்த ஆதாரத்தையும் சாட்சியத்தையும் மன்றில் முற்படுத்தவில்லை.

### வித்தியா யார்?

கொழும்பில் நின்ற சுவிஸ்குமார் தலைமையில் 4, 7 மற்றும் 8ஆம் எதிரிகள் புங்குடுதீவு வருகின்றார்கள். அவர்கள் அனைவரும் சாட்சிக் கூண்டில் ஏறி சாட்சியம் அளிக்கையில் தங்களுக்கு வித்தியாவை யார் என்று தெரியாது , என்ன நிறம் என்று தெரியாது ,வித்தியா யார்? எனக் கேட்டார்கள். யாரென்றே தெரியாத வித்தியாவின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள புங்குடுதீவு வந்தார்களா ? இல்லை இவர்கள் புங்குடுதீவு வந்ததன் நோக்கம் இந்தக் கொலையின் முக்கிய குற்றவாளிகள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுவிட்டனர். ஏனைய இருவர் எந்நேரமும் கைது செய்யப்படலாம். ஆகையால் அது தொடர்பில் நேரில் அறிந்து கொள்ளவே புங்குடுதீவு வந்துள்ளார்கள்.

அப்படி வந்தவர்கள் 17ஆம் திகதி வரையில் புங்குடுதீவில் நடமாடி உள்ளனர். அந்த நிலையிலேயே 4, 5, 6, 7, மற்றும் 8ஆம் எதிரிகள் 17ஆம் திகதி ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அன்றைய தினம் இரவு 9ஆவது எதிரியான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் ஊர் மக்களால் பிடித்து மின் கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டு இருந்தார்.

### விஜயகலா எம்.பி. சுவிஸ்குமாரை காப்பாற்றிவிட்டார்

அந்நேரம் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் இரவு 11 மணியளவில் அந்த இடத்துக்குச் சென்று , சுவிஸ்குமாரை அடிக்க வேண்டாம் என்று காப்பாற்றினார். அது நல்ல விடயம்.

ஆனால் அங்கே போன அவர் முதலில் கேட்ட கேள்வி "நீ சசியின் அண்ணாவா?" என. யார் அந்த சசி இந்த வழக்கில் அன்றைய தினம் மாலை 3 மணிக்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு கொண்டிருந்த நபர்.

சுவிஸ்குமாரை அடிக்க வேண்டாம் என மக்களிடம் இருந்து காப்பாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், அந்த இடத்தில் 2 மணி நேரம் காத்திருந்து சுவிஸ்குமாரை பாதுகாப்பாக ஒப்படைத்துவிட்டுச் சென்றுள்ளார். இந்த விடயங்களை சுவிஸ்குமாரே தீர்ப்பாயத்திடம் கூறியுள்ளார்.

அதன் பின்னர் புங்குடுதீவுக்கு சட்டபீடாதிபதி வி.ரி.தமிழ்மாறன் உடன் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் சு.சிறிகஜன் மற்றுமொரு சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோர் சென்ற வேளை சுவிஸ்குமார் சிறிகஜனிடம் சரணடைந்துள்ளார்.

### பொலிஸார் முறைகேடு

சரணடைந்த சுவிஸ்குமாரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு வந்ததாக சட்டபீடாதிபதி தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். அங்குதான் தான் பொலிஸாரின் முறைகேடு காரணமாக சுவிஸ்குமார் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சுவிஸ்குமார் விடுவிக்கப்பட்டதை அறிந்த மக்கள் நடாத்திய போராட்டத்தின் பலனாக சுவிஸ்குமார் மீண்டும் 19ஆம் திகதி வெள்ளவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவ்வாறு கைது செய்யப்பட்ட சுவிஸ்குமாரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்துமாறு அப்போதைய ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குயிண்டேஸ் பெரேராவுக்கு , மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கூறிய போது, அவர் அதனைச் செய்யவில்லை. தனது தவறை அவரே இந்த மன்றில் வெளிப்படையாகக் கூறினார்.

### சிறையில் 2 கோடி ரூபா பேரம் பேசப்பட்டது

அடுத்து சுவிஸ்குமாருக்கும் இப்ரான் என்பருக்கும் இடையில் சிறைச்சாலையில் 2 கோடி ரூபா தொடர்பில் பேரம் பேசப்பட்டுள்ளது. இப்ரான் தனது சாட்சியத்தில் சுவிஸ்குமார் 2 கோடி தருவதாகக் கூறியதாக கூறினார். சுவிஸ்குமார் தனது சாட்சியத்தில், இப்ரான்தான் தன்னிடம் 2 கோடி ரூபா கேட்டு மிரட்டியதாகக் கூறினார்.

இங்கே இப்ரான் 2 கோடி ரூபா கேட்டு மிரட்டியிருந்தால் , ஏன் சுவிஸ் குமார் தன்னுடன் இருந்த ஏனைய எட்டு பேருக்கும் அதனை கூறவில்லை? இந்த வழக்கில் அவரின் கூடப் பிறந்த சகோதரன் , ஒன்று விட்ட சகோதரன் , மனைவியின் சகோதரன் (மச்சான்) ஆகியோர் அவருடன் சிறையில் இருக்கும் போதுகூட ஏன் அவர் அதனை அவர்களிடம் கூறவில்லை? அதேபோன்று சிறையில் அவரைப் பலதடவைகள் அவரின் மனைவி மகாலட்சுமி சந்தித்து உள்ளார். அப்போது கூட இப்ரான் காசு கேட்டு மிரட்டுவதாக கூறவில்லை.

### இது சித்திரவதை வழக்கல்ல

இந்த வழக்கில் எதிரிகள் தரப்பு சட்டத்தரணிகள் இது என்ன வழக்கு என்பதனை மறந்துவிட்டார்களோ? என எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் அவர்கள் தரப்பில் 200க்கும் மேற்பட்ட பக்கங்களில் எதிரிகள் சித்திரவதை புரியப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

எதிரிகளை ஆடைகளை களைந்து கட்டி தூக்கி சித்திரவதை புரியப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஆனால் இந்த வழக்கில் மாணவியின் ஆடைகள் களையப்பட்டு , கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு, மாணவியின் உள்ளாடையை வாய்க்குள் திணித்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இங்கே சித்திரவதை தண்டனைக்கு உரிய குற்றமாக உள்ள போதிலும் , இந்த எதிரிகள் சித்திரவத்தைக்கு உள்ளானார்கள் என்பதனை ஆதாரமாக மன்றில் கூறமுடியவில்லை. சட்ட மருத்துவ அதிகாரியின் மருத்துவ அறிக்கையில் எதிரிகள் சித்திரவதைக்கு உள்ளானதாகக் குறிப்பிடப்படவில்லை.

### கொலையை இராணுவமோ கடற்படையோ செய்யவில்லை

இந்தக் குற்றத்தை இராணுவம்தான் செய்தது என 2ஆம் எதிரி கூறினார். 4ஆம் எதிரி கடற்படைதான் செய்தது எனக் கூறினார். இந்தக் குற்றத்தை இராணுவமோ , கடற்டையோ செய்யவில்லை. ஏனெனில் இந்த வழக்கில் சாட்சியங்களான தனுராம் , பாலசந்திரன், சதானந்தரூபிணி ஆகியோர் சம்பவ இடத்துக்கு அருகில் எதிரிகளை கண்டதாக மாத்திரமே சாட்சியமளித்துள்ளனர். எந்த இடத்திலும் தாம் சம்பவ இடத்துக்கு அருகில் இராணுவத்தையோ , கடற்படையையோ கண்டதாக அவர்கள் சாட்சியமளிக்கவில்லை.

ஒருவரைக் கொலை செய்தால் ஒன்றில் எரிப்பார்கள் , அல்லது புதைப்பார்கள் அல்லது மறைப்பார்கள் ஆனால் , இவர்கள் கொலை புரிந்த பின்னர் வீதியில் இருந்து 15 அடி தூரத்தில் அரலி பற்றைக்குள் சடலத்தை கொடூரமான முறையில் கட்டிப்போட்டுள்ளனர்.

### விசாரணைகளை திசை திருப்பச் சதி

அதன் ஊடாக மாணவியை தேடி ஊரவர்கள் வரும் போது , அந்த நிலையில் சடலத்தை கண்டால் அவர்கள் வேறு விதத்தில் சிந்திப்பார்கள் என கருதியே அவ்வாறு செய்துள்ளார்கள். அதன் ஊடாக வழக்கின் விசாரணைப் போக்கை மாற்ற எதிரிகள் முயற்சித்துள்ளார்கள்.

இந்த வழக்கில் மரபணு சோதனைக்கு அனுப்பட்ட சான்று பொருள்கள் உரிய முறையில் பாதுகாக்கப்படவில்லை.

### வானூர்திச் சீட்டை ஏன் புதுப்பிக்கவில்லை?

சுவிஸ்குமார் 2015 மே 7ஆம் திகதி சுவிஸ் நாட்டுக்கு செல்ல இருந்ததாகவும் , வவுனியாவில் நண்பரின் இறுதிச் சடங்குக்கு சென்றுவிட்டுச் செல்லும் போது வானூர்தியைத் தவறவிட்டதாகவும் சாட்சியம் அளித்திருந்தார்.

அன்றைய தினம் வானூர்தியைத் தவறவிட்டு இருந்தால், மீண்டும் வானூர்திச் சிட்டைத் திகதியை புதுபித்து இருக்க வேண்டும். ஆனால் அவர் 19ஆம் திகதி வெள்ளவத்தையில் கைது செய்யப்படும் வரையில் வானூர்திச் சிட்டை புதுப்பிக்கவில்லை.

### தடயவியல் பிரிவு பொறுப்பற்று செயற்பட்டது

அதேவேளை பாடசாலைக்கு சென்ற மாணவி கடத்தப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். அங்கு தடயவியல் பரிசோதனைக்கு, தடயவியல் பிரிவு கான்ஸ்டபிளே சென்றுள்ளார். அந்தப் பிரிவில் பொலிஸ் பரிசோதகர் , உப பொலிஸ் பரிசோதகர் என அதிகாரி தரத்தில் உள்ளோர் பரிசோதனைக்கு செல்லாது கான்ஸ்டபிளை அனுப்புகின்றனர். இது அவர்களின் பொறுப்பற்ற செயலையே காட்டுகின்றது.

### விசாரணைகளை பொலிஸ் நாசம் செய்தது

இந்த வழக்கு விசாரணைகளை பொலிஸார் நாசம் செய்து வைத்த நிலையில் அதனை பொறுப்பேற்ற குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் உரிய முறையில் வழக்கை முன்னெடுத்துள்ளனர். குறிப்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்கள பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வாக்கு பாராட்டுக்களை தெரிவிக்கிறேன்.

அத்துடன் இந்த வழக்கைத் திறமையாக நியாயமாக வழக்கு தொடுனர் தரப்பினர் நெறிப்படுத்தியிருந்தனர். அதில் குறிப்பாக பிரதி மன்றாடியார் அதிபதி குமாரரட்ணத்துக்கும் எனது பாராட்டுக்கள். இந்த வழக்கை ஆரம்பத்தில் இருந்து அறிக்கையிட்டு மாணவிக்கு நீதி கிடைக்க போராடிய ஊடகங்களுக்கும் எனது நன்றிகள்.

வழக்கில் 1ஆம் மற்றும் 7ஆம் எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கபடாத நிலையில் அவர்களை நிரபராதிகள் என கருதி விடுவிக்கிறேன் - என்றார்.

(வ-37,8,26)

## குழந்தையின்...

டன் அதன் சடலத்தை நேற்று புதன் கிழமை மாலை தோண்டி எடுத்தனர். சந்தேகத்தின் அடிப்படையில் குழந்தையின் தந்தையையும் பொலிஸார் கைது செய்தனர்.

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை பொலிஸ் பிரிவில் உள்ள பெற்கேணி கிராமத்தில் வசிக்கும் இளம் குடும்பம் ஒன்றின் மகனான ஒன்றரை வயதுடைய சரூன் கேலம் என்ற குழந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் வீட்டில் உயிரிழந்தது.

இந்த நிலையில் குழந்தையின் சடலத்தை பெற்றோர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லாது அன்றைய தினம் மாலை பெற்கேணி முஸ்லிம் மையவாடியில் அடக்கம் செய்துள்ளனர். எனினும் குழந்தையின் உயிரிழப்பில் சந்தேகம் கொண்டவர்கள் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு இந்த விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளனர்.

சிலாபத்துறை பொலிஸார் , மன்னார் நீதிவான் மன்றின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டு சென்றதோடு, குறித்த சடலத்தை தோண்டி எடுக்க அனுமதியையும் கோரியிருந்தனர். மன்னார் நீதிவானின் உத்தரவுக்கு அமைவாக நேற்று புதன் கிழமை மாலை குழந்தையின் சடலம் தோண்டி எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பெற்கேணி கிராமத்திற்குச் சென்ற மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா, நேற்று மாலை 3 மணியளவில் உயிரிழந்த குழந்தையின் வீட்டிற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். இதன் போது சிறப்பு தடவியல் பொலிஸார் சென்று தடயங்களை பரிசோதனை செய்தனர்.

அதனைத்தொடர்ந்து பொற்கேணி முஸ்லிம் மையவாடிக்குச் சென்ற மன்னார் நீதிவான், சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் பொலிஸார் முன்னிலையில் குழந்தையின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான், குறித்த சடலத்தை மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும், உடற்கூற்றுப் பரிசோதனை நடத்துமாறும் உத்தரவிட்டார். இதே வேளை, உயிரிழந்த குழந்தையின் தந்தையை சந்தேகத்தின் பெயரில் சிலாபத்துறை பொலிஸார் கைது செய்தனர். (வ-56)

## விக்கி...

எவ். தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் இருவரும் ஒருமித்துப் பயணிக்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராசசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் தியாக தீபம் திலீபனின் நினைவுநாள் நிகழ்வு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களோடு இருந்தவர்கள், நாங்கள் வளர்த்தவர்கள், நாங்கள் நம்பி உருவாக்கியவர்கள் எல்லாம் வேறு திசைகளில் செல்லக் கூடாது. நான் மிகவும் விநயமாக எமது வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் ஐயாவிடம் கேட்டுக் கொள்கின்றேன். அவர் அரசியலுக்கு வரவேண்டும் என்று விரும்பியவர்களிலே நானும் ஒருவன். அவரது பெயர்தான் முதல்வர் பதவிக்கு வர வேண்டும் என்கின்ற தீர்மானத்தை முன்மொழிந்தவன் நான். அந்த உரிமையோடு ஐயா விக்னேஸ்வரனைக் கேட்கின்றேன், தயவு செய்து இப்போது இருக்கின்ற சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு நீங்கள் குறிப்பிட்ட தலைமை என்கின்ற அந்த வார்த்தைகளுக்கு நீங்களே மதிப்பளித்து எங்களோடு ஒருமித்துப் பயணிக்க வேண்டும்.

அதுபோல் அண்ணன் சுரேஸ் பிரேமச்சந்திரன், நீங்கள் எமது தலைவரோடு சேர்ந்து வேலை செய்கின்ற போது அவரின் சிறப்பு, சிந்தனை அத்தனையும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். நீங்கள் அவரை வாழ்த்தி இருக்கின்றீர்கள், போற்றி இருக்கின்றீர்கள். என்ன எமது விதியோ தெரியவில்லை, நீங்கள் எங்களை விட்டு தள்ளி நிற்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலமை ஏற்பட்டிருக்கின்றது. இந்தத் தருணத்திலேயாவது நாங்கள் ஒன்று சேர வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டம் வந்த போது விடுதலைப் புலிகளும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற போது நீங்கள்தான் யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு அதனை இப்போது ஏற்றுக் கொள்வோம் என்று சொல்லி ஒரு அரசையே கையில் எடுத்து ஆட்சி செய்தவர்கள். நீங்கள் வெறுமனேவிட்டு விலகிவிடக் கூடாது. இப்போது இருக்கின்ற இந்தச் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு நீங்களாக விலகிச் செல்றீர்கள். உங்களை நாங்கள் அழைக்கின்றோம். நீங்களாக வந்து சேர வேண்டும் என்றார். (வ-5)

(மற்றொரு செய்தி பக்கம் 9)

## சின்மயாமிசனில் வித்தியாரம்பம்

யாழ்ப்பாணம் சின்மயா மிசனில் விஜயதசமி தினமான 30ஆம் திகதி நாளைமறுதினம் மதியம் 12 மணிக்கு குழந்தைக ளுக்கு வித்தியாரம்பம் செய்துவைக்கப்படும். மற்றும் சமஸ்கிருத அக்சர ஆரம்பமும் இடம்பெறும். வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா வினால் வித்தியாரம்பம் செய்துவைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (ய)

## வல்வெட்டியில் வாணிவிழா

யாழ்ப்பாணம், செப்.28
வல்வெட்டித்துறை வேவில் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் வாணிவிழா இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும்.
தலைவர் ச.ஸ்ரீதர்சன் தலைமையில் இடம்பெறும் விழாவில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கெ.சிவாஜிலிங்கம் கலந்து கொள்வார் எனத் தெரிவிக் கப்பட்டது. (ய-ரி)

## வீணாகான குருபீடத்தில் ஏடு தொடக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.28
சித்தன்கேணி வீணாகான குருபீடத்தில் நாளைமறு தினம் சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு சரஸ்வதி பூசை ஏடுதொடக்கல், மற்றும் மாணவர்க ளுக்கான ஆசீர்வாத நிகழ்வும் நடைபெறும் என்று சிவஸ்ரீ.சபா. வாசுதேவக்குருக்கள் தெரிவித்தார்.
இதன்போது ஏடு தொடக்கல், சரஸ்வதி வித்தியா நூல் அணிவித்தல், குருகுலநாள் வகுப்பு, ஆசீர்வாதம் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ய-ரி)

## வாணிவிழா

யாழ்ப்பாணம் .ப.நோ.கூ.சங்கத்தின் வாணிவிழா இன்று வியாழக்கிழமை மு.ப.9.30 மணிக்கு சங்கத் தின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும். சங்கத் தின் தலைவர் என். எஸ்.சத்தியதாசன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் சங்கத்தின் பொதுச்சபைப் பிரதிநிதிகளையும் பங்குபற்றுமாறு யாழ்ப்பாணம் ப. நோ.கூ.சங்கத்தால் அழைக்கப்பட்டுள்ளது. (ய-51)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 60 | 60 | 60 |
| கத்தரி | 140 | 180 | 140 | 180 | 140 |
| மரவள்ளி | 80 | 80 | 60 | 60 | 60 |
| பயிற்றை | 60 | 100 | 100 | 100 | 120 |
| பாகல் | 140 | 400 | 200 | 400 | 200 |
| க.கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 240 | 140 | 120 | 120 |
| சி.வெங்காயம் | 250 | 140 | 200 | 240 | 180 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 40 |
| தக்காளி | 120 | 160 | 120 | 140 | 140 |
| வாழைக்காய் | 80 | 100 | 90 | 60 | 80 |
| கீரை | 50 | 30 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 30 | 30 |
| ப.மிளகாய் | 280 | 280 | 280 | 120 | 260 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 80 |
| கோவா | 140 | 100 | 120 | 80 | 100 |
| வெண்டி | 80 | 70 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 150 | 140 | 200 | 140 | 180 |
| தேங்காய் | 70 | 90 | 80 | 90 | 80 |
| உ.கிழங்கு | 100 | 120 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 | 250 | 200 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 15 | 15 |
| கறிமிளகாய் | 140 | 120 | 160 | 160 | 180 |
| கரட் | 200 | 180 | 100 | 120 | 180 |
| முருங்கைக்காய் | 160 | 200 | 200 | 200 | 120 |

# கடலமைகள் பிடித்த மீனவர் 7 நாள்கள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், செப். 28
சட்ட விரோதமான முறையில் கடலாமை களை பிடித்த மீனவரை 7 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்கா வற்றுறை நீதிவான் மன்று உத்தரவிட்டது.
வேலணை அம்பிகை நகர் பகுதியில் நேற்றையதினம் சட்ட விரோதமான முறையில் படகில் சென்று கடலாமைகளை பிடித்துக்கொண்டு இருந்த மீனவரைக் கடற்படையினர் கைது செய்தனர். அவர் யாழ்ப்பாண மாவட்ட நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டார்.
மீனவரை ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் அதிகாரிகள் முற்படுத்தினர். அத்துடன், மீனவரிடம் கைப்பற்றப்பட்ட இரண்டு கடலாமைகள் மற்றும் படகு என்பனவும் மன்றில் பாரப்படுத்தப்பட்டன.
மீனவரை 7 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டார். (வ-8)

## யாழ்.நகர அபிவிருத்தி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.28
யாழ்ப்பாணக் குடாநாட்டின் நகர அபிவிருத்தித் திட்டம் பற்றிய கலந்துரையாடல் இன்று வியா ழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யூரோ வில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
யாழ்ப்பாணம் முகாமையாளர் சம்மேளனம், வடக்கு பிராந்திய இலங்கை பொறியியலாளர் நிறுவகம் ஆகியன இதனை ஏற்பாடு செய் துள்ளன.
இதில் வடக்கு மாகாண நகர அபிவிருத்தி சபை யின் பணிப்பாளர் வை.ஏ.ஜி.கே.குணதிலக கலந்து கொள்வார். சமூக ஆர்வலர்கள் அனை வரும் கலந்து கொள்ளுமாறும் நிகழ்ச்சி ஒருங் கிணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ய-ரி)

## செம்பியன்பற்று பாடசாலையில் இன்று பரிசில்நாள் நிகழ்வு

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று அ.த.க.பாட சாலையின் பரிசில்நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மு.ப.9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.
அதிபர் சு.கணேஸ்வரன் விழாவுக்குத் தலைமை தாங்குவார்.
முதன்மை விருந்தினராக மருதங் கேணி கோட்டக்கல்வி அலுவலர் அ.திர வியராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்விவலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி வளர்மதி அம்பிகைபாகன், வித்தியாலய பழைய மாணவியும் விழா அனுசரணையாள ருமான திருமதி பிரியதர்சினி சிவகுமார் ஆகியோரும், மதிப்புறு விருந்தினராக வித்தியாலய பழைய மாணவர் சங்கப் போசகர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வ ரனும் கலந்து கொள்வர். (ய-9)

## கரவெட்டியில் கணினிப் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.28
கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் கணினிப் பயிற்சிநெறிகள் ஆரம்பமாகவுள்ளன.
இதற்காகப் பதிவுசெய்து கொண்ட பயனாளி களுக்கான பயிற்சி நெறிகள் இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்எனப் பிரதேச செயலா ளர் தெரிவித்துள்ளார். (ய)

## அலைபேசி திருடியவர் விளக்கமறியலில்

18 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு அலைபேசிகளைத் திருடிய இளை ஞரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.
மட்டுவில் பகுதியில் உள்ள வீடொன்றில் அலைபேசிகள் திருடப்பட்டன என்ற முறைப்பாட்டினையடுத்து பொலிஸார் இளைஞர் ஒருவரைக் கைதுசெய்தனர்.
இளைஞர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு வழங்கப்பட்டது. (ய-9)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 800 |
| நண்டு | 400 | 400 | 500 | 300 |
| கணவாய் | 800 | 600 | 800 | 800 |
| பாரை | 600 | 500 | 600 | 700 |
| சுறா | 600 | 700 | 800 | 800 |
| சீலா | 400 | 400 | 400 | 500 |
| விளை | 600 | 400 | 500 | 600 |
| முரல் | 350 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 350 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 300 | 300 |
| ஒரா | 350 | 300 | 450 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 200 |
| சூடை | 150 | 100 | 160 | 100 |
| ஒட்டி | 200 | 200 | 200 | 250 |
| திருக்கை | 350 | 200 | 400 | 300 |
| மதனம் | 250 | 150 | 200 | 300 |
| கொய் | 150 | 70 | 80 | 50 |
| பாலை | 150 | 200 | 400 | 300 |
| வாளை | 150 | 200 | 300 | 250 |

## மீசாலையில் கலந்துரையால்

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அடையா ளப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப் பட்டு வருகின்றன.
அதன்பிரகாரம் நகரசபையின் முதலாம் வட்டாரமான மீசாலை மேற்கு (ஜே319 கிராம அலுவலர் பிரிவு) வட்டாரத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு விக்னேஸ்வரா மகா வித்தியா லயத்தில் கலந்துரையா டல் நடத்தப்படவுள்ளது. இப்பகுதி மக்களை இதில் பங்குபற்றி வேலைத்திட்டங்களை அடையா ளப்படுத்தி முன்னுரிமைப்படுத்துமாறு சபையின் செயலாளர் கா. சண்முகதாசன் அறிவித்துள் ளார்.
இதுவரை கல்வயல் (4), கோயிற்குடியிருப்பு (8), சாவகச் சேரி வடக்கு (10), நுணாவில் கிழக்கு (7), மண்டுவில் (3), மீசாலை கிழக்கு (2), சங்கத் தானை (11) சாவகச்சேரி நகரம் (9) ஆகிய எட்டு வட்டாரங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இனங்காணப்பட்டு முன்னுரிமைப்ப டுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக் கப்பட்டது. (ய-9)

## நெல்லியடி ம. கல்லூரியில் தொழில்நுட்ப கூடம் திறப்பு

யாழ்ப்பாணம், செப்.28
நெல்லியடி மத்திய கல்லூரியின் தொழில்நுட்ப ஆய்வுகூட திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் இடம் பெறும்.
முதன்மை விருந்தினராக கல்வி இராஜங்க அமைச்சர் இரா தாகிருஷ்ணன் கலந்து கொண்டு தொழிநுட்பகூட கட்டடத்தைத் திறந்து வைப்பார். (ய-8)

## கற்கோவளத்தில் சாயி அவதார தினம்

யாழ்ப்பாணம், செப்.28
தும்பளை கற்கோவளம் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று வியா ழக்கிழமை மாலை 4.30 மணிக்கு சீரடி சாயிபாபாவின் அவதார தின நிகழ்வு நடைபெறவுள்ளது. இதில் சீரடி பாபாவுக்கு அபிசேகம், சிறப்பு பூசை வழிபாடு மற்றும் தெய்வீக இசை இடம்பெறும். அன்றைய தினம் அடியவர்கள் சாயி நாதனுக்கு பால் அபிசேகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ய-173)

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு தண்டம்

பருத்தித்துறை,செப்.28
மதுபோதையில் வாகனம் செலுத்திய மருத்துவ ருக்கு நேற்று பருத்தித்துறை நீதி மன்றில் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
பருத்தித்துறைப் பகுதியில் வைத்து கடந்த திங்கட்கிழமை அதிகாலை மதுபோ தையில் வாகனம் செலுத்தியதாக மருத்துவர் ஒருவரும், அவருடன் இருந்த இன்னுமொருவரும் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.
இவர்கள் இருவரும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
வழக்கை விசாரணை செய்த நீதிவான் மதுபோதையில் வாக னம் செலுத்தியதற்கு 10 ஆயிரம் ரூபாவும் அலை பேசியில் ஆபாசப் படம் வைத்திருந்தமைக்கு ஆயிரத்து நூறு ரூபாவும் தண்டம் விதித்தார்.
அத்துடன் அலை பேசியில் ஆபாசப் படங்கள் இருப்பதால் அதிலுள்ள அனைத்து விடயங்களையும் முழுவதுமாக அழிக்குமாறும் கட்டளையிட்டார். (ரி2-26)

## மாகாண சபைக்குத் தெரியாமல்

# கொழும்பின் ஆதரவுடன் வடக்கில் சுற்றுலா மையங்கள் அமைப்பு

### எச்சரிக்கின்றார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், செப்.28
வடக்குமாகாணத்தின் சுற்றுலாநடவடிக்கைகள், சுற்று லாத்துறையுடன் சம்பந்தப்படாத பாதுகாப்புத் தரப்புக்கள் மற்றும் வெளியில் இருந்து வந்துள்ள தனியார் எனப் பலரின் கைகளில்இப்போதுதவழ்ந்துகொண்டிருக்கின்றன. இதனால் எமது சுற்றுலா வருமானங்கள் குறிப்பிட்ட சிலரின் கைகளுக்கு அல்லது வேறு பிரிவினருக்கு மேலதிக வருமானமாகப் போய்ச்சேரும் நிலை யே காணப்படுகின்றது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் கடந்த திங்கள் திங்கட்கிழமை நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் சுற்றுலா மாநாடு குறித்து முதல்வர் அனுப்பி வைத்த அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டதாவது, சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரக் கூடிய மணற்பாங்கான பல கடற்கரைகள், சுற்றுலா மையங்கள் கவனிப்பார் அற்று புதர் மண்டிக் கிடக்கின்றன. சுற்றுலாத் துறையை முறையாகச் சீரமைத்து சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய மீள் கட்டுமானங்களுடன் சுற்றுலா மையங்களை மீள் பொலிவுறச்செய்வதன் மூலம் வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறை வருமானத்தை உயர்த்துவதுடன் அதனோடிணைந்தஉள்ளூர்உற்பத்தியாளர்களின் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யலாம்.

உபதயாரிப்புக்களான உணவுவகைகள், உள்ளூர் இனிப்பு வகைகள் மற்றும்வடபகுதிக்கே உரித்தான ஒடியல், பனாட்டு போன்ற பனை உற்பத்திகள் ஆகியவற்றுக்கு நல்ல கிராய்க்கி ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. எமது கடலுணவுகள் அவற்றின் சுவையின் நிமித்தம் பிரசித்தி பெற்றுள்ளன. வடக்கு மாகாணசபை ஆரம்பிக்கப் பட்ட பின்னர் கடந்த 3 ஆண்டு களில் சுற்றுலா தொடர்பான பல வேலைத் திட்டங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக முன்னெடுத்திருக்கின்றோம்.

எனினும் இத் துறையை சீராக முறையான தந்திரோபாயத் திட்டங்களுடன் முன்னெடுத்துச் செல்வதற்கு நிதிப் பற்றாக்குறை ஒரு பெரும் பிரச்சினையாக எம்மிடையே காணப்படுகின்றது.

எமது பிராந்தியத்தில் இருக்கும் மரபுரிமைப்பொருள்கள்பலசூறையாடப்பட்டு வருகின்றன. கோயிற் சிலைகள் காணாமல் போவதை வெறும் களவு என்று கொள்ள முடியாதிருக்கின்றது. இச் சிலைகள் கடத்தப்பட்டு பல கோடி ரூபாய்களுக்குக்களவாக விற்கப்பட்டு வருகின்றன. எனவே எமது கோயில் சொத்துக்கள், சிலைகள், மரபுரிமைப் பொருள்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கான சட்ட திட்டங்களை இயற்றி வருகின்றோம்.

பலாலி விமானத் தளம், காங்கேசன் துறை கடற்படைத்தளம் ஆகியன சுற்றுலாவின் பொருட்டுசீரமைக்கப்பட்டு அத னூடாக வான், கடல் வழிப் போக்குவரத்து திறக்கப்பட வேண்டிய அவசியத்தை அறிந்து அது சம்பந்தமாகவும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்.

கொழும்பு அரசின் உதவியுடன் எமக்குத் தெரியாமல் சுற்றுலா மையங்களை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மக்கள் அவதானமாக இருத்தல் அவசியம். எனவேதான் எமது பகுதிகளின் பாரம்பரியத்துக்கும் சூழலுக்கும்கலைகலாசாரத்துக்கும் ஏற்றவாறு புதிய சுற்றுலாக் கலாசாரம் ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இதற்குஐக்கியநாடுகளின்நிலையான அபிவிருத்திக்கான நோக்குகள் பற்றிய ஆவணம் உறுதுணையாக நிற்குமென நம்புகின்றோம் என்றார்.
(ய-21)

## 30 வருட பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது போர்

### வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப்.28
ஒரு நீண்டகாலப் போர் எமது மக்களுக்கு 30 வருடப் பின்னடைவைஏற்படுத்தியிருக்கின்றது. எமதுபோராட்டம் ஒரு தேசியத்துக்கான உரிமைப் போராட்டமாக அமைந்திருந்தாலும் அது பல்வேறு வாழ்வியல் ரீதியான பாதிப்புக்களையே மக்களிடம் விட்டுச் சென்றுள்ளது என வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் தெரிவித்தார்.

மாகாணசபை உறுப்பினர்களுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் இருந்து யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரிக்கு பல் ஊடக ஒளிக் கருவி (மல்டி மீடியா புறொஜெக்டர்) ஒன்று நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடந்துமுடிந்த விடயங்களை வைத்து விவாதம்செய்வதும், அரசியல் செய்வதும், சர்ச்சைகளை ஏற்படுத்துவதும் பரவலாக இடம்பெறும் விடயமாகிவிட்டது. அதனை நான் சரியென்று கூறவோ அல்லது பிழை என்று கூறவோ முனையவில்லை ஆனால், எமது மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் ஒரு செயற்பாடே இப்போது எமக்கு அவசியமாகியிருக்கின்றது. அதிலும் குறிப்பாக கல்விசார்ந்த வளர்ச்சி, மனித வள மேம்பாடு அத்தியாவசியமான ஒன்றாக இருக்கின்றது. இதனை நாம் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

இதற்கிடையில் மதரீதியான முரண்பாடுகள், சாதியரீதியான முரண்பாடுகள் எம்மை மேலும் பலவீனப்படுத்தும் இதனை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

எமது மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தற்போது கடைசி நிலையில் இருக்கின்றன என்று தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. நாம் பின்னடைவான நிலையில் இருக்கின்றோம். இதனை முன்னோக்கிநகர்த்துவதற்குஒரு செயற்திட்டம் அவசியமாகின்றது. இதனை ஒரு சாராரிடம் விட்டுவிடுவது சரியானதல்ல. அனைவரும் இணைந்த ஒரு கூட்டு முயற்சி இதற்கு அவசியமாகின்றது.

கனேடிய நாட்டிலே மாணவர்கள் கற்றலுக்கான எத்தகைய சூழ் நிலைகளைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள் என்று பார்ப்பதற்காக நாம் அங்கு சென்று அவற்றை அவதானித்தோம்; அவற்றை இலங்கையில் எப்படிநடைமுறைப்படுத்துவது என்றும் ஆராய்ந்தோம்.

இது இவ்வாறு இருக்க அண்மையில் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தினைப் பார்வையிடச் சென்றேன். கனடாவில் இருக்கின்ற கற்றல் கற்பித்தல் சூழ்நிலைகளுக்குச் சமாந்தரமான ஒரு சூழ்நிலையை அவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இதைக் கண்ணுற்றபோது வியப்பாக இருந்தது. அவர்களிடம் இவற்றை எவ்வாறு மேற்கொண்டீர்கள் என்று கேட்டோம். 'பெற்றோர் ஆசிரியர் கூட்டுறவு' என்று பதில் சொன்னார்கள். வெளியிலிருந்து வருகின்ற நிதிசார்ந்த உதவிகளை விடவும் இந்தக் கூட்டுறவு மிகவும் முக்கியமானது என்று அறிந்துகொண்டேன். நாமும் அத்தகைய மாற்றங்களை இங்கு ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை எனக்குள் உருவாகியது.

எனவே இத்தகைய நல்ல மாற்றங்களை நாம் ஏற்படுத்தும்போது அது எம்மை முன்னோக்கிப் பயணிக்கச் செய்யும் என்று நம்புகின்றேன்-என்றார். (ய)

## ஆங்கிலப்பாட ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஒப்பந்த, தொண்டர் ஆசிரியரை நியமிக்குக

### வடக்குமாகாணசபையில் சுகிர்தன் பிரேரணை

வடக்குமாகாணத்தில்ஆங்கிலப்பாட தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்கள் பணியாற்றிவருகின்றனர்.

இவர்களுக்குநிரந்தரநியமனத்தை வழங்கி, மாகாணத்தில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கவேண்டும் எனக்கோரி வடக்கு மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் பிரேரணை ஒன்றை முன்மொழியவுள்ளார்.

வடக்குமாகாணசபையின் 106அவதுஅமர்வுஇன்றையதினம் அவைத்தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த அமர்விலேயேகுறித்தபிரேரணை முன்மொழியப்படவுள்ளது.

"வடக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் சேவையைக் கருத்தில் கொண்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். தொண்டர்ஆசிரியர்கள் மற்றும்ஒப்பந்தஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும். எனதனதுபிரேரணையில் குறிப்பிட்டுள்ளார். (ய-8)

## முகாமைத்துவ உதவியாளர் பதவியுயர்வு: போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், செப்.28
மாகாண அரச திணைக்களங்களில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் 1ஐச் சேர்ந்த அலுவலர்களிடம், திறமை அடிப்படையில் அதிசிறப்புத் தரத்திற்கு பதவியுயர்வு வழங்குவதுக்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவினால் கோரப்பட்டுள்ளன முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் 1இல் ஐந்து வருட சேவையை திருப்திகரமாக நிறைவு செய்தவர்களிடமிருந்து விண்ண ப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் கொழும்பில் நடத்தப்படும். எழுத்துப் பரீட்சை, சேவை மூப்பு, அனுபவம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகள் வழங்கப்படும். புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். விண்ணப்பங்களை எதிர்வரும் பத்தாம் திகதிக்கு (10.10) முன்னர் அனுப்பி வைக்குமாறு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் சீ.ஏ.மோகன்ராஸ் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். (ய-9)

## கொழும்பில் நவராத்திரிப் பெருவிழா

யாழ்ப்பாணம், செப்.28
இந்து வித்தியாவிருத்திச் சங்கத்துடன் ஏனைய இந்து நிறுவனங்களும் இணைந்து கொழும்பில் நவராத்திரிப் பெருவிழாவை நடத்தி வருகின்றன. ஒன்பதுநாள்கள்நடைபெறும் இப்பெருவிழாவில் நேற்றுப் புதன்கிழமை கொழும்பு நுண்கலைக் கோயில் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

இன்று வியாழக்கிழமை பெஃவயர் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வகளும், நாளை இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் ஒழுங்கமைப்பிலான கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

விஜயதசமி தினமாகிய 30ஆம் திகதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களின் கொழும்புச் சங்கத்தினர் வழங்கும் கலை நிகழ்ச்சிகள்இடம்பெறவுள்ளனஎன தெரிவிக்கப்பட்டது. (ய-21)

## அட்டவணைப்படுத்தாத பதவிகளுக்கு நியமனம் வழங்க முதல்வர் அனுமதி

யாழ்ப்பாணம், செப்.28
வடக்கு மாகாணத்தில் இதுவரை காலமும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

நியமனங்களுக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சினால் பச்சைக் கொடிகாட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைகளில் ஏற்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத பதவியணிகளில் வெற்றிடங்கள் உள்ளன. அந்த இடங்களில் தற்போது நிரந்தரப் பதவியில் உள்ளவர்கள் பதில்கடமையாற்றிக் கொண்டிருப்பார்கள். அந்த வெற்றிடங்களை நிரப்பாமல் ஏனைய நியமனங்களை வழங்க மாகாண முதலமைச்சர் அமைச்சின் செயலாளரினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை அட்டவணைப்படுத்தப்படாத பதவியணியினரின் கல்வித் தகைமைகள் தொடர்பான திருத்தம் நாடாளுமன்ற அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதையடுத்து வெற்றிடமாகக் காணப்படும் அட்டவணைப்படுத்தப்படாத பதவியணியினரின் நியமனங்கள் தொடர்பாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் தெரிவித்தார்.

(ய-9)

## ஆயுதம் ஏந்தியும், அகிம்சையாகவும் போராடிய

# உலகின் ஒரேவீரன் திலீபனே!

## புரட்சிக் கவிஞர் மாணிக்கம் ஜெகன் தெரிவிப்பு

வவுனியா, செப்.28

இலங்கை அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்தியும், இந்திய அரசுக்கு எதிராக அகிம்சை ரீதியிலும் போராடி உயிர்நீர்த்த ஒரே ஒரு விடுதலை வீரனாக திலீபனைப் பார்க்கலாம் என்று தமிழ் விருட்சம் அமைப்பின் செயலாளரும் புரட்சிக் கவிஞருமான மாணிக்கம் ஜெகன் தெரிவித்தார்.



வவுனியாவில் நேற்றுமுன்தினம் திலீபனின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

திலீபனுடைய போராட்டம் அன்று ஒரு விலை மதிப்பற்ற விடயத்தை உலகுக்கும், ஈழப்போராட்டத்துக்கு எதிராக செயற்பட்ட அனைவருக்கும் துல்லியமாக்கியது. அவருடைய அகிம்சை ரீதியான போராட்டம் இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்குப் பின்னரான ஈழப்போராட்டம் என்பதை முற்றுமுழு தாக்கியது.

இனிவரும் காலங்களில் அகிம்சைப் ரீதியில் போராட நாங்கள் தயார். எங்களுக்கு உரிமைதான் முக்கியம் என்று சுதுமலைப் பிரகடனத்தில் தலைவர் மிகத்தெளிவாகச் சொன்னார், போராட்டம் மாறாது போராட்ட வடிவங்கள் தான் மாறும் என்றார். அந்தவகையில் அதனை திலீபன் ஆரம்பித்து வைத்தான். இதை எந்த ஒரு அரசும் அல்லது ஈழப்போராட்டத்துக்கு எதிரான எந்தவொரு நாடுகளும் உணர்ந்துகொள்ளவில்லை.

அந்த உணர்ந்துகொள்ளாத் தன்மையே முள்ளி வாய்க்காலின் முடிவாக இருக்கின்றது.

திலீபனின் போராட்டத்துக்கு உண்மையிலேயே இந்திய அரசு சரியான பதிலைக் கொடுத்திருந்தால் இன்று ஈழத்தமிழருக்கு இவ்வளவு பெரிய அழிவு வந்திராது. பின்னடைவு வந்திராது.

ஈழத்தமிழர்கள் இன்னும் உரிமை கேட்டு வீதியிலே அலைந்து கொண்டிருக்க வேண்டியநிலை வந்திருக்காது. இந்திய வல்லரசானது தனது இருப்பை தக்கவைப்பதுக்கான ஒரு நடவடிக்கையாகவே எமது போராட்டத்தைப் பார்த்தது.

ஈழத்தமிழருடைய உரிமைக்கான பயணம் என்பதும் மிக மிகச்சிக்கல் நிறைந்த ஒரு சூழ்நிலையாகத்ததான் காணப்படுகின்றது. அது அரசியல்ரீதியாக இருந்தாலும் சரி ஆயுதரீதியாக இருந்தாலும் சரி பயணிக்க முடியாத சூழ்நிலையில் தான் நகர்ந்து கொண்டிருக்கின்றது. எதிர்காலம் சூனியமாக இருக்கும்.

ஏனெனில் திலீபனுக்கு வணக்கம் செலுத்துவதனூடக திலீபனுடைய போராட்டத்தை நாங்கள் மீண்டும் நினைத்துப் பார்க்கவேண்டும்.

திலீபனுடைய கனவும், எங்களுடைய இருப்புக்கான தேடலும் இருக்கும் வரைக்கும் திலீபன் எரிந்துகொண்டிருப்பான் என்றார். (ய)

## விகாரை திறப்பு விழாவுக்கு அரச தலைவர் வரக்கூடாது

### திருக்கேதீச்சர திருப்பணிச்சபையும் தெரிவிப்பு

மன்னார். செப்.28

மாந்தையில் சட்டவிரோதமாக அமைக்கட்ட விகாரைத் திறப்புவிழாவில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனா கலந்துகொள்வது விசமத்தனமான மத விரோத உணர்வுக்கு தூபமிடுவோருக்கு வாய்ப்பாக அமையும் என திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை அரச தலைவருக்குத் தெரிவித்தது.

அரசதலைவரின் செயலாளருடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நடந்த சந்திப்பில், ஆலயத் திருப்பணிச் சபையினருக்கும் அரச தலைவருக்கும் இடையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கி ழமை கொழும்பில் இடம் பெற்ற சந்திப்பின்போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர். இது தொடர்பாக அரச தலைவருககான மகஜர் ஒன்றை யும் அரச தலைவரின் செயலரிடம் கையளித்தனர்:

பௌத்த மக்கள் தங்கள் வழிபாட்டுக்கு விகாரை அமைப்பதை இந்துமக்கள் எதிர்க்கவில்லை. ஆனால் பௌத்த மக்கள் வாழாத இடத்தில் பௌத்த மதவழிபாட்டுத் தலங்களை அமைப்பது - அதுவும் பாடல்பெற்ற திருத்தலமான திருக்கேதீச்சர ஆலயச் சூழலில் அவ்வாறு அமைப்பது தவறு. மேலும் அண்மையில் இருக்கும் தாளையடி இராணுவத்தளத்தில் புத்த விகாரை இருக்கும்போது இப்படியான விகாரை இங்கு தேவையில்லை எனவும் மேலும்.

மன்னார் மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம், மன்னார் இந்துக் குருமார் பேரவை, சைவ மங்கையர் கழகம் தெரிவித்திருந்த ஆட்சேபனைகளையும் திருப்பணிச் சபையினர் அரச தலைவர் செயலருக்குச் சுட்டிக்காட்டினர்.

இதுதொடர்பில் இந்து மக்களின் வேதனைகளை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனின் கவனத்துக்கும் அவர்கள் கொண்டு வந்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் அரச தலைவரை நேரில் தொடர்பு கொண்டு இந்து மக்களினதும், ஏனைய மதத்தினரினதும் உணர்வுகளை எடுத்துரைத்திருக்கிறார். இந்நிலையில் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெற வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட திருக்கேதீச்சரம் மாந்தை விகாரைக் கட்டடத் திறப்பு விழாவில் அரசதலைவர்க லந்துகொள்ளமாட்டார் என்றே நம்புகின்றோம் எனதிருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபையினர் தெரிவித்தனர். (ய-21)

## காணிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம்.செப்.28

காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவிடம் இருந்து காணிகளைப் பெற்றவர்கள் தமது காணிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வடக்கு வலய காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் தி.விமலன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1972ஆம் ஆண்டு முதலாம் இலக்கக் காணி உச்ச வரம்பு சட்ட்டத்தின் பிராகாரம் ஒருவர் வைத்திருக்கக் கூடிய ஆகக்கூடிய உச்ச அளவு 50ஏக்கர் (25ஏக்கர் வயல்நிலம்,

25 ஏக்கர் மேட்டு நிலம் எது எவ்வாறாயினும் மொத்தம் 50ஏக்கர்) காணியை வைத்துக்கொள்வதற்கு அதிகாரம் உண்டு.

அதற்குமேல் வைத்திருந்தால் அதனை நாம் சுவீகரிப்பதுக்கு அதிகாரமும் உண்டு.

கடந்த போர்க்காலங்களில் எமது அலுவலகம் இயங்காமல் இருந்தது. அவ்வேளையில். இகுறித்த காணிகளை மக்கள் அடாத்தாகக் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் அவர்கள் கைப்பற்றும் காணிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் உறுதிகளைத் தயாரித்தும் வருகின்றனர். உரிமை மாற்றமும் செய்து வருகின்றனர்.

அது சட்டரீதியானது அல்ல. காணிகளுக்கு எம்மால் வழங்கப்படும் ஆவணங்கள் மாத்திரமே சட்ட ரீதியானவை. அத்துடன் எமது ஆணைக்குழுவின் காணிகளைப் பிடித்து அவற்றில் மண் அகழ்தல், மரம்வெட்டுதல் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இதுதொடர்பாக அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாணத்தில் உள்ளவர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள வலயக் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகத்தில் காணி உரிமம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றுள்ளது. (ய-ரி)

## முப்பதுவருட போரால் வடக்கு மக்கள் சட்டங்களை அறிந்துகொள்ளவில்லை

### கிளி. பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப்.28

முப்பது வருடப் போர் காரணமாக வடக்கு மாகாணத்தில் உள்ளவர்கள் சட்டங்களை அறிந்துகொள்ள முடியவில்லை என கிளிசொச்சி பொலிஸ் அத்தியட்சகர் சமுர்தஜீவ தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தினரின் ஏற்பாட்டில் . மதத்தலைவர்கள் மற்றும் பொலிஸாரின் நல்லுறவைக் கட்டியெழுப்பும் கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இதில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது வீதி விபத்துகள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. இதற்கு முக்கிய காரணம் துவிச்சக்கரவண்டிகள் கிளிநொச்சி யில் அதிகளவான விபத்துகள் துவிச்சக்கரவண்டிகளாலேயே இடம்பெற்றுள்ளன. துவிச்சக்கரவண்டிகளில் வெளிச்சம் இருப்பதில்லை. இரவில் தென்படக்கூடிய ஸ்ரிக்கர்கள் காணப்படுவதில்லை. இதன் காரணமாகவே அதிகளவு விபத்துகள் ஏற்படுகின்றன. இதை இங்குள்ள மக்களிடம் தெளிவுபடுத்தினால் குரோத உணர்வுடன் எம்மைப் பார்க்கின்றனர். அவர்களை நாங்கள் ஓரளவு புரிந்து வைத்துள்ளோம். வடக்கில் 30வருட நீண்டகாலப் போர் காரணமாக இங்குள்ள மக்களால் சட்டங்களை அறிந்துகொள்ள முடியவில்லை.

ஆனால், இனிவரும் காலங்களில் இவற்றுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

வண. பிதா கலாநிதி எஸ்.சந்திரகுமார் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது. மதபோதகர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர். (ய)

## வடக்கு மாகாண விவசாயிகளின் பிரச்சினை: அடுத்த மாதம் முதல் எழுத்தில் பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.28

வடக்கு மாகாணத்தில் விவசாயிகளின் பிரச்சினைகளை எழுத்துமூலம் தெரியப்படுத்துவதற்கான சிறப்பு நிகழ்ச்சித் திட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். இதன் முதல்கட்டமாக வடக்கு மாகாணத்தில் மூன்று மாவட்டங்களில் இந்தத் திட்டம் நடைபெறும் என்று மாகாண விவசாய அமைச்சின் செயலர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் கடனற்ற விவசாயிகளை உருவாக்குவது எமது எதிர்பார்ப்பாகும். இதற்கான சிறப்பு செயற்திட்டமாக விவசாயம் மற்றும் கால்நடையுடன் தொடர்புடைய சங்கங்கள், திணைக்களங்கள், சபைகளில் உள்ள அனைத்து பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம். இதன் போது விவசாயிகளின் பிரச்சினைகள், தேவைகள் என்பன பற்றி கலந்துரையாடப்படும்.

கூட்டத்துக்கு வருகைதரும் உத்தியோகத்தர்கள் தமது பிரதேசங்களில் உள்ள விவசாயிகளின் பிரச்சினைகளை எழுத்து மூலம் தெரியப்படுத்தப்படுத்த வேண்டும். இங்கு முன்வைக்கப்படும் பிரச்சினைகளுக்கு வெகுவிரைவில் தீர்வுகள் வழங்கப்படும்.

எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட் கிழமை யாழ்ப்பாண மாவட்டத்தில் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்திலும், 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒ ட்டு சுட்டான் மாவட்ட விவ சாய பயிற்சி நிலையத்திலும், 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளம் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்திலும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களில் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது. காலை 9 மணி முதல் மதியம் 2 மணிவரை விவசாயம் சார்ந்த கலந்துரையாடலும், அதன் பின்னர் கால்நடை சார்ந்த கலந்துரையாடலும் நடைபெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# உத்திகளைக் கையாண்டு உச்ச அதிகாரத்தைப் பெறவேண்டும்

## இவ்வாறு கூறுகிறார் தமிழரசின் பொதுச் செயலர் துரைராசசிங்கம்

மட்டக்களப்பு, செப். 28

இந்தச் சந்தர்ப்பத்திலே எமது உத்திகளைக் கையாண்டு பெறக் கூடிய உச்சத்தைப் பெற வேண்டும். நாங்கள் பெறக்கூடிய உச்சம் என்பது எமது இலக்கு அல்ல. ஆனால் இப்போது பெறக்கூடிய உச்சம் எதுவோ அதைப் பெற்றுவிட்டால் அதற்குப் பிறகு ஏற்படுகின்ற நல்லிணக்கத்தின் மூலம் அதற்குக் கூடுதலாக நாங்கள் பெற முடியும். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலரும், கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் போரதீவுப் பற்றுப் பிரதேசக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தியாகி திலீபனின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் கலந்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

### திலீபனின் கனவை நனவாக்க வேண்டும்

நமது உறவுகள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற தியாகி திலீபனின் கனவை நனவாக்க வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. எந்தவிதமான வழிமுறைகளை நாங்கள் அந்தக் கடப்பாட்டை நிறைவேற்றக் கையாளப் போகின்றோம் என்பது தான் எமக்கு முன்னாள் உள்ள கேள்வி. தற்போது இருக்கும் சந்தர்ப்பம் நழுவ விடப்பட்டால் இதற்கு மேல் நாம் சிந்திப்பதற்கோ, செயற்படுவதற்கோ எந்தவிதமான சந்தர்ப்பமும் நமக்கு இருக்காது.

### தமிழீழத்துக்குள் கிழக்கு வருமா ?

பேச்சுக்களின் போதெல்லாம் கிழக்கு எவ்வாறு தமிழீழத்துக்குள் வரும் என்ற சந்தேகம் இருந்தது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன, அமிர்தலிங்கத்திடம் தமிழீழத்தை வடக்கில் தருகின்றோம் கிழக்கை மறந்து விடுங்கள் என்று கூறியதாக அறியப்படுகின்றது. கிழக்கை நாம் நிரூபிக்க வேண்டும். கிழக்கை நிரூபிப்பதற்காக அப்போதிருந்த எமது தலைவர்களான சிவசிதம்பரம், அமிர்தலிங்கம் போன்றவர்களால் அடையாளம் காட்டப்பட்டவர் தான் தற்போதுள்ள எமது தலைவர் சம்பந்தன். அதன் பின்னர் 1981ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தலில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி அனைத்து இடங்களையும் கைப்பற்றியது.

இந்த விடயங்களையெல்லாம் சொல்லி நிரூபித்ததன் பிறகுதான் வடக்கு - கிழக்கு என்ற அடிப்படையிலேயான தீர்வையும், இணைப்பு தொடர்பில் கிழக்கில் ஒரு மக்கள் தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்புதான் அது நிரந்தரமாக இணைக்கப்படும் என்ற நிபந்தனையும் வைக்கப்பட்டது. அந்த நேரத்தில் நிபந்தனையை எந்தவிதத்திலும் நாங்கள் நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று தெரிவிக்கப்பட்டதாக எமது தலைவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

1987ஆம் ஆண்டு வட-கிழக்கு இணைந்ததாகத் தேர்தல் நடைபெற்றது. இந்தியப் படைகள் நின்று அதைச் செயற்படுத்தின. மக்கள் வாக்குப் போட்டார்களோ போடவில்லையோ தெரியவில்லை வாக்குப் பெட்டிகள் நிறைந்தன. அந்த வாக்கெடுப்பிலே அவர்கள் நினைத்தவர்களை மாகாணசபைக்கு அனுப்பினார்கள். இதே போன்றதொரு வாக்கெடுப்பு அந்த நேரத்தில் வட - கிழக்கு இணைப்புத் தொடர்பில் கிழக்கிலும் நடந்திருந்தால் 2006ஆம் ஆண்டு வட-கிழக்கு இணைப்புக்கு எதிரான வழக்குக்குச் சென்றிருக்க வேண்டியதும் இல்லை. தற்போது நாங்கள் மீண்டும் வட-கிழக்கு இணைப்புப் பற்றி பேச வேண்டி அவசியமும் இருந்திருக்க மாட்டாது. இந்தியாவை நாம் ஏன் பயன்படுத்தவில்லை என்ற கேள்வியும் இருக்கின்றது.

### விமர்சனங்கள் தேவையில்லை

நாங்கள் மிகவும் கவனமாக யோசிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். முன்னர் பல சந்தர்ப்பங்கள் நமக்கு ஏற்பட்டிருக்கின்றன. எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே நாங்கள் ஆரம்பத்தில் பொறுமையாக இருந்து செயற்பட்டு வந்து பின்னர் பொறுமை இழந்தவர்களாக முடிவுறும் சந்தர்ப்பத்தில் மிக மிக வேகமாகச் செயற்பட்டு இறுதித் தருணத்தில் அந்தச் சந்தர்ப்பத்தை



நழுவ விட்டிருக்கின்றோம்.

தமிழ் மக்களுக்குத் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டிய எல்லாத் தலைவர்களும் தங்கள் மனதிலே நிலை நிறுத்தியிருக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் எமது பலவீனங்கள், எமக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் தொடர்பாக நாங்கள் பேசாமல் இருப்பது கூட சில வேளைகளில் சிறந்ததாக இருக்கும். எமது இலக்கை அடைவதில் நாங்கள் என்னென்ன உத்திகளைக் கையாள வேண்டும் என்கின்ற விடயத்தில் நாங்கள் தெளிவாக இருக்க வேண்டும். அடையும் வரை அடைவோம் என்ற நம்பிக்கையுடன் இருக்க வேண்டுமே தவிர, வெறுமனே விமர்சனங்களை மாத்திரம் சொல்லிக் கொண்டு இருக்கக் கூடாது.

### முரண்பாடுகளுக்குள் கடைந்தெடுத்த இணக்கப்பாடு

எமது நாட்டில் அரசமைப்பை ஆக்குவதென்பது மிகக் கடினமான காரியம். எமது தலைவர்கள் எத்தனையோ முரண்பாடுகள் உள்ள தலைவர்களுடன் பேசித்தான் இந்த இடைக்கால அறிக்கை வந்திருக்கின்றது. இவ்வாறு பல விளக்கங்கள் முரண்பாடுகளுக்கு மத்தியில் கடைந்தெடுத்து வந்த ஒன்று தான் இந்த இடைக்கால அறிக்கை. இதிலே மக்கள் பிரதிநிதிகளுக்குச் சந்தேகம் வந்தால் அதனை எமது தலைவர்களிடம் கேட்டுத் தெளிவடைந்து கொள்ள வேண்டுமே தவிர இதில் சந்தேகம் இருக்கின்றது என வெளியில் சொல்லிக்கொண்டு மாத்திரம் இருக்கக் கூடாது.

ஒற்றையாட்சி என்ற சொல்லை அகற்றி ஒருமித்த நாடு என்ற பதத்தினை அங்கு இடுவதற்கு எமது தலைவர்கள் எத்தனை விதமான உத்திகளைக் கையாண்டிருப்பார்கள் என்பதையெல்லாம் நாம் சற்றுக் கவனிக்க வேண்டும். வந்திருக்கின்ற இந்த இடைக்கால அறிக்கையை நாங்கள் மிகக் கவனமாகச் செய்திருக்கின்றோம். இதனை அரசமைப்பாக ஆக்குவதும் நாடாளுமன்ற வாக்கெடுப்புக்கும், மக்கள் தீர்ப்புக்கும் கொண்டு வருவது பற்றி நாங்கள் இன்னும் மிகக் கவனமாகச் சிந்திக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் சாதித்துத் தருபவர்கள் யார். இந்தப் பொறுப்பை அரசிடம் மட்டும் நாங்கள் வைத்து விட முடியாது. நாடாளுமன்றத்திலே மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டுமாக இருந்தால் குறைந்தது 150 வாக்குகளையாவது பெறவேண்டும். நம்மிடம் இருப்பதோ ஆக 16 வாக்குகளே. மிகுதி வாக்குகளை அரச தலைவரும், தலைமை அமைச்சரும் சேர்ந்து பெற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களும் அவரவர் தரப்பில் எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே எமது உத்திகளைக் கையாண்டு பெறக் கூடிய உச்சத்தைப் பெறவேண்டும். நாங்கள் பெறக்கூடிய உச்சம் என்பது எமது இலக்கு அல்ல. ஆனால் இப்போது பெறக்கூடிய உச்சம் எதுவோ அதைப் பெற்றுவிட்டால் அதற்குப் பிறகு ஏற்படுகின்ற நல்லிணக்கத்தின் மூலம் அதற்குக் கூடுதலாக நாங்கள் பெற முடியும்.

### தலைமையால் மாத்திரம் முடியாது

இப்போதிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்கள் மூலம் இது வெற்றி பெற வேண்டும் என்கின்ற அடிப்படையிலே எவ்வளவு பவ்வியமாக, நிதானமாக, கண்ணியமாக நாம் நடந்து கொள்ளவேண்டும். எமது தலைவர் மாத்திரம் அவ்வாறு நடந்து கொண்டால் போதாது. பாரதம் என்பது இன்னும் முடியவில்லை. இங்கும் அதுதான் நடந்து கொண்டிருக்கின்றது. பாரதத்தின் சூதாட்ட நிகழ்வில் சகோதரர்களிடம் எத்தனையோ விமர்சனங்கள் பெற்றுப் பொறுமையோடு இருக்கும் தருமனைப் போல் எமது தலைமை இருக்கின்றது. அது போல் எமது சகோதரர்களின் குமுறல் எமக்குத் தெரிகின்றது. ஆனால் பெரும்பான்மை மக்களினுடைய தலைவர்கள் இது நியாயம் என்று உணரக் கூடிய வகையிலே எமது விடயங்களை உணர்த்துவதும், உலக நாடுகள் தமிழ்த் தலைவர் சரியான முறையிலே தான் தன்னுடைய நகர்வுகளை மேற்கொள்கின்றார், தன் மக்களை மட்டும் அவர் மனதிலே வைத்தவராக இல்லை என்கின்ற விடயங்களையெல்லாம் செயன்முறையில் காட்ட வேண்டும். அதைத்தான் எமது தலைமை செய்கின்றது.

### பகைமை தவிர்ப்பு

எமது பிரதேசத்தில் ஏற்படுகின்ற முஸ்லிம், தமிழ்ப் பிரச்சினைகளை எமது தலைமை சொல்லியது போல் பகைமை இல்லாத வகையிலே கையாள வேண்டும். நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்ற வட-கிழக்கு இணைப்பாக இருந்தாலும் சரி, தீர்வாக இருந்தாலும், சரி அது முஸ்லிம் சகோதரர்களையும் ஒன்று சேர்த்து செய்ய வேண்டிய ஒன்றாகத் தான் இருக்கின்றது. இந்த நேரங்களிலெல்லாம் பகைமை தவிர்ப்பு உத்திகளையெல்லாம் கையாண்டு எங்களை நாங்கள் அவர்களுக்கு விளங்க வைத்து அவர்களிடம் இருக்கின்ற தப்பான அபிப்பிராயங்களைக் களையும் விதமாகச் செயற்பட வேண்டும்.

இங்கிருக்கின்ற சிங்களத் தலைவர்களும் முறையான ஒரு அரசியற் தீர்வு வேண்டும் என்று விரும்புகின்றார்கள், நாமும் அதைத்தான் கேட்கின்றோம். ஆனால் சிலர் குழப்பி விடுவார்களோ என்ற அச்சம் அனைவர் மத்தியிலும் இருக்கின்றது. இவ்வாறு தான் பல தீர்வுத் திட்டங்கள் குழப்பப்பட்டன. அவ்வாறான நிலமை வரக் கூடாது - என்றார். (5)

# இடைக்கால அறிக்கையை வரவேற்கின்றோம்

## மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 28

அரசமைப்பு நிர்ணய சபையின், வழிநடத்தல் குழுவினது இடைக்கால அறிக்கையை வரவேற்பதாக மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசமைப்பு மறுசீரமைப்பின் அடுத்த கட்ட பணிகள் தொடர்பில் காலவரையறையுடன் கூடிய திட்டத்தை அரசு முன்வைக்க வேண்டியது அவசியமாகும்.

அரசமைப்பு நிர்ணய சபையின் அடுத்த விவாதங்கள் குறித்த தெளிவான திகதிகள், அரசமைப்புத் தொடர்பான அறிக்கையின் இறுதி நகல் வரைவு எப்போது வெளியிடப்படும் என்பன தொடர்பான தெளிவான அம்சங்கள் அறிவிக்கப்படவேண்டும். நகல்வரைவு எப்போது பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு ஒப்புதல் அளிக்கப்படும் என்பது தொடர்பிலும் தெளிவான அறிவிப்புக்கள் வெளியிட வேண்டும்.

இடைக்கால அறிக்கை அல்லது அரசமைப்புத் தொடர்பான இறுதி வரைவு நகல் என்பன தொடர்பான பொது ஆலோசனைகள் எப்போது பெற்றுக்கொள்ளப்படும் என்பதையும் அரசு அறிவிக்க வேண்டும்.

இடைக்கால அறிக்கையானது கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் வெளியிடப்படும் என்று முன்னர் உறுதியளிக்கப்பட்டிருந்தது. எனினும் கணிசமான தாமதத்தின் பின்னர் அறிக்கை வெளிவந்துள்ளது.

அரசமைப்பு மறுசீரமைப்பு பணிகளின் எஞ்சியுள்ள நிலைகள் குறித்த தெளிவான பயணப் பாதையும் அர்ப்பணிப்பும் அத்தியாவசியமானது என்றுள்ளது. (5,33)

> அரசமைப்பு மறுசீரமைப்பின் அடுத்த கட்ட பணிகள் தொடர்பில் காலவரையறையுடன் கூடிய திட்டத்தை அரசு முன்வைக்க வேண்டியது அவசியமாகும்.

# எங்களுக்குப் புத்திமதி சொல்ல நாடாளுமன்றுக்கு அதிகாரமில்லை

## ரணில் முன்னிலையில் பிக்குகள் தெரிவிப்பு

பிக்குகளுக்கு அறிவுரை வழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரம் கிடையாது. அஸ்கிரிய மற்றும் மல்வத்து உள்ளிட்ட பௌத்த பீடங்களினால் மாத்திரமே பிக்குகளுக்கு அறிவுரை வழங்க முடியும் என்று அலரிமாளிகையில் நடைபெற்ற பிக்குகளுக்கு அன்னதானம் வழங்கும் வழிபாட்டின் போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பௌத்த பீடங்களை சேர்ந்த பிக்குகள் வலியுறுத்தினர்.

நாடு முழுவதிலும் உள்ள பிக்குகளை ஒன்றிணைத்து அன்னதானம் வழங்கும் வழிபாடு அலரிமாளிகையில் நடைபெற்றது. இதன் போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கும் கூட்டு அரசுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆசி வேண்டி சிறப்பு வழிபாடு இடம்பெற்றது.

மூன்று மணி நேரமளவில் வழிபாடுகள் இடம்பெற்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வமத பேரவையின் தலைவர் தம்மாலோக தம்மரத்ன தேரர் தெரிவித்ததாவது:

அண்மைக் காலமாக பிக்குகளுக்கு எதிரான கோசங்கள் எழுந்துள்ளன. பிக்குகள் அன்னதானம், நிதிகள் சேகரிக்க கூடாது ஏன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடுகின்றனர். தலைமை அமைச்சர் ஏற்பாடு செய்த இந்த அன்னதான நிகழ்வில் கலந்து கொள்ள கூடாது என்றும் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர். பிக்குகளுக்கு அறிவுரை வழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரம் கிடையாது. அஸ்கிரிய மற்றும் மல்வத்து உள்ளிட்ட பௌத்த பீடங்களினால் மாத்திரமே பிக்குகளுக்கு அறிவுரை வழங்க முடியும். அவர்கள் அறிவுரை வழங்கினால் நாம் ஏற்றுக்கொள்வோம். பிக்குகள் தொடர்பான கருத்துகளை கவனமாக பிரயோகம் செய்ய வேண்டும். இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (5,31)

# நல்லிணக்கத்தை நோக்கி மெதுவாகவே பயணிக்க முடியும்

## இப்படிக் கூறுகிறது சிறிலங்கா சுதந்திரக் கட்சி



கொழும்பு. செப். 28

30 ஆண்டுகாலப் போரை நிறைவுக்கு கொண்டு வருவதில் கடினமான பாதையில் பயணித்ததைப் போலவே நல்லிணக்கத்தை உருவாக்குவதிலும் கடினமான பாதையிலேயே பயணிக்க வேண்டியுள்ளது. விரைவில் நல்லிணக்கம் வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட ஆரம்பித்தால் எதிர்பாராத மோசமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லிணக்கத்தை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டு வெறும் வார்த்தைகளில் மாத்திரம் செயற்படாது செயலிலும் நல்லிணக்கத்தை அடையும் இலக்கை நோக்கி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன செயற்பட்டு வருகின்றார். கூட்டு அரசின் வெற்றியாகவும் இது அமைந்து வருகின்றது.

முன்னைய ஆட்சியாளர்கள் வெறுமனே கதைகளைக் கூறி நாட்டில் குழப்பகர சூழலில் அரசியலை முன்னெடுக்கவே விரும்பினார்கள். மகிந்த ராஜபக்சவுடனும் நான் ஜெனிவா சென்றுள்ளேன். அப்போதெல்லாம் எமக்கான அந்தஸ்து மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இன்று அவ்வாறு அல்ல.

யார் எவ்வாறான கருத்துக்களை முன்வைத்த போதிலும் நாம் எமது பயணத்தை முன்னெடுப்போம். முப்பது ஆண்டுகால போர் நிறைவுக்கு வந்ததை விடவும் நல்லிணக்கத்தை பலப்படுத்துவதே கடினமான செயற்பாடாகும். மிக விரைவில் தீர்வு ஒன்றை வழங்கிவிட முடியாது. அவ்வாறு விரைவில் ஒரு தீர்மானம் வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட ஆரம்பித்தால் எதிர்பாராத மோசமான பிரச்சினைகள் உருவாகும். அவற்றிற்கு முகம்கொடுக்க வேண்டிய சூழல் உருவாகும். நல்லிணக்க பயணமானது மிகவும் மெதுவாக ஆனால் உறுதியாக முன்னெடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

பன்னாட்டு அழுத்தங்கள் உள்ளன. புலம்பெயர் அமைப்புகளின் அழுத்தங்கள் உள்ளன. அவற்றை நாம் மறுக்கவில்லை. இவை எமது நாட்டின் நல்லிணக்கத்தைப் பலப்படுத்துவதில் பாதகமாக அமையாது. நாம் இன்று பன்னாட்டுச் சமூகத்தை வெற்றிகொண்ட நாடாக அடையாளப்படுத்தப்படுகின்றோம் - என்றார். (5.31)

# நாடாளுமன்ற நடைமுறைக்கு அமைவாகவே மாகாணத் தேர்தல் சட்டம் நிறைவேற்றம்

## கேள்வி எழுப்புவர்களுடன் பேசுவேன் என்கிறார் ரணில்



கொழும்பு. செப். 28

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவை நிறைவேற்றியமை தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

நாடாளுமன்றத்தின் செயல்முறைகளை நாடாளுமன்றத்திற்குள் மாத்திரமே தீர்க்க வேண்டும். கட்சித் தலைவர்களுடன் பேசித் தீர்மானித்த பின்னர் இலங்கைச் சட்டதரணிகள் சங்கத்தை சந்திப்பேன். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டமை அரசமைப்புக்கு முரணானது என்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் தலைமை அமைச்சரின் நிலைப்பாடு என்ன?' என்று தினேஸ் குணவர்த்தன கேள்வி எழுப்பினார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது பதிலில் தெரிவித்ததாவது:

மாகாணசபைத் தேர்தல் திருத்தச்சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். அரசமைப்பின் நான்காம் சரத்தின் பிரகாரமே நாம் செயற்பட்டோம். இந்தச் சட்டவரைவு நிறைவேற்றுவதற்கு முன்னர் கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்திய பின்னரே திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.


நாடாளுமன்றத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்றமே கேள்வி எழுப்ப வேண்டும். இலங்கைச் சட்டதரணிகள்சங்கம்தெரிவித்தகருத்துத் தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவருடன் நான் பேசினேன். இது தொடர்பில் சந்தித்து பேசுவதாகச் சட்டதரணிகள் சங்கத்திடம் குறிப்பிட்டேன்.

இருந்தாலும் கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தியதன் பின்னர் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தை சந்திப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் - என்றார். (5,31)

31 ஆம் நாள் நினைவு அஞ்சலி
29.08.2017 அன்று அமரத்துவம் எய்திய அமரர் ராசா அன்னம்
எமது கல்லூரி கல்விசாரா ஊழியரான இ.உகந்தராசா அவர்களின் பாசமிகு தாயார் அமரர் ராசா அன்னம் அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நலன்புரி சங்கம்.

12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் சரண் 12 . 02 . 1962
ஈழத்துச் சிதம்பர நடராஜனின் திருப்பாதக் கமலங்களில் சரண் 10 . 10 . 2005
அமரர் பாலசிங்கம் நடனகுமார் (சிவா)
திதி : பூர்வபக்க அட்டமி (28.09.2017)
"நவராத்திரி நன்னாளில் எமைப் பிரிந்த சிவாவே!
பன்னிரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தனவே - எம்
கண்களிரண்டும் உனைத்தேடித் தகிக்கின்றனவே
உன்னில் உன் ஜீவன் ஒளியாக வாழ்கின்றதே
மண்ணில் எம் ஜீவன் உனை நினைந்து வாடுகின்றதே!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
"துவாரகா"
கதிர்காம சுவாமி கோயிலடி,
காரைநகர்.
உன் பிரிவால் துயருறும்
அன்புக் குடும்பத்தினர்.

நினைவகலாப் பொழுதுகளில்
மூன்றாம் ஆண்டு

கனவுகளின் வித்தாய் 06 . 05 . 1960
கடவுளின் சொத்தாய் 02 . 10 . 2014
அமரர் பொன்னம்பலம் சிவதாஸ்
(சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் - யாழ்ப்பாணம்)
திதி : (பூர்வபட்ஷ அட்டமி)
மண்ணாளும் பராசக்தி மகனென்று கவர்ந்தாலும்
விண்ணளிக்கும் பதவியோடு முக்திபேறு தந்தாலும்
ஆண்டுகள் மூன்று அவசரமாய் ஆனாலும் - என்றும்எம்
எண்ணத்திலே வீற்றிருப்பீர் எமதருமை அப்பாவே!
நெஞ்சகலா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# மத்திய மாகாண நெடுஞ்சாலை அமைத்தலில் பதினொரு பில்லியன் ரூபா மோசடியாம்

## மகிந்த அணி கூறுகின்றது

பிணைமுறி மோசடி விவகாரத்திற்கு அடுத்ததாக மத்திய மாகாண நெடுஞ்சாலை அமைத்தல் விவகாரத்திலேயே பெருமளவில் ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளது. பதினொரு பில்லியன் ரூபா மோசடி அதில் இடம்பெற்றுள்ளது என்று மகிந்த அணியைச் சேர்ந்தவரும், முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரத் துறை தொடர்பில் நம்பகத் தன்மை கட்டியெழுப்பப்பட்டால்தான் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய முற்படுவார்கள். இலங்கையில் அதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. அதன் சுமை நாட்டு மக்கள் மீதே சுமத்தப்படுகிறது. சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்னும் எத்தனை பொருள்களின் விலை அதிகரிக்கப்படவுள்ளதோ தெரியவில்லை. ஆட்சியாளர்கள் எப்போதுமில்லாதவாறு ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்றனர். மத்திய மாகாண நெடுஞ்சாலையின் மூன்றாம் கட்டப்பணிகளை நிறைவு செய்யவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. எனினும் மத்திய வங்கி பிணைமுறி மோசடிக்கு அடுத்தபடியாக மத்திய மாகாண நெடுஞ்சாலையில்தான் மோசடி இடம்பெற்றுள்ளது.

மேலும், மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டம் அரசமைப்புக்கு முரணானதாகவே நிறைவேற்றப்பட்டுள்ளது. அது தொடர்பில் சட்டமா அதிபர் எடுத்துள்ள தீர்மானங்களை நாம் கடுமையாக விமர்சிக்கின்றோம். அதில் அவர் தனது பொறுப்புகளைப் பக்கச்சார்பின்றி நிறைவேற்றவில்லை.

2002ஆம் ஆண்டின் ஐந்தாம் இலக்கச் சட்டத்திற்கு இணங்க சட்டமா அதிபரை பதவி நீக்குவது தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம் - என்றார். (5)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
பாமதி அமிர்தகுமார்
தோற்றம் 13.09.1970
மறைவு 28.09.2014
பாரினில் அவதரித்து
பண்புடனே கற்றுயர்ந்து
பதவியிலே கண்ணியமாய்
பள்ளிதனில் பாசம் கொண்டு
பக்குவமாய் பாடமளித்து
பரிவுடனே நட்புயிர்த்து
பதியுடனே பாதியாகி
பரலோகம் சரணடைய
பல மனங்கள் உருகியிங்கு
பரன் நிழலில் சாந்தி பெறவேண்டும்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்.
உம்பிரிவால் தவிக்கும்
குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

30.08.2017 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி
ஆறுமுகம் இராசநாயகி
பிறப்பு 1933.05.10
இறப்பு 2017.08.30
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.09.2017) வெள்ளிக்கிழமை கீரிமலையில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து அவரின் இல்லத்தில் மதியபோசன நிகழ்வும் நடைபெறும். அன்னாரின் சடங்கிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)
குடும்பத்தினர்.

# மியன்மார் அகதிகளுக்கு கருணை காட்டுங்கள்

## உருக்கமாகக் கேட்கிறார் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல

கொழும்பு, செப். 28

மியன்மார் அகதிகள் தஞ்சமடையுடன் நோக்குடன் இலங்கைக்கு வருகை தரவில்லை. இந்தியாவுக்குச் சென்ற போது படகு இயந்திரம் செயழிழந்தமையினால் இலங்கைக்கு வந்தனர். பௌத்த நாடு என்ற வகையில் மியன்மார் அகதிகளுக்கு கருணை காட்டுங்கள் என்று உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கோரிக்கைவிடுத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவியுடன் மிரிஹான பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள முகாமில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து கல்கிசைப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

மியன்மார் அகதிகள் இலங்கையில் தஞ்சமடைவதற்கு வரவில்லை. அவர்கள் இந்தியாவுக்கே சென்றனர். இந்தியாவுக்கு சென்ற வேளை அவர்கள் பயணித்த படகு இயந்திரம் கோளாறு காரணமாக செயலிழந்தமையினால் செல்வதற்கு இடமின்றி இலங்கைக்கு வருகை தந்தனர்.

உண்மையில் அவர்கள் அப்பாவிகளாகும். இலங்கையில் நிம்மதியாக வாழ இடமளிக்க வேண்டும். இலங்கை ஒரு பௌத்த நாடாகும். பௌத்த தர்மத்தை அனுசரித்து மியன்மார் அகதிகளுக்கு நாம் கருணை காட்ட வேண்டும். இவர்கள் விடயத்தில் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்-என்றார். (5.31)

# ஜனவரியில் பொது வாக்கெடுப்பு முறியடிக்க மகிந்த அணி வியூகம்

## தேசிய கூட்டணி அமைக்கவும் திட்டம்

புதிய அரசமைப்பு தொடர்பில் அடுத்த ஆண்டு ஜனவரியில் பொது வாக்கெடுப்பை நடத்துவதே அரசின் திட்டமாக இருப்பதால் அந்த முயற்சியைத் தோற்கடிப்பதற்காக தேசிய கூட்டணியொன்றை அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் மகிந்த அணியின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் மகிந்த அணி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் இரவு கொழும்பில் சிறப்புக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் புதிய அரசமைப்புக்கான வழிநடத்தும் குழுவின் இடைக்கால அறிக்கை பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

தேர்தலை நடத்துவதற்கு முன்னர் புதிய அரசமைப்புமீது பொது வாக்கெடுப்பை நடத்துவதே அரசின் உள்நோக்கமாக இருக்கின்றது. இதைமையப் படுத்தியே நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. பொது வாக்கெடுப்பொன்று நடத்தப்படுமானால் அரசின் திட்டத்தை தோற்கடிப்பதற்கு நாம் தயாராகவேண்டும்.

அதற்கான நடவடிக்கைகள் தற்போதிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். சிவில் அமைப்புகளை உள்ளடக்கி பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைக்கவேண்டும். மக்கள் மத்தியில் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்த வேண்டும், என்று மகிந்த அணியிலுள்ள பங்காளிக்கட்சிகள் தலைவர்கள் மகிந்தவிடம் சுட்டிக்காட்டினர். இதையடுத்து மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5)

**வகுப்புக்கள்**

சகல வகுப்புக்களுக்குமான ஆங்கிலம் விஜயதசமி அன்று (30.09.2017) சனி முற்பகல் பத்து மணிக்கு ஆரம்பமாகின்றன

அனைத்து மாணவர்களும் இணைந்து பெரு நன்மை அடையுங்கள்.

வித்தியாரம்பமும் நல்ல மனதுடன் செய்து வைக்கப்படும்

தொடர்புகளுக்கு: 20/11, வைரவர் கோயில் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

தொ.பே:. 077 969 1716

**கடைத் தொகுதி வாடகைக்குண்டு**

கைதடி கிழக்கு, கைதடியில் குட்டி அரைக்கும் ஆலைக்கு முன்பாக மூன்று கடைத்தொகுதி வாடகைக்குண்டு. அவற்றில்

- ஒரு கடை மட்டும் (16X38 அடி விஸ்தீரணமுள்ள) 01/10/2017 ஆம் திகதி முதலும்
- மற்றைய இரு கடைகள் (11X38,16X29 அடி விஸ்தீரணமுள்ளவை) 01/01/2018 ஆம் திகதி முதலும் வாடகைக்கு விடப்படும்.

3 மூன்று கடைத்தொகுதிக்குப் பின்னால் 3 களஞ்சிய வதி கொண்ட அறைகள் உள்ளன.

**021 720 0862/ 076 9102 614**

**காணி விற்பனைக்கு**

மல்லாகம் சோடாக் கொம்பனி, கிழக்கு ஒழுங்கையில் இரயில் பாதையில் இருந்து மூன்றாவதாக உள்ள 5பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: அ.இராஜேந்திரன்

**077 101 4505**

**ஆதனப் பெயர் மாற்றம்**

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -06,கொய்யாத்தோட்டம் புது வீதி, ஆதன இல 49A என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் லீனஸ் பெண் மேரிமார்கிறற் எனஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் பாசையூர் புதுவீதி கொய்யாத்தோட்டம் 49ஆம் இலக்கத்தைச் சேர்ந்த அப்புசாமி பேபியன்ஸ் உம் பெண் திரேஸ் உம் பிரசித்த நொத்தாரிசு ரி.எம்.அந்தோனிப்பிள்ளை முகதாவில் 2126 ஆம் இலக்க 2003.09.25 ஆம் திகதிய பிரகடன உறுதியில் குறித்த ஆதனத்திற்கான உறுதி அண்மைக்கால இடப்பெயர்வுகளின் போது தவறவிட்டதாகவும் இன்றுவரை எங்குதேடியும் கிடைக்கவில்லை என்று பிரகடனப்படுத்தி இதே நொத்தாரிசு முகதாவில் 2127ஆம் இலக்க 2003/09/26ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் அப்புசாமி பேபியன்ஸ் உம் பெண் திரேஸ் உம் அவர்களது மகன் பேபியன்ஸ் டன்சியஸ் மதிவாணனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

**ஆதனவிபரம்:-** வட மாகாணம்.யாழ்.மாவட்டம். யாழ்ப்பாண பகுதி சுண்டிக்குளிகோவிற்பற்று சுண்டிக்குளி (தற்போது கொய்யாத்தோட்டம்)இறை "கூகை மாவடியிற் புலரும் முதலிப்புலமும் நொச்சிக்கடையும்" இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் க.பஞ்சாச்சரம் அவர்களின் வரைபட இலக்கம் 3150/2003.03.27 இல் இல் துண்டு -1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 3 குளி 9.63 ஆகும். இதற்குஎல்லை

கிழக்கு:- ஒழுங்கை
வடக்கு:- தேவராஜா யூலியற்றுக்கும் அன்ரன் ஆன்சலாவுக்கும்
மேற்கு:- S.R.ஞானப்பிரகாசம் பெண் நீற்றாவரோனிக்காவும் மறுபேருக்கும்
தெற்கு:- புதுவீதி கொய்யாத்தோட்டம்.

தற்போது இவ் ஆதனத்தை பேபியன்ஸ் டன்சியஸ் மதிவாணன் என்னும் பெயரில் எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உரிய ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது பேபியன்ஸ் டன்சியஸ் மதிவாணன் என்னும் பெயரிற்குமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆணையாளர்
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம். நாவலர் வீதி இலுப்பையடிச் சந்திக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு.

**077 849 8023** (CS 9191) (14)

**விற்பனைக்கு**

யாழ் மருத்துவ பீடத்திற்கும், பொலிடெக்னிக்கல் கல்லூரிக்கும் கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு அருகிலும் 2¾ பரப்புக் காணி கிணற்றுடனும் மதிலும் கட்டி உள்ளது. மா. தென்னை மரங்களும் உண்டு. தரகர்கள் தேவையில்லை.

**071 314 6537/ 077 502 2651**

**ஓலைச்சுவடிகள் விநியோகம்**

வழமைபோல் ஏட்டு ஓலைச் சுவடிகள் எம்மிடம் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

**அண்ணா தொழிலகம்**

**துரை வீதி, இணுவில்.**

**பெயர் மாற்றம்**

தாழ்வுபாடு, மன்னார் என்னும் இடத்தைச் சேர்ந்த **இரவிச்சந்திரன் விவேகானந்தன்** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **இரவிச்சந்திரன் சயந்தன்** எனப் பெயர் மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**இ. சயந்தன்**

**சூரியன் திருமணசேவை**

எங்களிடம் அரச உத்தியோகத்தர்கள் (பட்டதாரிகள்). தனியார் துறையினர், வெளிநாட்டு ஆண், பெண் இருபாலாரினதும் குறிப்புக்கள் உண்டு.

**சூரியன் திருமணசேவை**
561, K.K.S. வீதி,
மனோகராச்சந்தி, யாழ்ப்பாணம்.

# INVITATION FOR BIDS
# University of Jaffna

**Provision of Cleaning, Janitorialand Maintenance Services for the University of Jaffna-2017/2018**

1. The Chairman, Procurement Committee, University of Jaffna will receive sealed Bids for the following contracts up **to 2.00 p.m.** on **13th October, 2017** from the eligible Firms.

| Contract No | Service |
|---|---|
| UJ/MB/2017/ CS/02 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Buildings in various Locations in Jaffna, University of Jaffna-2017/2018 |
| UJ/MB/2017/ CS/03 | Provision of Cleaning, Janitorialand Maintenance Services for the Rented Hostels in Various Locations in "Jaffna, University of Jaffna-2017/2018 |
| UJ/MB/2017/ CS/04 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Siddha Medicine Unit at Kaithady, University of Jaffna-2017/2018 |
| UJ/MB/2017/ CS/05 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Main Campus at Thirunelvely, Jaffna – 2017/2018 |

2. Period of contract should be 365 days subject to a performance evaluation period of 60 days.
3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
   3.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
   3.2 Must have satisfactorily carried out at least one cleaning service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years where the annual contract sum is not less than **Rs. 1.4Mn for** contracts No UJ/MB/2017/CS/02, 3& 4 each and **Rs. 3.5Mnfor** contract No UJ/MB/2017/CS/05.
   3.3 Average of annual volume of cleaning service contracts performed in the last 3 years should be at least**Rs. 2.0Mn**for Contract No UJ/MB/2017/CS/02, 3& 4 each and **Rs.5.0Mn** for Contract No UJ/MB/2017/CS/05.
   3.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least **10 employees**for bid No.UJ/MB/2017/CS/02, 3 & 4 and **20 employees** for bid No.UJ/MB/2017/CS/05.
4. Interested bidders may obtain further information from Deputy Registrar, Capital Works & Planning Unit, and University of Jaffna and inspect the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs. Contact numbers are: Phone. Tel: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, **until 12.10.2017** from 9:00 hrs to 15:00 hrs upon payment of a **non refundable fee of Rupees one thousand five hundred (Rs. 1,500.00) foreach bid.Bid Security of** Rs. 25,000.00 each **forcontracts No** UJ/MB/2017/CS/02, 3& 4 and Rs. 60,000.00**for contract No** UJ/MB/2017/CS/05in Cash or Bank Guarantee valid for 120 days from scheduled bid opening date, obtained from a recognized commercial bank operating in Sri Lanka in favour of the Vice Chancellor, University of Jaffna should be accompanied with each bid.
6. Bidders are strongly advised to attend the **pre-bid meeting on 09.10.2017 at 10.00 am** in the board room of the University of Jaffna and visit each location before pricing.
7. Bids shall be delivered or sent by registered post to the **Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 5**, to reach on or before **14.00 hrs on 13.10.2017 or** be deposited in the tender box kept in the Registrar's officeon or before the above date and time. Bids will be opened soon after closing the Bids, in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

Chairman,
Procurement Committee,
University of Jaffna, Thirunelvely, Jaffna.
27.09.2017

## மரண அறிவித்தல்கள்

தோற்றம்
07 . 08 . 1961



மறைவு
22 . 09 . 2017

# பரமலிங்கம் தயானந்தன்

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட பரமலிங்கம் தயானந்தன் 22.09.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பரமலிங்கம் - பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும், வில்வரத்தினம் காலஞ்சென்ற இராசலக்ஸ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், ரதிதேவியின் அன்புக் கணவரும், சிந்துகா, சானுகா, சுருதிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருளானந்தன், காலஞ்சென்ற சிவகுமாரி மற்றும் உதயகுமாரி, ஜெயகுமாரி, காலஞ்சென்ற அகிலகுமாரி மற்றும் சுகந்தகுமாரி, சர்வானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நற்குணசிங்கம், வரதன், தயா, சிறிதரன், யோகன், மோகன், குகன், சாந்தினி ஆகியோரின் மைத்துனரும், சகுந்தலா, வரதன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2017) வியாழக்கிழமை பிரான்சில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**GPS றோட்,**
**கல்வியங்காடு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**017 716 4847/ 077 332 3387/ 077 317 2529**

## திருமதி தங்கரத்தினம் நவரத்தினம்



புன்னாலைக்கட்டுவன் தெற்கு அற்பச் சந்தியை பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் நவரத்தினம் நேற்று (27.09.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை செல்லம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் மீனாட்சி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் மனைவியும் காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் செல்வநாயகம், பாஸ்கரன் (ஜேர்மனி), மனோகரன் (ஜேர்மனி), நவசீலன் (ஜேர்மனி), நாகேஸ்வரி, நாகேஸ்வரன் (ஜேர்மனி), நந்தினி, பிரபாளினி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும் விஜயகுமாரி, மங்களேஸ்வரி, ராகினி, யோகேஸ்வரி, ஜெயகலா, உதயகுமார், ரஜனி, சிறிஸ்குமார், விக்கினேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் விஜிதா, சுகிர்தா, றாஜ்குமார், றஜீவன், அருட்செல்வி, அருள்மதி, அருள்நிதி, மேகலா, சயந்தன், சயந்தினி, தனராஜ், லேகன், டர்சிகா, தினேஷ்குமார், ராகுலன், வேணுகா, டர்சிகா, வீஷ்மன், விதுஜா, கௌசிகன், நவநீதன், நிதுஜா, நிம்ஜா, நிர்மலன், காண்டீபன், உஷாந்தினி, கிருஷாந்தினி, சுபாஜினி, கோபிந்தன், சஜித்தா, சஜின் விதுஷன், விவிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பேரப்பிள்ளைகளின் பிள்ளைகளின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான சீனியர் தங்கச்சியம்மா தம்பதியரின் அன்புப் பெறாமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் நகுலாவதி காலஞ்சென்ற மதியாபரணம் மற்றும் மகாராஜா, லீலாவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2017) வெள்ளிக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உடுவில் கிழக்கு,**
**கற்பகப்பிள்ளையார் கோயிலடி, சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0773549735/0217901241**

# உள்ளூராட்சி, மாகாண தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்துவது கடினம்

## அரசு தெரிவிப்பு



கொழும்பு, செப். 28

அடுத்த ஆண்டு ஜனவரி 20ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி சபைத்தேர்தல் நடைபெறும். அதன் பின்னரே மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவது தொடர்பில் தீர்மானிக்கப்படும். இரண்டு தேர்தல்களையும் ஒரே சந்தர்ப்பத்தில் நடத்த முடியாது என்று அரசு நேற்று அறிவித்தது.

தகவல் திணைக்களத்தில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. அமைச்சரவைப் பேச்சாளர்கள் இதனைத் தெரிவித்தனர்.

ராஜித மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபைகள் தேர்தலை ஒரே தடவையில் நடத்துவதா இல்லையா என்பது குறித்து ஆராயப்பட வேண்டும். அரசு விரைவில் இது குறித்து தீர்மானம் எடுக்கும். மாநகர சபை, நகசபை, பிரதேச சபை சட்ட திருத்தங்கள் ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரப்படவுள்ளது - என்றார்.

அமைச்சரவை இணைப் பேச்சாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்ததாவது:

தேர்தல் திருத்தத்தில் பிரதான இரண்டு கட்சிகளின் நலன்களை மாத்திரம் கவனத்தில் கொள்ள முடியாது. சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளையும் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அவர்களுக்கு வாய்ப்புகளைக் கொடுத்து அவர்களின் பிரதி நிதித்து வத்தையும் உள்வாங்க வேண்டும். அதுவே சனநாயக செயற்பாடாகும். மாறாக பிரதான இரண்டு கட்சிகளின் விருப்பத்துக்கு அமைய செயற்படுவதாயின் அதுவே நாட்டில் பெரிய குழப்பங்களை ஏற்படுத்த காரணியாகிவிடும். உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தலை நடத்த முன்னர் முரண்பாடுகள் அனைத்தையும் நிவர்த்தி செய்ய வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தொடர்ச்சியாக இதனை வலியுறுத்தி வந்தார். அதற்கமைய நாம் எல்லை நிர்ணயங்கள் உள்ளிட்ட பிரதான பிரச்சினைகளை கருத்தில் கொண்டு அவற்றை சரிசெய்துள்ளோம். மாகாணசபை தேர்தலிலும் பல்வேறு குழப்பங்கள் இருந்த நிலையில் அவை தொடர்பிலும் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் ஆகிய இரண்டையும் நடத்த வேண்டும். ஒரே தடவையில் இரண்டு தேர்தல்களையும் நடத்துவது இயலாத காரியமாகும் - என்றார்.

(5.31)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கோமளம் வைத்தியநாதன்



மலர்வு
21.06.1924

மறைவு
25.09.2017

நெடுந்தீவு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியாவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கோமளம் வைத்தியநாதன் 25.09.2017 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி அமராவதி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் ராமாசிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற வைத்தியநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பார்வதி, நாகமுத்து, வேலாயுதம், நாகலிங்கம் மற்றும் சின்னம்மா ஆகியோரின் சகோதரியும் பொன்னம்மா, லோகநாதன் பத்மராணி, கருணைநாதன் ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2017) வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் நடைபெற்று பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**பொன்னம்மா - 94768988033 /லோகநாதன் - 491516365316**
**பத்மராணி - 0014163577836 /கருணைநாதன் - 94779672153**
**கவிதா - 94773407644**



# சிவகுமாரன் காண்டீபன்

(சம்பத் வங்கி, வேணுகா ரெக்ஸ்)

தும்பளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமாரன் காண்டீபன் (26.09.2017) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் சிவகுமாரன் விமலரட்ணம் தம்பதியரின் அன்புமகனும் பஞ்சலிங்கம் - கலாநிதி தம்பதியரின் அன்புமருமகனும் நிரஞ்சினியின் அன்புக்கணவரும் சரனின் அன்புத்தந்தையும் சிந்திகாவின் அன்புச்சகோதரரும் பிரதீபனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2017) வியாழக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தும்பளை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஒருதானை ஒழுங்கை,**
**தும்பளை, பருத்தித்துறை.**

**தகவல் குடும்பத்தினர்.**
**021 226 4101**



# அயலுறவுத்துறை அமைச்சர்களின் சந்திப்பு

கொழும்பு, செப். 28

பெல்ஜியத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அயலுறவுத் துறை அமைச்சர் திலக் மாரப்பன, அந்த நாட்டின் பிரதித் தலைமை அமைச்சரும், அயலுறவுத்துறை அமைச்சருமான டிடியர் ரென்டேர்சுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

பிரசெல்சில் உள்ள எக்மன்ட் பலசில் இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன் போது இருதரப்பு விவகாரங்கள் மற்றும் உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (5)

# குர்திஷ்தானின் பொது வாக்கெடுப்பு ஈழத்தவருக்கு உற்சாகம் தருகிறது

## நா.க.த.அரசின் தலைமை அமைச்சர் வி.உருத்திரகுமாரன்

கொழும்பு, செப். 28

குர்திஷ்தானின் பிராந்திய மக்களது பொதுசன வாக்கெடுப்பு, சுயநிர்ணய உரிமைக்காக போராடி வரும் ஈழத் தமிழர்களுக்குப் புதிய நம்பிக்கையினையையும் உற்சாகத்தினையும் தந்துள்ளதாக நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் வி. உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் சுயாட்சிப் பிராந்தியமான குர்திஸ்தான் மக்கள் தமது தனிநாட்டுக்கான பொதுசன வாக்கெடுப்பினை ஞாயிற்றுக்கிழமையன்று நடத்தியிருந்தனர்.

ஈராக், துருக்கி, சிரியா ஆகிய நாடுகளது கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட பொதுவாக்கெடுப்பில்



வெற்றிக் கொண்டாட்டங்கள் உலகெங்கும் உள்ள குர்திஷ்தான் அமைப்புக்களினாலும் மக்களினாலும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் அமைந்துள்ள குர்திஷ்தான் தூதரகத்தின் வெற்றிக் கொண்டாட்டத்தில் பங்கெடுத்திருந்த நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் வி.உருத்திரகுமாரன், குர்திஷ்தான் மக்களுக்கும் குர்திஷ்தான் தேசத்துக்கும் ஈழத்தமிழர் தேசத்தினதும் மக்களினதும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

உருத்திரகுமாரன் மேலும் தெரிவித்ததாவது:

ஈழத்தமிழ் மக்களது அரசியல் தீர்வுக்கான பொறிமுறையாகப் பொதுவாக்கெடுப்பு ஒன்றினை வலியுறுத்தும் இயக்கத்தினை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

தமிழீழம் உள்ளடங்கியதான அனைத்து தீர்வுத் திட்டங்களையும் உள்ளடக்கி, தங்களது அரசியல் எதிர்காலம் குறித்து, அவர்கள் தெரிவு செய்யும் உரிமையினைப் பயன்படுத்தும் வகையில் ஈழத் தமிழ் மக்களிடத்தில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பதே அதன் பிரதான விடயமாக உள்ளது.

தமிழீழமாக அமையும் இலங்கைத்தீவின் வடகிழக்கு பகுதியில் சட்டபூர்வமாக வாழுகின்ற மக்களிடையேயும், தமிழீழத்தினை பூர்வீக தொடர்புடையவர்களாக இலங்கைத் தீவுக்கு வெளியே வாழும் மக்களிடையேயும் இந்தப் பொது வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும் என்பதும் எமது நிலைப்பாடாக உள்ளது.

குர்திஷ்தான் மக்களது தனிநாட்டுக்கான பொதுசன வாக்கெடுப்பு ஈழத்தமிழ் மக்களுக்குப் புதிய நம்பிக்கையினையும் உற்சாகத்தினையும் தந்துள்ளது - என்றார். (5)

# ரிசாட் மீதான ஊழல் முறைப்பாடு 30 மாதங்களாக நடவடிக்கை இல்லை

## அரச தலைவருக்கு முறைப்பாட்டாளர் அறிவிப்பு

கொழும்பு, செப். 28

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் ரிசாட் பதியுதீனுக்கு எதிராக லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முப்பது மாதங்களுக்கு முன்பு செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் இதுவரை எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை என்று முறைப்பாட்டாளரான ஆர்.எம்.குவை தீர்கான் அரச தலைவருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அமைச்சர் பதியுதீனின் ஊழல் மோசடிகள் பற்றி விசாரித்து அ[illegible]ர் மீது சட்ட நடவடிக்கை[illegible]ளை எடுக்க வேண்டு[illegible]ன முப்பது மாதங்க[illegible]க்கு முன்னர் தான் இல[illegible]ஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு [illegible]ய்த முறைப்பாட்டுக்கு [illegible] துவரை எந்தவித நடவடிக்[illegible]கையும் எடுக்கப்படாமை குறித்து தான் விசனமடைந்திருப்பதாகவும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

தனது முறைப்பாடு தொடர்பில்மேலதிகவிவரங்களைப் பெற்றுத்தருமாறு ஆணைக்குழுவின் செயலர் தன்னிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும்அதன்படிமன்னார்ப் பகுதியில் மாத்திரம் அமைச்சர் பதியுதீன் தனது குடும்ப உறுப்பினர்களின் பெயர்களில் வாங்கியிருந்த காணிகள் மற்றும் வாகனங்களின் விவரங்களையும் அதற்கான ஆவணங்களையும் பல மாதங்களுக்கு முன்பே ஆணைக்குழுவின் செயலருக்கு அனுப்பி வைத்ததாகவும் குவைதீர்கான் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இது தொடர்பில் அரச தலைவர் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியிருக்கிறார். (5)

# உடம்பினுள் வளரும் புதுமையான புழு 20பேரின் உடலிருந்து இதுவரை மீட்பு

## தம்புள்ளையில் பரவுகின்றது

கொழும்பு, செப். 28

தம்புள்ள பிரதேசத்தில் வசிக்கும் 20பேரது உடம்பினுள் உட்புறம் வாழும் புழுக்கள் சிறப்புச் சத்திரசிகிச்சை மூலம் இதுவரை அகற்றப்பட்டுள்ளதாக தம்புள்ள ஆதார வைத்தியசாலை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரு சிறுவர்களது உடம்பினுள் இருந்த புழுக்களை அகற்றுவதற்கான சத்திரசிகிச்சை நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் இதைப் போன்று இருபது பேர் வரையிலானவர்களது உடம்பிலிருந்து சத்திரசிகிச்சை மூலம் புழுக்கள் அகற்றப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அகற்றப்பட்ட புழுக்கள் 3 முதல் 5 வரையிலான அங்குலங்கள் நீளமுடையவை எனவும் வெள்ளை நிறமுடையவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடலின்உட்புறத்தில்வெவ்வேறு பகுதிகளில் முட்டைகளை இட்டு இந்தப் புழுக்கள் உயிர் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டு வளர்ப்பு பிராணிகளான நாய் மற்றும் பூனை என்பவற்றின் மூலம் பெரும்பாலும் இந்தப் புழுக்கள் மனித உடலுக்குள் உட்புகுந்திருக்க வாய்ப்புள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மருத்துவ ஆய்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு மனித உடல்களிலிருந்து அகற்றப்பட்ட புழுக்கள் மற்றும் அவற்றின் முட்டைகள் பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தம்புள்ள ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (5)

# மைத்திரிபாலவின் பெயர் நோபல் பரிசுக்குப் பரிந்துரை

கொழும்பு, செப். 28

அமைதிக்கான நோபல் பரிசுக்கான பரிந்துரைப் பட்டியலில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைதிக்கான ஒஸ்லோ ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசு அடுத்த மாதம் அறிவிக்கப்படவுள்ள நிலையில், இந்தப் பரிசுக்குத் தகுதி பெற்றவர்களின் பட்டியலை அமைதிக்கான ஒஸ்லோ ஆய்வு நிறுவகம் வெளியிடவுள்ளது.

சுயாதீன மதிப்பீடுகளின் அடிப்படையில், அமைதிக்கான ஒஸ்லோ ஆய்வு நிறுவகம், 2002ஆம் ஆண்டு முதல் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படக் கூடியவர்களின் தகுதிப் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுக்குத் தெரிவு செய்யப்படக் கூடியவர்களின் பட்டியலில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பெயரையும் உள்ளடக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அமைதி, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளுக்காக இவருக்கு இந்தப் பரிசை அளிக்கலாம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (5)

# இளைஞர்களின் வழிதவறலுக்கு புலம்பெயர்ந்தவர்களும் பொறுப்பு

## சிவன் அறக்கட்டளை இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 28


இன்றைய இளைஞர்கள் வழிதவறிச் செல்வதற்குத் தாயக மண்ணைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, புலம்பெயர் தேசங்களில் வாழ்பவர்களுக்கும் பொறுப்பு உண்டு. இவ்வாறு சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். மண்ணின் கல்வி மேம்பாட்டுக்காக வெளியுறவுத் தாயக உறவுளுடன் கலந்துரையாடல் கரவெட்டி நெல்லியடியில் இருந்து புலம்பெயர்ந்து பரிஸ்நாட்டில்வாழும் கணேஸ் ராஜரட்ணம் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போருக்குப் பின்னரான எமது வடபுல தாயகத்தில் தமிழ் மக்கள் முகம் கொடுக்கின்ற மிகப்பெரும் சவால் கல்வி நிலையை இழந்து காணப்படுவதாகும். இந்த நிலையின் காரணமாக எமது சமூகம் பல வழிகளிலும் பின்தங்கிய நிலையை நோக்கி நகர்ந்துள்ளது.

போர் நிறைவுற்ற காலப் பகுதியிலிருந்து இன்று படிப்படியாகக் கல்வி வீழ்ச்சி கண்டுள்ளது. இளைஞர்கள் வழிதவறிச் செல்லக் கூடிய நிலையில் உள்ளனர். இதற்குப் பொறுப்புக் கூறக் கூடியவர்களாகத் தாய் மண்ணைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல தாய் மண்ணில் இருந்து சென்று புலம்பெயர் நாடு



களில் வாழும் தமிழ் உறவுகளுக்கு உண்டு. அரசு வெளியிடுகின்ற கல்வி மதிப்பீட்டு அறிக்கையில் நாங்கள் தெளிவாக ஆதாரங்களுடன் அறியலாம். கல்வியில் கொடிகட்டிப் பறந்த யாழ்ப்பாண மக்கள் பெரும் அபகீர்த்தியையும் அவமானத்தையும் மாணவர்களின் அடைவு மட்டங்களின் ஊடாகப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இது உண்மையிலேயே எமக்குக் கவலை தரும் விடயம். ஏனென்றால் கல்வியில் பின்தங்கியிருந்த மலையகச் சமூகம் எம்மையும் விட இன்று தலைதூக்கி நிற்கின்றது. (5)

# சகல மாவட்டங்களிலும் டிஜிட்டல் நூல் நிலையம்

கொழும்பு, செப். 28

நாட்டின் சகல மாவட்டங்களிலும் டிஜிட்டல் நூல் நிலயங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இலங்கைத் தகவல் தொழிநுட்ப நிறுவனம் தெரிவித்துள்ளது.

தேசிய நூல்நிலையத் திணைக்களத்துடனும் கல்வியமைச்சுடனும் இணைந்து டிஜிட்டல் நூல் நிலையத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் முதற் கட்டத்தில் கொழும்பு, குருநாகல், பொலநறுவை, பதுளை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இந்த நூல் நிலையங்கள் ஆரம்பிக்கப்படும்.

இந்த டிஜிட்டல் நூல் நிலையத் திட்டம் பற்றிய கலந்துரையாடலொன்று கடந்த வாரம் கல்வியமைச்சின் செயலர் சுனில் ஹெட்டியாராச்சி தலைமையில் கல்வியமைச்சில் நடைபெற்றது. (5)




## பாப்பரசருக்கு எதிர்ப்பலை

உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர், மதத்துக்கு எதிரான கொள்கைகளைப் பரப்புகின்றார் என்று தெரிவித்து அவருக்கு எதிர்ப்பலை ஏற்பட்டுள்ளது.
கத்தோலிக்க திருச்சபையின் பழமைவாதிகளிடம் இருந்து இந்த எதிர்ப்பு வந்துள்ளது. உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைமைக்கு எதிராக பழமைவாதிகள் எதிர்ப்பு வெளியிடுவது கடந்த 700 ஆண்டுகளில் இதுவே முதல் தடவை. 'திருமணம், விவகாரத்து, மறுமணம், கத்தோலிக்க ஆலயங்களில் நடைபெறும் சடங்குகள் உள்ளிட்ட ஏழு விதமான கொள்கைகளில் பாப்பரசருடன் உடன்படவில்லை' என்று அவர்கள் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர். (ம)

## மாராவியில் கடும் போர்

மணிலா, செப். 28
பிலிப்பைன்ஸின் மாராவி தீவு ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளின் பிடிக்குள் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் விழுந்தது. தீவை மீட்பதற்கான போரை பிலிப்பைன்ஸ் அரசு கடும் முனைப்பில் மேற்கொண்டு வருகின்ற போதிலும் நகர் இன்னும் மீட்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
பிலிப்பைன்ஸின் மாராவி தீவு கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடிக்குள் சென்றது. மாராவித் தீவில் வசித்து வந்த பாதிரியார்கள், கிறிஸ்தவ மக்கள் பலரையும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பிணையக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தது. நகரை மீட்கும் போர் தொடர்ந்து இடம்பெற்று வந்தது. எனினும் மாராவியை முழுமையாகக் கைப்பற்றிவிட முடியவில்லை. மாராவி மீட்கப்படுகிறது என்று பலமுறை தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இன்னும் மீட்புப் பணிகள் முழுமை பெறவில்லை.
பிலிப்பைன்ஸ் அதிபர் டுடேர்தே, போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். ஐ. இதனால் எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் ஆயுதம் தாங்கிய போதைக் குழு இணைந்து போரிடுகிறது என்று அறியவருகிறது. இந்தப் போர் இந்த மாதத்துக்குள் நிறைவு பெறும் என்று பிலிப்பைன்ஸின் ஊடகங்கள் கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



## ரொஹிங்யர்களுக்கு எதிராக இன...


### மியன்மாரின் ஐ.நா. சபைக்கான தூதுவர் தெரிவிப்பு

வொஷிங்டன், செப். 28
"மியன்மாரில் முஸ்லிம்களுக்கு எதிராக இன அழிப்பு எதுவும் நடத்தப்படவில்லை" என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான மியன்மார் தூதுவர் தெரிவித்தார்.
மியன்மாரில் ரொஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிராக இன அழிப்பு நடைபெறுகிறது என்று பங்களாதேஷ் தலைமை அமைச்சர் ஷேக் ஹசினா, ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் குற்றம் சாட்டியிருந்தனர். இந்தக் குற்றச்சாட்டை மியன்மாரின் தலைவர் ஆங் சாங் சூகி மறுத்து வந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபைக்கான மியன்மார் தூதுவர் ஹா டோ சுவானும் தற்போது இந்தக் குற்றச்சாட்டை முற்றிலுமாக மறுத்துள்ளார்.
இதுகுறித்து சுவான் "மியன்மாரில் முஸ்லிம்களுக்கு எதிராக இன அழிப்பு நடக்கவில்லை. இனப் படுகொலையும் நடக்கவில்லை. மியன்மார் தலைவர்கள் நீண்டகாலமாக சுதந்திரம் மற்றும் உரிமைகளுக்

# ரொஹிங்ய முஸ்லிம்கள் உணவின்றிப் பரிதவிப்பு



டாக்கா, செப். 28
பங்களாதேஷில் தங்கியுள்ள ரொஹிங்ய முஸ்லிம்கள் பெரும் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வருகின்றனர் என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.
பௌத்த நாடான மியன்மார், சிறுபான்மையினரான ரொஹிங்யர்களை இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது. இதனால் மியன்மாருக்கு எதிராக உலகளவில் கடும் விமர்சனங்கள் வைக்கப்பட்டு வருகின்றன.
கடந்த மாதம் 25ஆம் திகதி ரொஹிங்ய ஆயுதக் குழுவொன்று நடத்திய தாக்குதலில் சுமார் 10 சிப்பாய்கள் உயிரிழந்தனர்.
இதையடுத்து ரொஹிங்யர்கள் அதிகம் வதைபட்டார்கள். சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷில் தஞ்சம் அடைந்துள்ளனர். அவர்களுக்கு உணவளித்து பராமரித்து வருகிறது பங்களாதேஷ். எனினும் மக்களின் தேவையுடன் ஒப்பிடுகையில் வழங்கப்படும் உணவு சிறிய அளவே என்று சொல்லப்படுகிறது.
சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை மிகவும் நீண்ட வரிசையில் காத்திருந்தே உணவைப் பெறவேண்டிய நிலைமை. முறையான விநியாகம் இல்லாத காரணத்தால் உணவுக்காக மக்கள் மத்தியில் சண்டைகளும் ஏற்படுகின்றன. தள்ளுப்பாடுகளில் சிக்கி பலர் காயமடைகின்றனர். குறிப்பாக முதியவர்கள் தமது உணவைப் பெறுவதில் பெரும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர் என்றும் ரொயிட்டர்ஸ் குறிப்பிட்டுள்ளது.
மிகவும் நெருக்கமான முகாம்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதால், கொலரா, வாந்திபேதி உள்ளிட்ட சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படலாம் என்றும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.
ரொஹிங்ய முஸ்லிம்களுக்கு உணவு அளிப்பதற்காக உதவி செய்யுமாறு வளர்ச்சியடைந்த நாடுகளை ஐக்கிய நாடுகள் சபை கோரியிருந்தது. எனினும் பெரிய அளவில் உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## பலஸ்தீனர்கள் - இஸ்ரேலியர்கள் இடையே கலவ...

டெல் அவிவ், செப். 28
இஸ்ரேலின் மேற்குக் கரைப் பகுதியில் பலஸ்தீனர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இஸ்ரேலியப் பொலிஸார் மூவர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து அங்கு பலஸ்தீனர்கள் மற்றும் இஸ்ரேலியர்கள் இடையே கலவரம் வெடிக்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது.
பலஸ்தீனத்தின் பெரும் பகுதிகளை ஆக்கிரமித்து வைத்துள்ளது இஸ்ரேல். கிழக்கு ஜெருசலேம் பகுதியும் தற்போது இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அங்கு தனது குடியிருப்புக்களையும் இஸ்ரேல் அமைத்து வருகிறது.
இதை எதிர்த்து பலஸ்தீனர்கள் தொடர்ந்து போராட்ட...

# னெச்சூத்திகரிப்பு இல்லை

காகப் போராடி வருகிறார்கள். நாங்கள் இன அழிப்பு, இனப் படுகொலைகளைத்; தடுக்கும் நடவடிக்கைகளில்தான் இறங்குவோம். மேலும் அப்பாவிப் பொதுமக்களை பாதுகாப்பது, தீவிரவாதிகளுக்கு எதிராக சண்டையிடுவதுதான் ஒவ்வொரு அரசின் கடமை" என மேலும் தெரிவித்தார். (ம)





பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில், போதைப் பொருள் கடத்தல்கள் அதிகரித்துள்ள நிலையில், அங்கு தற்போது கடுமையாக தேடுதல் வேட்டைகள் நடைபெற்று வருகின்றன. போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய நூற்றுக் கணக்கானவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)




## உலகின் மிகப்பெரிய வைரம் 53ஆயிரம் டொலருக்கு ஏலம்

நியூயோர்க், செப். 28
உலகின் மிகப்பெரிய மற்றும் பழமையான பட்டை தீட்டப்படாத வைரம் 53 ஆயிரம் டொலருக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது.
கனடாவின் லூகரா வைர நிறுவனத்தில் அண்மையில் இந்த ஏலம் இடம்பெற்றது. இந்த வைரத்தை 105 சிறிய வைரங்களாக வெட்டலாம். பிரிட்டனின் பிரபல நிறுவனமொன்று குறித்த வைரத்தை ஏலத்தில் எடுத்துள்ளது.
இந்த வைரத்தை போட்ஸ்வானாவின் சுரங்கம் ஒன்றில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெட்டி எடுத்தனர். இது 2.5 முதல் 3 பில்லி யன் ஆண்டுகள் பழைமையானது என்று கருதப்படுகிறது. இதற்கு போட்ஸ்வானாவின் தேசிய மொழியில் 'நமது ஒளி' என்று பெயரிட்டிருந்தனர். (ம)

## வியக்க வைக்கும் நன்கொடை

வொஷிங்டன், செப். 28
அமெரிக்காவில் மருத்துவத் தம்பதிகள் இருவர் பல்கலைக் கழகம் ஒன்றுக்கு இலங்கை மதிப்பில் சுமார் 3 ஆயிரத்து 200 கோடி ரூபா நன்கொடையாக வழங்கியுள்ளனர். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கிரண் பட்டேல், பல்லவி தம்பதியரே இவ்வாறு நன்கொடை வழங்கியவர்களாவர்.
கணவன், மனைவி இருவருமே மிகப்பெரும் மருத்துவ வல்லுனர்கள்.
இவர்கள் சொந்தமாக அறக்கட்டளையையும் நடத்தி வருகின்றனர். தமது அறக்கட்டளையின் மூலமாக இந்தப் பெரும் தொகையை மியாமியில் உள்ள நோவா தென்கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கு வழங்கியுள்ளனர். "இந்தப் பல்கலைக் கழகம் ஒரு ஆண்டில் 250 மருத்துவர்களை உருவாக்கும்" என்று கிரண் பட்டேல் நம்பிக்கை தெரிவித்தார். (ம)




## பெண்கள் வாகனம் செலுத்த சவூதியில் அனுமதி !



ரியாத், செப். 28
பெண்கள் வாகனம் செலுத்துவது தடை செய்யப்பட்டிருந்த சவூதி அரேபியாவில் தற்போது அந்த நடைமுறை விலக்கப்பட்டு பெண்கள் வாகனம் செலுத்துவதற்கு உரிமங்கள் வழங்க மன்னர் சல்மான் முடிவு செய்துள்ளார்.
பழமைவாத நடைமுறைகளைக் கொண்டுள்ள சவூதி அரேபியாவில் பெண்களுக்கான பல்வேறு உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. வாகனம் செலுத்துவது, விளையாட்டுகளில் ஈடுபடுவது, மைதானத்தில் சில விளையாட்டுக்களை நேரில் பார்ப்பது என பல உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. சமீப காலமாக சவூதி அரசு தனது நிலைப்பாட்டில் சற்றே மாற்றங்களை கொண்டுவந்துள்ளது. அதன்படி, கடந்த ஒலிம்பிக் தொடர்களில் அந்த நாட்டின் வீராங்கனைகள் பங்கேற்றனர். மேலும், பன்னாட்டு பெண்கள் தினம் சமீபத்தில் அரண்மனையில் கொண்டாடப்பட்டது. இந்த நிலையில், அந்த நாட்டில் உள்ள பெண்கள் வாகனம் செலுத்துவதற்கு அனுமதியளிக்க மன்னர் சல்மான் முடிவு செய்துள்ளார் என்று சவூதி ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## கமலைப் பற்றிக் கேட்டு அவமானப்படுத்தாதீர்கள்

### சீமான் ஆவேசம்

சென்னை, செப். 28
"நடிகர் கமல் போன்றவர்கள் பற்றி கேள்விகளைக் கேட்டு என்னை அவமானப்படுத்தாதீர்கள்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.
சென்னையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"கமல் போன்றவர்கள் பற்றி கேள்வி கேட்டு என்னை அவமானப்படுத்தாதீர்கள். அவர் போன்றவர்கள் அரசியலுக்கு வரும்போது வரட்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம். தமிழக அரசு மின்சாரம் வாங்குவதற்கு 9 ஆயிரம் கோடி ரூபாயை செலவிடுவதில் முனைப்புக் காட்டுகிறது. ஆனால் உற்பத்தி துறையில் அந்தத் தொகையை முதலீடு செய்ய மறுக்கிறது. இதுபோன்று பல பிரச்சினைகள் உள்ளன. அவைகளைப் பற்றிக் கேளுங்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## மோடியின் இல்லத்துக்கு முன்பாக தமிழக விவசாயிகள் போராட்டம்

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில் போராடிவரும் தமிழக விவசாயிகள், 72ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
பருவ மழை பொய்த்ததால், தமிழகத்தில் விளைச்சல் பெரியளவில் இல்லை. இதனால் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும், வரட்சி நிவாரணம் வழங்க வேண்டும், கடன் சுமையால் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், காவிரி நதிநீர்ப் பங்கீட்டை முழுமையாக மேற்கொள்ள வேண்டும். அதைக் கண்காணிக்கத் தனி வாரியம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில் தமிழக விவசாயிகள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். தொடர்ந்து 72ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்தியத் தலைமை அமைச்சர் மோடியின் இல்லத்துக்கு முன்பாக நேற்று அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



## கலவரம் வெடிக்கும் சாத்தியம்

போராட்டம் நடத்தி வருகின்றனர். இத்தகைய பின்னணியிலேயே இந்த அசம்பாவிதமும் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.
அண்மையிலும் இவ்வாறான ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு பொலிஸார் உயிரிழந்தனர்.
இதையடுத்து அங்கு பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எழும் கேள்விகள்

புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை வெளியானது முதல், அதில் கூறப்பட்டுள்ளவற்றுக்கு எதிரானகருத்துக்களே ஆழமாகவும் உறுதியாகவும்பதிவு செய்யப்பட்டு வருகின்றன. பௌத்த சிங்களத் தரப்பிலிருந்தும், தமிழர் தரப்பிலிருந்தும்கூட அந்தக் குரல்களே ஓங்கி ஒலிக்கின்றன. அறிக்கையை ஆதரிப்போரின் கருத்துக்கள் ஒடுங்கிப் போயுள்ளன என்பது தெரிகிறது. இது எதிர்ப் பாளர்களுக்கு மேலும் உத்வேகத்தைக் கொடுக்கும்போது அவர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே செல்கிறது.

"எல்லோரும் சிறுபான்மையின மக்களுக்காகவே பேசுகின்றார்கள். சிங்கள பௌத்த மக்களுக்காகப் பேச எவரும் இல்லை. சிங்கள இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் புரட்சியில் ஈடுபடவேண்டியநிலைவந்துகொண்டிருக்கிறது. விரைவில் சிங்களப்புரட்சிவெடிக்கும்'' என்றுகுமுறியிருக்கிறார்பொதுபலசேனாஅமைப்பின்பொதுச்செயலாளர்கலகொடஅத்தே ஞானசார தேரர்.

தமிழ் மக்களுக்குக் கூட்டாட்சி அவசியமில்லை என்றும், நாட்டைப் பிரிக்கும் செயற்பாடுகள் அனைத்தையும் தடுக்க மகாநாயக்கர்கள் களமிறங்கினால் உயிரைக் கொடுத்து ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறார் என்றும்கூட அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு முஸ்லிம் மக்களோ, முஸ்லிம்நாடாளுமன்றஉறுப்பினர்களோதுணை போகமாட்டார்கள்என்றுசீறியிருக்கிறார்முஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரும், பிரதி அமைச்சருமான ஹரிஸ்.

மாகாணங்களின் இணைப்புத் தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் மகிந்த அணியினதும் நிலைப்பாட்டின் மீது முஸ்லிம்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்றும், இணைப்புக்கு எதிராக கிழக்கில் முஸ்லிம்களைத் திரட்டிப் போராட்டம்நடத்துவோம்என்றும்அவர்தெரிவித்திருக்கிறார். மொத்தத்தில்வடக்குகிழக்குஇணைப்புக்குஎதிரானவலுவான எச்சரிக்கைமணிஅடிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவேஅமைச்சர் ரிஷாத்தலைமையிலானகட்சியும்இணைப்பைமுழுமையாக எதிர்த்துள்ளமை கவனத்திற்குரியது.

வடக்குமக்களின்நிலைப்பாடும், முதலமைச்சர்விக்னேஸ்வரனின் பிரிவினைச் செயற்பாடுகளுமே அதிகாரப் பகிர்வு தொடர்பில் தம்மை அச்சத்துடன் செயற்பட வைப்பதாகச் சிறிலங்காசுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது. மாகாணங்களுக்குக்காணி, பொலிஸ்அதிகாரங்கள்வழங்கப்படுவதைஎதிர்ப்பதாகவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. ஒற்றையாட்சியை மாற்ற இடமளிக்கமாட்டோம், பௌத்தத்துக்கான முன்னுரிமையை இழக்க அனுமதிக்கமாட்டோம் என்றெல்லாமும்கூட அந்தக் கட்சியின் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில்வாழும் 75 வீத பௌத்தமக்களைப்பாதுகாக்க பௌத்த கொள்கையை உறுதிப்படுத்துவதில் தவறில்லை என்றும்கூட அவர் கூறியுள்ளார். அதாவது சிங்கள, பௌத்த கொள்கையைசுதந்திரக்கட்சிஒருபோதும்விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பது அதன் பொருள்.

புதிய அரசமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுத்து வழங்கப்பட்டுள்ள பரிந்துரையையே ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று கூறி மொத்த அறிக்கையையும் நிராகரித்திருக்கிறார் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச.

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியின் தலைவரான சுரேஸ் பிரேமச்சந்திரனும்கூட வழக்கம்போலவே இந்த இடைக்கால அறிக்கையை விமர்சித்துள்ளனர்.

இப்படி எந்தத் தரப்பாலும் வரவேற்கப்படாத ஓர் அறிக்கையாக மாறியிருக்கும் இடைக்கால அறிக்கை, புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்பயணம் குறித்த பலகேள்விகளைஎழுப்புகிறது. எல்லாச் சவால்களையும் தாண்டி இந்தப் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படுமா என்பது அதில் முக்கியமான கேள்வி. கூட்டமைப்பின்தலைவர்சம்பந்தன்சொல்வதைப் போல வடக்கு கிழக்கு இணைந்த, தமிழர்களின் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட, கூட்டாட்சித் தீர்வு புதிய அரசமைப்புக்கு ஊடாகச் சாத்தியம்தானா என்பது அதைவிடப் பெரிய கேள்வி?

# வாழ்ந்தாலும் கேப்பாப்பிலவில் வீழ்ந்தாலும் கேப்பாப்பிலவில்

## தமது நிலைப்பாட்டில் மக்கள் உறுதி

முல்லைக்கீதன்

முல்லைத்தீவு மாவட்டம், கேப்பாப்பிலவு மக்கள் தங்கள் சொந்த வாழ்விடங்களில் மீள்குடியேறுவதில் மிக நீண்ட இழுபறி நிலை காணப்படுகின்றது.

தமக்குச் சொந்தமான நிலங்களைக்கொண்ட 138 குடும்பங்களுக்குமாற்றுநிலம், வீடுபோன்ற வசதி வாய்ப்புக்கள் அரசால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட போதிலும், அவர்கள் தங்கள் சொந்த நிலங்கள்தான் தமது வாழ்வாதாரத்துக்குத்தேவைஎனக்கோரி தொடர் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களது போராட்டம் தற்போது 200 நாள்களைக் கடந்துள்ளது. தாங்கள் வாழ்ந்த மண்ணில்தான் தங்களது உடலங்கள் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று உறுதிபூண்டுள்ள அந்தத் தாய்மார்களின் ஆசை நிறைவேறுமா?

"கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி எங்கள் போராட்டத்தைத் தொடக்கினோம். 200 நாள்களுக்கு மேலாக வீதியே வீடான மாதிரி, கொட்டும் மழையிலும் கொளுத்தும் வெயிலிலும் உட்கார்ந்து இருக்கின்றோம்" என்று தமதுமனஉணர்வுகளைவெளிப்படுத்துகின்றார் கேப்பாப்பிலவைச் சேர்ந்த மாலா என்ற குடும்பப் பெண்ணொருவர்.

### நில விடுவிப்புக்குக் கால அவகாசம் கோருகின்றனர் அரசியல்வாதிகள்

எங்கள் அரசியல்வாதிகள் ஆரம்பத்தில் எங்கள் சொந்த மண்ணை விடுவித்துத் தருவோம் என்று உறுதி வழங்கினார்கள். ஆனால் இன்று வரை அவர்களால் அதனைச் செய்ய இயலவில்லை. இவர்களின் வாய்ப்பேச்சை நம்பி நாங்கள்ஏமாற்றம்அடைந்தது தான் மிச்சம்.

நாங்கள் வாழ்ந்தது எங்கள்பூர்வீகக் காணிகள்தான் என்பதைச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உரிய ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தியுள்ளோம். இவர்கள் தவணைகள் சொல்லிச் சொல்லி ஏமாற்றி வருகின்றார்கள். எவரும் தீர்க்கமான, சாதகமான முடிவைக் கூறுகிறார்கள் இல்லை. வடக்கில் படையினர் வசமுள்ள மக்களின் பல இடங்கள் விடுபட்டு வருகின்றன. ஆனால்எமதுவிடயத்தில் எல்லோரும் பாராமுகமாக நடந்துகொள்கின்றனர்..




### எமது நிலங்களின் வளங்களை அனுபவிக்கின்றனர் படையினர்

உண்மையில் எங்கள் மண்ணிலுள்ள வாழ்வாதார வளங்களை படையினர் அனுபவிக்கின்றனர். இங்கு வாழ்ந்த எங்கள் ஒவ்வொருவரிடமும் சொந்தமாக 100 தொடக்கம் 200 வரையான மாடுகள் இருந்தன. கஷ்டப்பட்டவர்களிடம்கூட 25 வரையான மாடுகள் இருந்தன. வேறுபலவளங்களுடாக போதியளவு வருமானம் எங்களுக்குக் கிடைத்து வந்தது.

10 தொடக்கம் 12 ஏக்கர் வரையான வயல் நிலக் காணிகள் எம் ஒவ்வொருவருக்கும் உள்ளன. மேட்டுக் காணிகள் என வீட்டுடன் இருக்கின்றன. வளங்கொண்ட எங்கள் மண்ணில் இன்று படையினர் விவசாய முயற்சிகளை மேற்கொண்டு அதிக இலாபம் ஈட்டுகின்றனர். தென்னைகளில் உள்ள தேங்காய்களையும் படையினர்தான் அனுபவிக்கின்றார்கள். இவ்வாறு பெரும் வருமானம் கிடைப்பதால் இராணுவத்தினர் எங்கள் மண்ணைவிட்டுவெளியேறத் தயங்குகின்றனர்.

கேப்பாப்பிலவு கடற்கரையில் 70 ஏக்கர்வரையானகாணியை விடுவிப்போம் என்று சொன்னார்கள். ஆனால் தற்போது அங்கு சுற்றுமதில் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். எங்கள் பூர்வீக இடத்தில் நாம் என்றைக்குக் குடியமர்கிறோமோ, அன்றுதான் நாங்கள் எங்கள் போராட்டத்தை நிறைவு செய்வோம். அதுவரை எமது போராட்டம்தொடரும்.

எங்கள் சொந்த மண்ணில் எங்களைச் சாகவிடுங்கள். நாங்கள் வாழ்ந்த மண்ணில்தான் தங்கள் உடலங்கள் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கும் எங்கள் தாய்மாருக்கு எந்தப் பதிலும் சொல்லமுடியாமல் நாங்கள் தவிக்கின்றோம்'' என்று போராட்டக் களத்தில் இருக்கும் மாலா என்ற பெண் விரக்தி தொனிக்கும் குரலில் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

### பிரச்சினைக்குத் தீர்வு காண கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமம் அமைப்பு

இந்த மக்களின் சொந்தக் காணிகள் படையினரின் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்ததால், மாற்றுக் காணிகள் இந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக, கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமம் என்று ஒன்று அமைக்கப்பட்டு அங்கு சூரிபுரம், சீனியாமோட்டை, கேப்பாப்பிலவு, பிலக்குடியிருப்பு பகுதிகளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த சுமார் 373 குடும்பங்கள் கடந்த 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதியன்று தற்காலிககொட்டகைகளில்மீள்குடியேற்றப்பட்டிருந்தனர். ஒரு குடும்பத்துக்கு கால் ஏக்கர்

வீதம் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. கேப்பாப்பிலவு மற்றும் அதனை அண்டிய பகுதிகளும் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக கடந்த 2014ஆம் ஆண்டு சீனியா மோட்டை பகுதியில் 14 ஏக்கர் விவசாய நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் அடுத்த கட்டமாக உடையாவெளி, பொறுக்கன்மோட்டை, ஈச்சம் புலவு ஆகிய வயல் மற்றும் மேட்டு நிலங்களான 150 ஏக்கர் விவசாய நிலங்கள் விடுவிக்கப்பட்டன.



பிலக்குடியிருப்பில் குறித்த சில பகுதிகள் இன்னமும் விமானப்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

பிலக்குடியிருப்பில் 78 குடும்பங்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகளும், மேட்டு நிலக் காணிகளும் இருந்தன. 78 குடும்பங்களுக்கும் கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் கால் ஏக்கர் காணி வீதம் வழங்கி வீடு மற்றும் மலசலகூடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

பிலக்குடியிருப்பில் வாழ்கின்ற மக்களுக்கான உதவிகள் வாழ்வாதாரங்கள் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை என மக்கள் தெரிவித்துள்ள போதிலும், அரச அதிகாரிகளால் பல வாழ்வாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு வாழ்கின்ற மக்களுக்குக் கிணறு கட்டிக் கொடுக்க முன்வந்தபோதும் சில மக்கள் தங்கள் மாதிரிக் கிராமத்தில்தான் கட்டி தருமாறு கோரியுள்ளதற்கு அமைவாக அங்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் பிலக்குடியிருப்பில் தற்போது உள்ள குடும்பங்களில் 8 குடும்பங்களுக்கு சூரிய மின்கலங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலக புள்ளி விவரங்கள் ஊடாக அறியமுடிகின்றது. மீண்டும் மக்கள் வாழ்வதற்கான வீட்டுத் திட்டங்கள் இவர்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை எனத் தெரியவந்துள்ளது. இலங்கை அரசின் வீட்டுத் திட்டங்கள் ஒருவருக்கு ஒருதடவைதான் வழங்கப்படுவது வழக்கம். அதற்கேற்றால்போல் இவர்களுக்கான வீட்டுத்திட்டம் இவர்களின் மாற்றுக் காணியில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதென பிரதேச செயலகம் ஊடாக அறிய முடிகின்றது.

### 482 ஏக்கர் காணிகள் படையினர் வசம்

கேப்பாப்பிலவு என்ற பல கிராமங்களை அடக்கிய பிரதேசத்தில், கட்டம் கட்டமாக படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த காணிகள் மக்களின் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுவரும் நிலையில், இன்றுவரை கேப்பாப்பிலவில் 35 குடும்பங்களுக்குச் சொந்தமான 42 ஏக்கர் காணியும் 9 குடும்பங்களுக்குச் சொந்தமான உறுதிக் காணியான 38 ஏக்கரும், 79 குடும்பங்களுக்குச் சொந்தமான 'பேர்மிற்' காணியான 172 ஏக்கரும், மக்களுக்குச் சொந்தமான 47 ஏக்கர் வயல் நிலங்களும், பெருந்தோட்டத்தைச் சேர்ந்த 150 ஏக்கரும் பொது விளையாட்டு மைதானம், கோயில்கள், பாடசாலைகளை உள்ளடக்கிய 8 ஏக்கர் காணியும் இதுவரை படையினரின் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கேப்பாப்பிலவில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்றி மக்களுக்குச் சொந்தமான மொத்தம் 482 ஏக்கர் காணிகளை மீட்டுத்தரக் கோரி அந்தப் பகுதி மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்த வண்ணமுள்ளார்கள். இந்த மக்களின் காணிகளை இலங்கை இராணுவத்தின் 59 ஆவது படைப்பிரிவு பயன்படுத்தி வருகின்றது. அதன்படி 285 குடும்பங்களக்குத் தலா 3 இலட்சம் ரூபா பெறுமதியுள்ள வீடுகள் 2014ஆம் ஆண்டு கேப்பாபிலவு மாதிரிக் கிராமம் என்ற பெயரில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவை தவிர ஒவ்வொன்றும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவில் 13 குழாய்க் கிணறுகள், ஒவ்வொன்றும் மூன்று இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் 16 பொதுக்கிணறுகள், முன்பள்ளிக் கட்டடம் ஒன்று, இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் பொது நோக்கு மண்டபம் ஒன்று, கிறிஸ்தவ ஆலங்கள் இரண்டு, இந்து ஆலயங்கள் 2, ஆரம்ப சுாதார நிலையம் ஒன்று, பொதுச் சந்தை ஒன்று, கிராம அலுவலர் கட்டடம் என்பனவற்றுடன் மக்களுக்குத் .தேவையான அடிப்படை வசதிகள் இந்த மாதிரிக் கிராம மக்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு வீதிகள், குறுக்கு வீதிகளும் செப்பனிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில்தான் இந்த மக்கள் தங்கள் சொந்தக் காணிகளைத் தமக்கு வழங்குமாறு கோரிப் போராடுகின்றனர். படையினர் மக்களுக்கு மாற்றுக் காணிகள், வீடுகள் கட்டிக் கொடுத்துள்ள நிலையில், குறித்த மக்களின் பகுதிகளில் ஒரு நாட்டின் படைப்பிரிவு ஒன்றின் தேவைக்கான அனைத்து நிர்வாக செயற்பாட்டின் மையமாகவும், இந்த இடங்களை பயன்படுத்தி வருகின்றார்கள் என்பது உண்மை.

இந்த நிலையில் தமது பூர்வீக நிலங்களுக்காகப் போராட்டம் நடத்தும் மக்களது குறிக்கோள் என்ன என்று அவர்களது போராட்டத்துக்குதலைமையேற்று நடத்தும் ஆறுமுகம் வேலாயுதம் என்பவரிடம் வினவினோம்.

### பல்வேறு வளங்கள் கொண்டுள்ள பகுதி படையினரது கட்டுப்பாட்டில்

இந்தப் பகுதியில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த மக்களில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் மேட்டு நிலங்களும், வயல்நிலங்களும், பயன்தரு தென்னை மரங்களும் இருந்துள்ளன. இவற்றின் மூலம் இந்த மக்கள் நல்ல வருமானம் ஈட்டி வந்துள்ளனர். அத்தோடு இவர்களில் ஒரு சாரார் கடற்றொழில் செய்து வந்துள்ளனர். அவர்கள் வாழ்ந்த இடத்தில் பல வகையான வளங்கள் காணப்படுவதாகவும், தற்போது தங்களை குடியேற்றியுள்ள கால் ஏக்கர் காணியில் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள் தங்களுக்குத்திருப்தி தருவதாக இல்லை என்றும், கால் ஏக்கர் காணியில் தங்களால் என்ன வருமானத்தை ஈட்ட முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்?

இந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் முன்னர் பெரும்பாலும் மாடு வளர்த்தும்; மேட்டு நிலப் பயிர்ச் செய்கை மேற்கொண்டும் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்தி வந்திருந்தனர். தற்போது இவர்கள் வாழும் இடத்தில் இருந்து வருமானம் எதனையும் பெற்றுக் கொள்ள இயலாதென கவலையுடன் தெரிவித்தனர். அரசு இவர்களது காணிப் பிரச்சினை தொடர்பாக பல்வேறு கட்ட பேச்சுக்களை மேற்கொண்ட போதிலும் தங்கள் நிலைப்பாட்டில் இருந்து தாங்கள் விட்டுக் கொடுக்கவில்லை என உறுதிபடத்தெரிவிக்கின்றார்கள்.

இந்த மக்களின் காணிகளை விடுவிக்க மீள்குடியேற்ற அமைச்சு படைத்தரப்புடன் பேச்சுக்களை நடத்தி படையினர் வெளியேறுவதற்கான செலவுகளை வழங்க முன்வந்துள்ளது. இதன் முதற்கட்டமாக படைத்தரப்புக்கு 5 மில்லியன் ரூபா செலுத்தி 189 ஏக்கர் காணி படையினரால் விடுவிக்கப்பட்டாலும், இங்கு போராட்டம் நடத்துவர்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. வெளிநாடுகளில் வாழ்கின்ற மக்களது காணிகள் தான் விடுவிக்கப்பட்டுள்ளன.

> கேப்பாப்பிலவில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்றி மக்களுக்குச் சொந்தமான மொத்தம் 482 ஏக்கர் காணிகளை மீட்டுத்தரக் கோரி அந்தப் பகுதி மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்த வண்ணமுள்ளார்கள். இந்த மக்களின் காணிகளை இலங்கை இராணுவத்தின் 59 ஆவது படைப் பிரிவு பயன்படுத்தி வருகின்றது.

### கேப்பாப்பிலவு காணிகளை விடுவிக்க நிதி வழங்கும் மீள்குடியேற்ற அமைச்சு

கேப்பாப்பிலவு மக்களின் 111 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கு 148 மில்லியன் ரூபா பணத்தை மீள்குடியேற்ற அமைச்சால் படைத்தரப்புக்கு வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

அரசின் மாற்றுக் காணிகளையும், வீட்டுத்திட்டங்களையும்பெற்றுக்கொண்டாலும் மக்கள் தங்கள் சொந்த இடங்களிலேயே குடியேறத் துடிக்கின்றார்கள். இந்த மக்கள் தமது முன்னைய சொந்த வாழ்விடங்கள்தான் தங்களுக்கு நிம்மதியான வாழ்வையும் வருமானத்தையும் தரும் என நம்புவதை ஏற்க முடிகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த மக்களின் காணிகளை விரைவில் விடுவிப்பதன் ஊடாக இந்த மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு வழிவகுத்துக் கொடுக்க இயலும் என்பது திண்ணம்.




## நற்செயல்களை பாராட்டி உற்சாகப்படுத்துவோம்

எம்மால் இயலாவிட்டாலும், எம் மத்தியில் நிகழும் சில போற்றுதலுக்குரிய செயல்களைக்கண்டு மகிழ்ந்து குறைந்த பட்சம் அந்தக் காரியங்களை ஆற்றுவோரை வாழ்த்தி நன்றி பாராட்டியாவது திருப்திகொள்ள மனம் உந்துகிறது.

கடந்த வாரம் பிரிட்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் மகத்தான கைங்கரியத்தில் கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் தேவஸ்தானத்தில் "நாற்பதில் நாற்பது" எனும் பெருமைக்குரிய திருமண வைபவம் நடைபெற்றது. உண்மையில் கண் கொள்ளாக் காட்சி என்பது இதனைத்தான். ஏழை மக்கள் ஒரு சில மாற்றுத்திறனாளிகளும் மணமேடை கண்டு திருமணம் காண்பது அவர்களின் பொருளாதாரத்தில் சற்ற சிரமமான ஒன்றே! இதனைச் செயற்படுத்தி தாலி உட்பட சீர்வரிசைகளும் உதவிகளும் வழங்கி, பிரிட்டன் சைவ முன்னேற்றக் கழகத்தினர் வரலாற்றுச் சாதனையாக்கியுள்ளனர்.

தமிழ் நாட்டில் மிகப் பணபலம் மற்றும் அரசியல் பலத்துடன் அரசியல் இலாபம் கருதி தி.மு.க., அ.தி.மு.க, (ஐயா + அம்மா) கட்சிகளின் சார்பில் இவ்வாறான இலவச திருமணங்கள் அடிக்கடி நடைபெறுவதுண்டு. எனினும் அரசியல் ஆதாயமோ, வேறு நோக்கங்களோ இன்றி, கேளிக்கைகளுக்கும் வெறும் புகழ்ச்சிக்கும் பணத்தை அள்ளி வீசும் நம்மவர்கள் மத்தியில் நாற்பது இளம் சோடிகளை மங்கலகரமாக மணமாலை சூட வைத்த பெருமை இந்தச் சிந்தனையாளர்களையே சாரும்.

இவைபோன்ற மகோன்னத கைங்கரியங்கள் வடக்குக் கிழக்கு தமிழர்கள் மத்தியில், பல்கிப் பெருகட்டும். உண்மையில் இவ்வாறான தேவைகள் வடக்குக்கிழக்கில்தான் அதிகம் உள்ளன. எனினும் இந்த நிகழ்வில் குறைவான வடக்குக்கிழக்கு தம்பதிகளே தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். ஆயினும் இலங்கைத் திருநாடு முழுமையையும் கருத்தில்கொண்டு பார்க்கும் போது, இது வரவேற்கப்பட வேண்டிய விடயமே.


இத்தகைய உயர்ந்த சிந்தனைக்கும், செயற்பாட்டுக்கும் உரியவர்கள் உண்மையில் போற்றுதலுக்குரியவர்கள்.

நா.துஷாந்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஓகஸ்ட் மாதத்துக்கான பணவீக்கம் அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு




தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையான வருடத்தின் மீதான பணவீக்கமானது நடப்பாண்டின் ஓகஸ்ட் மாதத்தில் அதிகரிப்பினை பதிவு செய்துள்ளதென தொகைமதிப்பு மற்றும் புள்ளி விவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதத்தில் 6.3 வீதமாக இருந்த பணவீக்கமானது ஓகஸ்ட் மாதத்தில் அதிகரிப்பினை வெளிக்காட்டி 7.9 வீதமாகப் பதிவாகியுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பற்றி அறிக்கையில் பின்வரும் விடயங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த ஓகஸ்ட் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கப் பங்களிப்புகள் முறையே 5.3 வீதம், 2.7 வீதமாக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நிலவிய ஆகக் குறைந்த விலை மட்டங்களை பிரதிபலிக்கும் வகையில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளினதும் பங்களிப்புகள் முறையே 1.8 வீதம், 2.6 வீதமாகக் காணப்பட்டுள்ளது.

> “ஓகஸ்ட் மாதத்தில் உணவுப் பொருள்களின் செலவுப் பெறுமதி குறைவுக்குக் காரணமாக அரிசி,மரக்கறி,புதிய மீன்,கோழி இறைச்சி,சின்ன வெங்காயம்,வெள்ளைப்பூடு,தேங்காய் எண்ணெய் மற்றும் மிளகாய்த் தூள் ஆகியவற்றின் விலைகளில் ஏற்பட்ட குறைவு குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் பதிவாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 122.3 ஆக காணப்படுகிறது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதம் மீதான மாத மாற்றங்கள் என்ற வகையிலே ஒப்பிடும் போது கடந்த ஜூலை மாதத்தில் பதிவாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 122.4 ஆக இருந்து கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 122.3 ஆகக் குறைவடைந்துள்ளது. இதனை ஜூலை மாதத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 0.1 சுட்டெண் புள்ளி அல்லது 0.1 சதவீத அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளது.

மேலும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் தேங்காய், உருளைக் கிழங்கு, நெத்தலிக்கருவாடு, பெரிய வெங்காயம், பச்சை மிளகாய், எலுமிச்சம் பழம், தேயிலைத் தூள், வாழைப்பழம் மற்றும் மாம்பழம் மற்றும் மிளகாய்த் தூள் என்பன குறித்துப் பதிவாகியுள்ளன.

(ஓ)



# இலங்கை மருத்துவ சாதனத்துறை வர்த்தக சம்மேளனத்தின் புதிய குழுமம் நியமனம்

இலங்கை மருத்துவ சாதனத் துறை வர்த்தக சம்மேளனத்தின் 2017 ஆண்டுக்கான புதிய குழுமம் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மருத்துவ சாதனத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் 47 உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்தக்குழுமமானது கொள்கை முயற்சிகள் மற்றும் தொழிற்றுறை பங்குதாரார்கள், அரச சுகாதார அதிகாரிகள் மற்றும் பொது மக்களிடையேயான பேச்சுக்களுக்குப் பொறுப்பாகச் செயற்படவுள்ளது.

இந்தப் புதிய குழுமத்தின் தலைவராக டிலிகென்ஸ் ஹெல்த்கெயார் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான சமன் ஹூலான்கமுவ செயற்படுவதுடன், டில்ரஞ்ஜன் ஜேக்கப் மற்றும் ஏ. ஆர். ஜேம்ஸ் ஆகியோர் உப தலைவர்களாகவும் செயற்படவுள்ளதுடன் இந்திக்க ராஜகருணா, மோகன் ராஜ், சமந்த செனவிரத்ன, எரந்தஜித் ரணசிங்க, விஜித் மாதம்பே, மிலிந்த மல்லிகாராச்சி, டிலக் பெர்ணாந்து, டி. சயந்தன், நிரஞ்சன் செல்வதுரை, சிரான் டி மெல், சமன் பீரிஸ் மற்றும் சஞ்ஜீவ சமரசிங்க ஆகியோர் நிர்வாகக் குழுவில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மருத்துவ சாதனத் துறை வர்த்தக சம்மேளனமானது (SLCMDI) 2015 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுடன் மருத்துவ சாதனங்கள் மற்றும் கருவிகள் என்பவற்றுக்கான மிக வேகமாக வளர்ந்து வரும் புதுமையான துறையை குறிப்பாக, பிரதிநிதிப்படுத்துவதுடன் தங்களது பிரச்சினைகளை முன்வைக்கும் நோக்கத்துடனேயே ஆரம்பித்துவைக்கப்பட்டது. நற்தரம் வாய்ந்த மருத்துவக் கருவிகளை ஊக்குவிப்பது, சுகாதாரத் துறையுடன் தொடர்புபட்ட சகல பங்குதாரர்களையும் இணைப்பது, உறுப்பினர்களிடையே உறவுகளை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல், உறுப்பினர்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் மத்தியஸ்தராகச் செயற்படுதல், மருத்துவக் கருவிகளின் ஊக்குவிப்பு மற்றும் விற்பனைக்கான ஒழுக்க நெறிமுறை வழிகாட்டல்களை அமைத்தல், கருவிகளின் உள்நாட்டுத் தயாரிப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் மருத்துவ சாதனங்கள் மற்றும் ஒப்பனைப் பொருள்களின் விதிமுறைகளை முன்னிலைப்படுத்துவதில் தொழிற்றுறை மற்றும் அரச சுகாதார அதிகாரிகளிடையே மத்தியஸ்தராக செயற்படுதல் போன்றன இவர்களின் முக்கிய நோக்கங்களாக காணப்படுகின்றமை நோக்கத்தக்கது.

மேலும் இந்தச்சம்மேளனமானது சுகாதார அமைச்சு, அரச மருந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோக பிரிவு மற்றும் உயிர் மருத்துவ பொறியியல் பிரிவு என்பனவற்றுடன் இணைந்து மருத்துவ சாதனங்களுக்கான அர்ப்பணிப்புடனான ஒப்பந்த வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தும் பொருட்டு செயற்படுவதுடன், கோப்புக்களை கணினி மூலமாக சமர்ப்பித்தலை அறிமுகப்படுத்தும் பொருட்டு தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்துடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஓ)

# இறப்பர் மூலப்பொருள் உற்பத்தியில் வீழ்ச்சி நிலை

## 2016 ஆம் ஆண்டு 10.72 வீதமாகப் பதிவு



இலங்கையின் இறப்பர் மூலப் பொருள் உற்பத்தி கடந்த ஆண்டு 10.72 வீத வீழ்ச்சியை வெளிக்காட்டியுள்ளது. அதன் கொள்ளளவு 79.1 மில்லியன் கிலோ கிராமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இந்தத் தகவல்கள் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

கடந்த 50 வருடங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது 2016 ஆம் ஆண்டு மிகக் குறைந்தளவு இறப்பர் மூலப் பொருள் உற்பத்தி செய்த ஆண்டாகப் பதிவாகியுள்ளது.

விலை நிர்ணயங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி நிலை காரணமாகவே இந்தக் குறைவான இறப்பர் மூலப்பொருள் உற்பத்தி பதிவாகியுள்ளதாகவும் ஒரு சில இறப்பர் உற்பத்தியாளர்கள் இறப்பர் மரங்களை அழித்து மர வேலைப்பாடுகள் மற்றும் விறகுத் தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

தவிர பன்னாட்டுச் சந்தையில் ஏற்பட்டுள்ள எண்ணெய் விலை நிர்ணய வீழ்ச்சி இறப்பர் விலையின் வீழ்ச்சிக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் இறப்பர் கைத்தொழில் துறையானது கடந்த பல வருடங்களாக பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்து வருகின்றது. கடந்த வருடம் ஏற்பட்ட விற்பனை வீழ்ச்சியின் காரணமாக சில இறப்பர் கைத்தொழில் உற்பத்தி நிறுவனங்கள் தங்கள் பணியை இடைநிறுத்தியுள்ளமை குறித்து நோக்கத்தக்கது.

(ஓ)


## பங்குச்சந்தைத் தகவல்கள்

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

27/9/2017
www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | ↓ -0.14 | 6,419.47 | 6,419.61 |
| S&P SL20 | ↓ -13.02 | 3,672.39 | 3,685.41 |
| வியாபாரப்புரள்வு | | 738,265,790 | 532,338,080 |
| உள்நாடு:- கொள்வனவு | | 588,380,610 | 429,107,328 |
| விற்பனை | | 675,322,620 | 374,921,920 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 149,885,184 | 103,230,776 |
| விற்பனை | | 62,943,148 | 157,416,160 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜே.எல் மோரிஸன் | MORI.N | 535 | 151,685 | 125,253,644 |
| றிச்சட் பிறிஸ் | RICH.N | 13.5 | 5,891,113 | 77,429,942 |
| டயலொக் | DIAL.N | 12.1 | 4,565,143 | 55,238,230 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 163 | 336,019 | 54,781,783 |
| சம்பத் வங்கி | SAMP.N | 301 | 174,031 | 52,235,056 |
| லங்கெம் டெவெலப்மென்ட்ஸ் | LDEV.N | 9.30 | 2,386,941 | 22,970,272 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 233 | 94,665 | 22,052,475 |
| லங்கா ஓரிஸ் லீசிங் | LOLC.N | 126.9 | 172,573 | 21,880,905 |
| நேஷனல் டெவலப்மென்ட் வங்கி | NDB.N | 127 | 147,553 | 18,745,700 |
| மல்வத்த பியாள்டேசன் | MAL.N | 9.3 | 1,912,334 | 17,639,217 |

அறிவித்தல்கள் -

பங்குலாபம்

மெர்க்கன்டைல் முதலீடுகள்(MERC)- Rs. 7.00

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 295 |
| பரிமாற்றத்தில் | ↑ | 238 |
| விலை உழைப்பு | ↓ | 10.7 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.4 |
| பங்குலாப விளைவு | ↓ | 2.9 |

# நவராத்திரி காலத்தில் தனித்துவமானதோர் இடத்தை வகிக்கும் கலைமகள் வழிபாடு

மதுரகவி அருளானந்தன்



திருவருட்சக்தியும் உலகமாதாவுமாகிய உமாதேவியை விசேடமாக வழிபட்டு அருள்பெறுவதற்குரிய புண்ணிய காலமே நவராத்திரியாகும். ஒன்பது இரவுகள் கடைப்பிடிக்கப்படும் இந்த வழிபாட்டில் முதல் மூன்று இரவுகளில் துர்க்கையாகவும் அடுத்த மூன்று இரவுகளில் மகாலட்சுமியாகவும் இறுதி மூன்று இரவுகளில் சரஸ்வதியாகவும் பாவனை செய்து அம்பிகையை வழிபடுவது சைவர்களது பாரம்பரியமான மரபு.

**சக்தியாகிய நாமகள்**

நாமகள் எல்லாச் சமயத்தினராலும் பூஜிக்கப் படுகிறவள். இலங்கை நாட்டிலும் விநாயகர் வழிபாடும் கலைமகள் வழிபாடும் எல்லாச் சமயத்தினராலும் மேற்கொள்ளப்படுகின்றன.

'பத்தினிதெய்யோ' எனச் சிங்களவர்களாக சிறப்பாகப் போற்றபடுகின்றாள். இக்கலைமகளானவள் இதிகாச புராண காலங்கள் தொட்டுச் சிறப்பாகப் போற்றப்பட்டு வந்துள்ளாள். கலைகளுக்கு ஊற்றாக விளங்கும் கலைமகள் நவராத்திரி விரதத்தில் சிறப்பிடம் பெறுகின்றாள்.

**வரலாறுகளில் போற்றப்படும் கலைமகள்**

**குமரகுருபரர் கலைமகளை வழிபட்டார் :** குமரகுருபர சுவாமிகள் கலைமகளை வழிபட்டு உன்போற் 'கண் கண்ட தெய்வம் உளதோ சகல கலா வல்லியே' என்று பாடியிருக்கின்றார்.

**கவிச்சக்கரவர்த்தி கம்பர், நாமகளின் பக்தர்:** தமிழ்ப் புலவர்களில் ஈடும் எடுப்புமில்லாத கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் நாமகளின் பக்தர். அவர் பாடிய 'சரஸ்வதி அந்தாதியே' இதற்குச் சான்று.

**ஒட்டக் கூத்தர் 'கலைமகள்' கோயில் நிறுவினார் :** ஒட்டக்கூத்தர் கூத்தனூரில் கலைமகள் திருக்கோயிலை நிறுவினார். அந்த ஊருக்கு அவர் பெயராலே பெயர் அமைந்தது.

அரிசிலாற்றங்கரையில் அமைந்த திருக்கோயில் எழுந்தருளியிருக்கும் அந்த பெருமாட்டியை "ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழுதியே" என்று 'தக்கயாகப் பரணியில்' ஒட்டக்கூத்தர் வாழ்த்துகிறார்.

**காளமேகப் புலவர் கலைமகளின் அருள்பெற்றவர் :** காளமேகப் புலவரும் கலைமகளின் அருள் பெற்று மன்னனோடு சரி ஆசனத்தில் வீற்றிருந்தவர். தமிழ்ச் சங்கத்தில் இருந்த சங்கப் பலகையைச் 'சரஸ்வதி பீடம்' என்றும் அங்கு வீற்றிருந்த நாற்பத்தொரு புலவர்களும் கலைமகளின் அவதாரம் என்றும் 'திருவிளையாடற் புராணம்' கூறுகின்றது.

**தமிழ் மூதாட்டி ஔவை கலை மகளின் அவதாரம் :** பல அறிஞர்களும் தமிழ் மூதாட்டி ஔவையாரை கலைமகளின் அவதாரம் என்று போற்றுகின்றனர்.

**திருவள்ளுவ மாலையை கலைமகளே பாடினாள் :** திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரமாக பல பாடல்கள் அமைந்த 'திருவள்ளுவமாலை' என்ற நூல் ஒன்று இருக்கிறது. அதில் கலைமகளே பாடியதாக ஒரு பாடல் வருகிறது.

**நான்முகன், வியாசர், திருவள்ளுவர் நாவிலிருந்து ஆட்சி செய்தவள் சரஸ்வதி:** "நான் முதலில் நான்முகன் நாவில் இருந்து நான்முறைகளைப் பாடினேன் பின் வியாசருடைய நாவில் அமர்ந்து பாரத்தைப் பாடினேன் பின் திருவள்ளுவர் வாக்கில் இருந்து திருக்குறளை அருளினேன்." என்ற கருத்தை அத்தேவி பாடிய வெண்பாவில் காண்கிறோம்.

> ஒன்பது இரவுகள் கடைப்பிடிக்கப்படும் இந்தவழிபாட்டில் முதல் மூன்று இரவுகளில் துர்க்கையாகவும் அடுத்த மூன்று இரவுகளில் மகாலட்சுமியாகவும் இறுதி மூன்று இரவுகளில் சரஸ்வதியாகவும் பாவனை செய்து அம்பிகையை வழிபடுவது சைவர்களது பாரம்பரியமான மரபு.





ஆகமங்களிலும் சாஸ்திரங்களிலும் ஆங்காங்கே வழங்கும் கதைகளிலும் நாமகளைப் பற்றிய செய்திகள் கணக்கில்லாமல் இருக்கின்றன. இத்தகு சிறப்புக்களைச் சேர்க்கின்ற நவராத்திரி விழாவில் கலைமகள் வழிபாடு தனித்துவமானதோர் இடத்தை வகிக்கின்றது அந்தக் கல்வித் தெய்வமான கலைமகளின் அருள்பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக.

**விஜயதசமி**

நவராத்திரியில் பத்தாவது நாள் விஜய தசமியாகக் கொண்டாடப்படுகின்றது. அந்த விழாவைத் 'தசரா' எனவும் கொண்டாடுகின்றோம். இந்து ஆலயங்களில் நடைபெற்று வரும் ஒரு முக்கியமான பூசை 'மானம் பூ' என அழைக்கப்படும்.

இது மகிடாசுர சங்காரமாகும். கன்னி விக்கிரமன் என்னும் மகிடாசுரனைச் சங்கரித்தமையால் அம்பிகைக்கு மகிடாசுரமர்த்தனி என்னும் ஒரு திருநாமமும் உண்டு. இந்த சங்காரத்தை நோக்கமாகக் கொண்டு ஆலயங்களில் வன்னிமரம் அல்லது வாழை மரத்தை நாட்டி மகிடாசுரனைத் தேவி சங்காரம் செய்ததாகப் பாவனை பண்ணி அந்த மரத்தை வெட்டி விழா கொண்டாடுவர். மகிடாசுரன் என்பவன் கொழுத்த எருமைக்கடா போல மாட்டுத் தலையுடன் காட்சி கொடுப்பான். மகிடாசுர சங்காரம் என்பது உண்மையில் ஆன்மாக்களைப் பீடித்த ஆணவமலத்தை அழித்தல் எனப்பொருள்படும். நவராத்திரியில் ஒன்பது தினங்களும் மெய்யன்போடு தேவியை வழிபட்டுப் பெற்ற சக்தியால் ஆணவ மலத்தை ஒழித்துவிடமுடியும். இந்த நிலையில் ஞானம் கைவரப் பெற்றநிலை ஏற்படும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

**மகாபாரதத்தில் விஜயதசமிக் குறிப்புகள்**

பாண்டவர்கள் அஞ்ஞாதவாச காலத்தில் ஆயுதங்களை ஒரு வன்னிமரப் பொந்தில் ஒளித்து வைத்திருந்தனர்.

அஞ்ஞாதவாசம் முடிந்ததும் தமது ஆயுதங்களை எடுத்து வன்னிமரத்தைவாளால் வெட்டி விட்டனர். இந்தத்தினம் விஜயதசமி யாகும். வித்தைகள் ஆரம்பிப்பதற்கும் உகந்த தினமாகும்.

**சீதாபிராட்டியை மீட்க ராமபிரான் நவராத்திரி விரதம் கடைப்பிடித்தார்**

சீதாபிராட்டியை இழந்த இராமபிரான் கிட்கிந்தையிற் கவலையுடன் இருந்த வேளை அங்கு வந்த நாரத மகரிசி இராம பிரானிடம் நவராத்திரி மகிமை பற்றிக் கூறினார். இராம பிரான் நாரதர் உதவியுடன் நவராத்திரி விரதம் நோற்றார். இதனால் அம்பிகையின் அருள்பெற்று இராவணனை வெற்றி பெற்று சீதையை சிறை மீட்டார்.

இன்று ஆலயங்கள் பாடசாலைகள் வீடுகள், வர்த்தக தொழில் நிறுவனங்கள் போன்ற இடங்களிலெல்லாம் இந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. கலைமகள் கல்வித்தெய்வமாக விளங்குவதால் நவராத்திரியில் சிறப்பிடம் பெறுகின்றாள். எனவே இத்தகு சிறப்பு வாய்ந்த கலைமகள் விழாவைக் கொண்டாடி எல்லாச் சிறப்புக்களையும் பெற்று வாழ்வோமாக.

# பத்தி எழுத்து

## றொஹிங்யர்களை புறக்கணித்தமை படுபாதகச் செயல்

இலங்கைத்தீவில்றொஹிங்யஅகதிகள் ஏற்கப்படமாட்டார்கள் என்ற தகவலை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவெளிப்படுத்தியுள்ளார். அண்மையில், சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் “றொஹிங்ய முஸ்லிம்கள் இலங்கைக்குள் அனுமதிக்கப்படுவார்களா?” என்று கேட்டிருந்தனர். அவர்களின் கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே தலைமை அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். தற்போது ஆட்சியில் இருக்கும் கூட்டு அரசும், சிறுபான்மை மக்கள் மத்தியில் எவ்வித ஈவிரக்கமும் இல்லாமலேயே செயற்படுகிறது என்பதற்கு தலைமை அமைச்சரின் இந்த அறிவிப்பு மேலும் ஓர் ஆதாரமாக அமைந்துள்ளது.

இலங்கையைப் போலவே மியன்மாரும் பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு நாடுதான். இங்கு தமிழர்கள் போல் அங்கு சிறுபான்மையாக றொஹிங்ய முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இங்கு எமது உரிமைகள் மறுக்கப்பட்டதுபோல் மியன்மாரிலும் றொஹிங்யர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இங்கு விடுதலைப்புலிகள் போராடியது போல் அங்கும் றொஹிங்ய ஆயுதக் குழு போராடி வருகிறது. கடந்த மாதம் 25ஆம் திகதி றொஹிங்ய ஆயுதக் குழு நடத்திய தாக்குதலில் 10 சிப்பாய்கள் உயிரிழந்தனர். இதன் பின்னரேயே றொஹிங்யர்களுக்கு எதிராக மனித வேட்டையைப் பல மடங்காக அதிகரித்துள்ளது மியன்மார்.

றொஹிங்ய ஆண்கள் ஈவிரக்கம் இல்லாமல் கொல்லப்படுகின்றனர். றொஹிங்யப் பெண்களின் கற்பு சீருடையினரால் சின்னாபின்னமாகிறது. வீடுகள் எரியூட்டப்படுகின்றன. தமது மூச்சைத் தக்கவைப்பதற்காக லட்சக்கணக்கான றொஹிங்யர்கள் அயல்நாடுகளுக்கு தப்பித்துச் செல்கின்றனர். பங்களாதேஷில் மட்டும் சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் றொஹிங்யர்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

றொஹிங்யர்களுக்கு ஆதரவாகத் துருக்கி உள்ளிட்ட நாடுகளும் ஐரோப்பிய நாடுகள் பலவும் குரல்கொடுத்துள்ளன. ஆனால் ஆசிய நாடுகள் வாய்மூடி மௌனியாகவே உள்ளன. றொஹிங்யர்களுக்கு எதிராக இந்தியா ஏற்கனவே தனது கதவுகளை அடைத்துள்ளது. இந்தியாவில் தற்போதுள்ள றொஹிங்யர்களை மீண்டும் மியன்மாரிடம் ஒப்படைக்கும் விதமான நடவடிக்கைகளுக்கும் இந்தியா பரிசீலித்து வருகிறது. இந்த நிலையில் சிறுபான்மையினர் விவகாரத்தில் ஈவிரக்கம் எனக்கும் இல்லை என்பதை றொஹிங்யர்கள் மூலமாகவும் பன்னாட்டுச் சமூகத்துக்கு உரக்கச் சொல்லியுள்ளது இலங்கை.

மோடி, றொஹிங்யர்கள் விவகாரம் தொடர்பில் கேட்டபோது மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் சூகி, “காஷ்மீரில் என்ன நடக்கிறதோ, அதுதான் ரக்கினேயில் நடக்கிறது” என்று சொன்னாராம். இதன்படி பார்த்தால் றொஹிங்யர்களுக்கு இலங்கை ஆதரவு கொடுத்தால், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மியன்மாரும் குரல் கொடுக்க எத்தனிக்கும். அது இலங்கை மீது இன்னும் அழுத்தங்கள் வரக் காரணமாகலாம். எனவே இவ்வாறு வீண் சிக்கலில் மாட்டிக் கொள்ளாது கூட்டுக் களவாணிகளாக இருந்துவிட்டுப்போக முடிவெடுத்துள்ளது கூட்டு அரசு.

# புரட்டாதி மாத ராசிபலன்

(17.09.2017 – 17.10.2017) உங்களுக்கு எப்படி?



## மகரம்

ஓரளவு நன்மை

மற்றவர்களின் மனம் புண்படும்படி நடந்து கொள்ளக் கூடாது என்பதில் அதிக ஆர்வம் காட்டும் நீங்கள், கலகலப்பாக சிரித்துப் பேசி எதிரியையும் தன்வயப்படுத்துவீர்கள். உங்கள் ராசிக்கு யோகாதிபதியான புதனும், சுக்கிரனும் இந்த மாதம் முழுக்கவலுவானவீடுகளில்சென்று கொண்டிருப்பதால் மகிழ்ச்சி, பணவரவு உண்டு. புதிய முயற்சிகள் பலிதமாகும். குடும்பப்பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக் குள் வரும். சொன்ன திகதியில் கடனைத் திருப்பிக் கொடுப்பீர்கள். எதிர்ப்புகள் குறையும்.

புது வேலை அமையும். கணவன்மனைவிக்குள் அனுசரித்துப் போவீர்கள். மனம் விட்டுப் பேசி பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். நண்பர்கள் உங்களுக்கு ஒத்தாசையாக இருப்பார்கள்.

வெளிவட்டாரத்தில் மகிழ்ச்சி பெருகும். உங்கள் ராசிக்கு 9ஆம்வீட்டில்சூரியன்நுழைந்திருப்பதால்தந்தையாரின் உடல் நிலை பாதிக்கும். அவருடன் மனத்தாங்கல் வரக்கூடும். வீண் விவாதங்களைதத் தவிர்ப்பது நல்லது. தந்தைவழி உறவினர்களால் அன்புத் தொல்லைகள் அதிகரிக்கும். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். உங்கள் ராசிநாதன் சனிபகவான் 11ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் பெரிய சவால்களில் வெற்றிபெறுவீர்கள். உங்களுடையதனித்திறனும், ஆளுமைத் திறனும், நிர்வாகத்திறனும் அதிகரிக்கும். பெரியபதவிகள் தேடி வரும். இயக்கம், சங்கம் இவற்றில் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். குரு 10இல் தொடர்வதால் சின்னச் சின்ன அவமானம், எதிர்காலம் குறித்த கவலைகள், வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமை போன்றவை நிகழக்கூடும்.

13ஆம் திகதி வரை செவ்வாய் 8இல் மறைந்திருப்பதால் வாகனத்தில் செல்லும் போது மறவாமல் தலைக்கவசம் அணிந்துச் செல்லுங்கள். உடன்பிறந்தவர்களுடன் மனவருத்தம் ஏற்படும். சொத்துப் பிரச்னை தலைதூக்கும். தாயாருடன் மோதல்கள், அவருக்கு முதுகுத் தண்டில் வலி, கணுக்கால் வலி, மூச்சுத் திணறல் வந்து போகும் ஆனால் 14ஆம் திகதி முதல் செவ்வாய் 9ஆம் வீட்டில் நுழைவதால்விபத்துகளிலிருந்துமீள்வீர்கள். தடைகள்விலகும். தாயாரின்ஆரோக்கியம் சீராகும்.

அரசியல்வாதிகளே! ஆதாரமில்லாமல் எதிர்கட்சிக்காரர்களை விமர்சித்து பேசாதீர்கள். கன்னிப் பெண்களே! நட்புவட்டம் விரிவடையும். பெற்றோர் பாசமழை பொழிவார்கள். மாணவமாணவிகளே! உங்களின் திறமையை வெளிப்படுத்த முயற்சி செய்யுங்கள். புதியநண்பர்களிடம் கவனமாகப் பழகுங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிக்க அதிகம் உழைக்க வேண்டி வரும். கட்டிட உதிரி பாகங்கள், எலக்ட்ரானிக்ஸ் வகைகள், சமையலறை சாதனங்கள் மூலமாக இலாபம் அதிகரிக்கும். பங்குதாரர்களிடம் உஷாராகப் பழகுங்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. அயல் நாடு தொடர்புடைய நிறுவனத்திலிருந்து புது வாய்ப்புகள் வரும். கலைத்துறையினரே! உங்களின் சம்பளம் உயரும். விவசாயிகளே! விளைச்சல் கொஞ்சம் மந்தமாக இருக்கும். நெல், வாழை வகைகளால் ஆதாயமடைவீர்கள். சின்னச்சின்ன ஏமாற்றங்கள், ஆரோக்ய குறைவு, செலவினங்களை தந்தாலும் ஓரளவு நன்மைகளையும் தரும் மாதமிது.

# வரலாற்றில் இன்றைய தினம் 28.09.2017

1994 - பயணிகள்கப்பல்எம்.எஸ்.எஸ்தோனியா, போல்டிக் கடலில் மூழ்கியதில் 852 பேர் சாவடைந்தனர்.



1787 - புதிதாக அமைக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க அரசமைப்புச் சட்டம் அமெரிக்கக் காங்கிரசால் வாக்களிக்கப்பட்டு சட்டவாக்க சபையின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

1791 - தனது நாட்டு யூத மக்களை சுதந்திரமாக விட்ட முதல் நாடாகியது பிரான்ஸ்.

1844 - சுவீடனின் அரசராக முதலாம் ஒஸ்கார் முடி சூடினார்.

1868 - ஸ்பெய்னின் அரசி இரண்டாம் இஸபெல்லா அல்கொலியா போர் காரணமாக பிரான்ஸுக்குச் சென்றார்.

1939 - இரண்டாம் உலகப் போரின்போது வோர்சோ, நாஸி ஜேர்மனியிடம் சரணடைந்தது.

1992 - பாகிஸ்தானின் பன்னாட்டு வானூர்திச் சேவை வானூர்தி ஏ300, நேபாளத்தின் காத்மண்டு மலைப்பகுதியில் மோதியதில் அதில்பயணித்த167பேரும்உயிரிழந்தனர்.

1995 - மேற்குக் கரை மற்றும் காஸா எல்லை தொடர்பான இடைக்கால ஒப்பந்தத்தில் இஸ்ரேலியத் தலைமை அமைச்சர் ஜிற்சாக் றொபினும் பி.எல்.ஓ. தலைவர் யாசர் அரபாத்தும் ஒப்பமிட்டனர்.

1996 - ஆப்கானிஸ்தான் முன்னாள் அரச தலைவர் மொகமட் நஜியுல்லா தலிபான்களால் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்.

2006 - பிரபாகரனுக்குவெண்ணிறச்சால்வையை குரு ரவிசங்கர் பரிசாகக் கொடுத்தார்.

## நாளை

**29.09.2017**

வெள்ளிக்கிழமை

**புரட்டாதி 13**

திதி: நவமி மு.இ. 10.25 வரை
நட்சத்திரம்: பூராடம் பி.ப. 03.28 வரை
சுபநேரம்: 06.02–07.32 வரை
ராகுகாலம்: 10.32–12.02 வரை

# 'ஸ்பைடர்' மீது பெரும் எதிர்பார்ப்பு




ஏ. ஆர். முருகதாஸின் இயக்கத்தில் முன்னணி நடிகர் மகேஷ்பாபு நடிப்பில் வெளியாகியுள்ளது 'ஸ்பைடர்' படம். இந்தப் படம் தமிழிலும், தெலுங்கிரும் வெளியாகியுள்ளது. இந்தப் படம் தொடர்பில் உலக அளவில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. ஹரிஸ் ஜெயராஜின் இசையில், திரைக்கதை அமைப்பை சந்தோஸ் சிவன் கையாண்டுள்ளார். லைகா புரொடக்சன்ஸ் மற்றும் ரிலையன்ஸ் என்டர்ரெயின்மன்ட் ஆகியன இந்தப் படத்தை வெளியிட்டுள்ளன.

நடிகர் பரத், நடிகை ராகுல் பிரீத் சிங் மற்றும் நதியா ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இலங்கையில் இந்தத் திரைப்படம் மஜெஸ்டிக் பிளாட்டினம் யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா ஆகியவற்றில் திரையிடப்பட்டுள்ளன. (ம)







## புத்தகப் பொன்மொழிகள்



1. நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்.
   ஆபிரகாம் லிங்கன்
2. ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள்; அவனே எனது வழிகாட்டி!
   ஜூலியஸ் சீசர்
3. உலக வரைபடத்திலுள்ள மூலைமுடுக்குகளுக்கெல்லாம் போக விரும்புகிறாயா, ஒரு நூலகத்துக்குச் செல்..
   டெஸ்கார்டஸ்
4. போதும் என்று நொந்துபோய், புதுவாழ்வைத் தேடுகிறீர்களா... ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள்.
   இங்கர்சால்
5. சில புத்தகங்களைச் சுவைப்போம்... சில வற்றை அப்படியே விழுங்குவோம்... சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம்!
   பிரான்சிஸ் பேக்கன்
6. புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே!
   லெனின்
7. உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை!
   ஆஸ்கார் வைல்ட்
8. உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அது போல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு!
   சிக்மண்ட் ஃப்ராய்ட்
9. பழங்காலத்திய மகா புருஷர்களை நேரில் தரிசித்து, அவர்களுடன் உரையாட வேண்டுமா? நூலகத்துக்குப் போ...
   மா சேதுங்
10. ஒரு எழுத்தாளன் ஒரு புத்தகத்தைத் தொடங்கி வைக்கிறான்... வாசகன் அதனை முடித்து வைக்கிறான்.
    சாமுவேல் ஜோன்சன்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட்டமிட்டபடி புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும்.

**இடபம்:** உறவினரால் உதவி உண்டு. தொழில் வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் உண்டாகும்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** திட்டமிட்ட பணி நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். தொழிலில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிலுவைப்பணியை விரைந்து முடிப்பர்.

**சிங்கம்:** சமூகத்தில் உங்கள் மீதான மதிப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**கன்னி:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். தாமதமான பணியை உற்சாகமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாக இருக்கும்.

**துலாம்:** நண்பரால் சிரமத்திற்கு ஆளாக நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் நிலுவைப் பணியை விரைந்து முடிப்பர்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

**தனுசு:** புதிய முயற்சி வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணியில் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழிலில் உருவாகிற இடையூறை உடனடியாக சரி செய்வது நல்லது. இலாபம் சீராக இருக்கும்.

**கும்பம்:** பணிகளைத் திட்டமிட்டபடி நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். செல்வாக்குடன் திகழ்வர்.

**மீனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழிலில் இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறுவர்.




எனக்கு என்னைப் பிடித்திருந்தாலும், பிடிக்காமல் விட்டாலும், என்னோடு நான் வாழ்ந்துதான் ஆக வேண்டும் என்பதே எனக்கான வாழ்க்கையாக இருக்கிறது



## சுடோக்கு
என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | | 4 | |
| | 3 | | | 9 | | | | 1 |
| | 5 | | | | 8 | | | |
| 6 | | | | | | 7 | | |
| 2 | | | 7 | | 5 | | | 9 |
| | | 8 | | | | | | 5 |
| | | | 9 | | | | 1 | |
| 4 | | | | 2 | | | 9 | |
| | 2 | | | | 6 | | | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 2 | 1 | 3 | 7 | 8 | 5 | 9 |
| 1 | 8 | 9 | 6 | 5 | 2 | 7 | 3 | 4 |
| 3 | 7 | 5 | 9 | 4 | 8 | 1 | 6 | 2 |
| 2 | 9 | 4 | 3 | 1 | 6 | 5 | 7 | 8 |
| 6 | 5 | 7 | 8 | 9 | 4 | 2 | 1 | 3 |
| 8 | 1 | 3 | 2 | 7 | 5 | 9 | 4 | 6 |
| 7 | 4 | 6 | 5 | 8 | 9 | 3 | 2 | 1 |
| 9 | 2 | 1 | 7 | 6 | 3 | 4 | 8 | 5 |
| 5 | 3 | 8 | 4 | 2 | 1 | 6 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும்: சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# சொர்க்கத்தைத் தேடுவோம்

ஓர் ஊரில் ஒரு கருமி (கஞ்சன்) வாழ்ந்து வந்தான். அவன் மிகப்பெரிய பணக்காரன். ஆனால் எவருக்கும் உதவ மாட்டான். அவனுக்கு சொர்க்கத்தையும் நரகத்தையும் காண ஆசை வந்தது. ஒரு நாள் அவனது கனவில் ஒரு பெரியவர் தோன்றி அவனை சொர்க்கம் கூட்டிச் செல்கிறேன் எனக் கூறினார். அவனும் அவருடன் சென்றான்.

முதலில் நரகத்துக்கு அவனைக் கூட்டிச் சென்றார். அங்கு உணவு நேரமாதலால் பெரிய பெரிய அண்டாக்களில் சோறு, கறி உட்பட சுவைமிக்க உணவுகள் இருந்தன. அவரவர்கள் முன்னால் தட்டுக்கள் வைக்கப்பட்டு உணவுகள் பரிமாறப்பட்டன.

எல்லோருக்கும் நாவில் எச்சில் ஊறியது. ஆனால் அனைவராலும் அவ்வுணவுகளை அவர்களது கைகளால் எடுக்க முடிந்ததே யன்றி கையை மடக்கி வாய்க்குள் உணவைக் கொண்டு செல்ல முடியவில்லை. எனவே அறுசுவை உணவு எதிரே இருந்தும் அவர்களால் உண்ண முடியவில்லை. அவர்களுக்கு பசியோடு ஆத்திரமும் சேர்ந்து கொண்டது. அனைத்து அண்டாக்களையும் கீழே தள்ளிவிட்டு அவற்றிலுள்ள உணவை வீணாக்கினர். பின்னர் தாங்க முடியாத பசியினால் உட்கார்ந்து கொண்டிருந்தனர். இதனால் பெரியவர் அவனை சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கும் நரகம் போலவே, அண்டாக்கள் அவற்றில் வகை வகையான உணவுகள் அங்கிருந்தவர்களுக்கு கையை நீட்ட முடிந்தது. ஆனால் உணவு எடுத்த பின் கையை மடக்கி அதனை வாயுள் கொண்டு போக முடியவில்லை. ஆனால் அங்கிருந்தவர்களில் ஒருவர் தனது நீண்ட கையினால் இனிப்பு வகைகளை எடுத்து தன் எதிரே இருந்தவரின் வாயருகில் நீட்டினார். கையை மடக்க முடியாதே தவிர நீட்டிய கையால் முன்னால் இருப்பவருக்கு உணவை ஊட்டி விட முடியுமல்லவா இப்படியே அனைவரும் ஒருவருக்கொருவர் ஊட்டி மகிழ்ந்தனர்.



அனைவரது வயிறுகளும் நிரம்பின.

கருமி கனவிலிருந்து மீண்டான் ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதே சொர்க்கம் என்பதை அவன் புரிந்து கொண்டான். தான் மட்டும் சுகமாய் வாழ நினைப்பது நரக வாழ்க்கை என்பதை உணர்ந்தான். அன்றில் இருந்து அவன் அனைவருக்கும் உதவிகள் புரிந்து நல்வாழ்வு வாழ்ந்தான்.


சொர்க்கமும் நரகமும் பூமியிலேயே இருக்கின்றன. சகோதரர் உற்றார் விறவினர் நண்பர்களுடன் உறவாடி அன்பு செய்து மகிழ்வுடன் வாழ்தலே சொர்க்கமாகும்.



## யானைகள்

- யானை தன் தோலைக் காக்க சேற்றில் விழுந்து புரள்கிறது. தண்ணீர் கிடைக்காத நேரங்களில் மண்ணில் புரண்டு எழுகின்றது. இது தூசியிலும் குளிக்குமாம்.
- யானையின் வயதை அதன் காது, நகம் ஆகியவற்றைக்கொண்டு அறிவார்கள்.
- யானை நல்ல வெயில் நேரத்திலும் நடு இரவிலும் தான் உறங்கும்.
- யானைக் குட்டி ஒன்றுக்கு அதன் தாய் மட்டுமன்றி பால் சுரக்கும் எல்லா யானைகளுமே அன்போடு பால் கொடுக்கும்.
- யானை காலையிலும் மாலையிலும் மட்டுமே தண்ணீர் பருகும் மற்றைய நேரங்களில் நீர் பருகாது.
- ஆறு தொன் நிறையுள்ள யானை தினமும் 300 பவுண்டு தீனி சாப்பிடும். 50 கலன் நீர் பருகும்.
- சாகசம் செய்யும் யானைகள் பெரும்பாலும் நாற்பது வயதுக்கு மேற்பட்டவை.
- யானை தினமும் இரண்டு மணி நேரமே தூங்கும்.
- யானையின் துதிக்கையில் நான்கு இலட்சம் தசைகள் உள்ளன. துதிக்கையில் சிறு எலும்பு கூட இல்லை.
- யானையின் பாலில் அதிகளவு சர்க்கரைச் சத்துள்ளது வேறுஎந்தமிருகப்பாலிலும் இந்த அளவு சக்கரை இல்லை.
- யானைக்கு மொத்தம் நான்கு பற்களே உள்ளன. உணர்ச்சி வசப்படும் போது மனிதனைப் போல கண்ணீர் விடும் விலங்காகவும் யானை உள்ளது.
- ஆட்டுச்சந்தை மாட்டுச்சந்தை போல் இந்தியாவின் பீகார் மாநிலத்தில் யானைச் சந்தை உள்ளது.

கீழுள்ள A புள்ளிக்கோட்டில் வீதி ஒளி சமிக்ஞைகளின் மின்குமிழ்களின் நிறங்களையும் B புள்ளிக்கோட்டில் அவற்றின் கருத்துக்களையும் எழுதுக



A - ..........................................................................

B - ..........................................................................


A - ..........................................................................

B- ...........................................................................

A - ..........................................................................

B- ...........................................................................

மேலும் கீழும் இடமும் வலமும் எப்படி பார்த்தாலும் ஒரு வரிசையில் வந்த படம் மீண்டும் (கீழ்காணப்படும் படங்கள்) வராமல் கட்டங்களை நிரப்புங்கள்



நேற்று முன்தினம் வெளியான சொற்சிலம்ப போட்டிக்கான விடைகள்

மேலிருந்து கீழ்
1. திராட்சை
2. ருசி
3. தரணி
4. தையல்
5. அன்னாசி
8. தர்மம்
9. தடித்த
11. வசனம்
12. வன்மம்
14. தருமன்
15. காதல்
17. திமில்
19. மீன்

இடமிருந்து வலம்
1. திருத்தந்தை
6. ராசி
7. யமன்
8. தணிதல்
10. சைவர்
12. வசி
13. சமர்த்தன்
15. கானம்
16. தருமதி
18. தம்
20. மம்மி
21. மன்னன்

# புகழ்ச்சியை விரும்பாத விஞ்ஞானி

புகழ் எத்தகைய மேதைகளையும் மயக்கி விடும் ஒரு மாய மோகினி. புகழ் தன்னைத் தேடி வராதா என எதிர்பார்த்துக் காத்திருப்பவர்கள் எத்தனையோ பேர் உள்ளனர். பிறர் புகழாவிடில் தங்கள் கைப் பொருளைச் செலவிட்டாவது அதைப் பெறத் துடிப்போர் அனேகர். ஆனால் இதற்கு முற்றிலும் மாறாக புகழ் விரும்பாத மேதைகளும் இருந்திருக்கிறார்கள். அத்தகைய மேதைகளில் ஒருவர் தான் வாயுக்கள் சம்மந்தமான ஆய்வில் தன்னிகரற்று விளங்கிய காவெண்டிஷ் ஆவார். இவர் வாயுக்கள் அமிலத்திலிருந்து வெளிவருவதில்லை. உலோகங்களிலிருந்து தான் வெளியாகின்றன என்ற உண்மையைத் தெரிந்து தொடர்ந்து ஆராய்ந்து காற்று ஒக்சிஜன், ஹைட்ரஜன் ஆகியவற்றின் நிறைவைக் கண்டறிந்து 1784இல் 'காற்றின் சோதனைகள்' என்ற ஆய்வு நூலை வெளியிட்டு, லண்டன் ரோயல் விஞ்ஞானக் கழகத்தின் அங்கீகாரத்தையும் பாராட்டையும் பெற்றார். இவ்வாறு வாயுக்கள் சம்பந்தமான ஆய்வில் தன்னிகரற்று உலகப் புகழ் பெற்று இவர் விளங்கி னாலும் பிறர் தன்னைப் பாராட்டுவதையோ தன்மைத் தாமே



விளம்பரப்படுத்திக் கொள்வதையோ விரும்புவதில்லை. ஒரு தடவை இவரின் உருவத்தை ஓவியர் ஒருவர் தீட்ட விரும்பிய போது இவர் தனது படம் விளம்பர மாவதை விரும்பாது அதற்கு மறுப்புத் தெரிவித்தார். ஆயினும் அந்த ஓவியர் அவரை அறியாமல் பின்தொடர்ந்து திரிந்து ஒருவாறு அவர் உடல் அசைவுகளை வைத்து அவர் உருவத்தைத் தீட்டி முடித்து அவரிடம் காண்பித்த போது சிறிதும் மகிழ்ச்சியடையாமல் "வீண் வேலை" என முணுமுணுத்தாவாறே எழுந்து போய்விட்டாராம்.

மற்றொருதடவை நண்பரின் வீட்டில் விருந்து உண்ணுகையில் எதிர்பாராத விதமாக இவரது நண்பர் அயல் நாட்டவர் ஒருவருக்கு இவரை அறிமுகம் செய்துவிட்டார். வெளிநாட்டவரோ "இவரா இவ்வளவு பெரிய விஞ்ஞானி. இவர் இப்படி அடக்கமாக இருக்கிறாரே" எனக் கூறி தன் இருக்கையை விட்டு எழுந்துவந்து "இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் பெருமை சேர்ந்த விஞ்ஞான வித்தகர் ஹென்றி காவெண்டிஷ்சை நான் சந்தித்த இந்த நாள் எனக்கு பெரும் அதிஷ்ட நாளாகும்" எனக் கூறி அவர் கைகளைப் பிடித்து குலுக்கினார். ஆனால் இந்தப் புகழ்ச்சியை சற்றும் விரும்பாது வெறுப்புடன் முகத்தை திருப்பியபடி எழுந்து அவ்விடம் விட்டு சென்று விட்டார். புகழ்ந்து பேசியதைக் கேட்டு சினந்து வெளியேறிய அந்த மனிதரை முதன் முதலாக சந்தித்த அதிர்ச்சியிலிருந்து அந்த வெளிநாட்டவர் மீள நெடு நேரமாயிற்றாம்.

# வல்லாரைக்கீரையின் மருத்துவக் குணங்கள்

ஞாபகசக்தியை கொடுப்பதில் வல்லாரைக் கீரைக்கு அசாத்தியமான பங்கு உண்டு. இவற்றை சமையலுக் குப் பயன்படுத்தும் போது புளியைச் சேர்க்கக் கூடாது. புளி வல்லாரையின் சக்தியைக் குறைத்து விடும். உப் பையும் குறை வாகத்தான் சேர்க்க வேண்டும். வல்லா ரையை நெய்விட்டு வதக்கி சிறிதளவு இஞ்சி, இரண்டு பூண்டுக் கீற்றுகள் சேர்த்து துவையல் செய்து குழந்தை களுக்கு கொடுத்து வந்தால் குழந்தை களுக்கு ஏற்படும் தோல் வியாதிகள், நரம்புக் கோளாறுகள், வயிற்றுப்போக்கு முதலியவை குணமாகும். பற்களில் பலருக்கும் மஞ்சள் போன்ற வண் ணம் படிந்திருக்கும். இவற்றை போக்க வல்லா ரையைப் பற்களின் மேல் வைத்துத் தேய்த் தால் போதும் நிறம் மாறுவதோடு, பற்களும் வெண்மை யாகத் தோற்றம் தரும். வல்லாரைக் குறைந்த அளவு தான் உண்ண வேண்டும். அளவு மீறினால் மயக்கம் வரும். தலைசுற்றல் ஏற்படும். உடம்பை பிழிவதை போல வலி ஏற்படும்.

எனவே இந்தக்கீரையை அடிக்கடி உண்ணாமல் பத்து நாள்களுக்கு ஒருமுறை சாப்பிடுவதே நல்லது.


## தவறவிடப்பட்டது

நல்லூரில் இருந்து கோப்பாய் செல்லும் வழியில் நாகராசா யுலக்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (200014102871V) தவற விடப்பட்டது. தொடர்பு; 077 009 5381

## அறை வாடகைக்கு உண்டு

யாழ். வீதியில் Science World அருகில் கல்வி கற்கும் பெண் பிள்ளைகளுக் கான சகல வசதிகள் கொண்ட அறை கள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 077 966 0419, 077 523 6157

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா. குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

தினசரி காலை 8 மணி முதல் மாலை 6.00 மணிவரை

No.46/1, Hindu College Rd.
Jaffna.
076 557 5394

## சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய பொதுக்கூட்டம்

**இடம் - ஆலய மணிமண்டபம்**
**காலம் - 15.10.2017 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் - பிற்பகல் 3 மணி**

அத்தருணம் நித்திய வழிபாட்டாளர்கள், உபயகாரர்கள், ஆயுட்கால உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் அனைவரும் வருகை தந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பி.சின்னத்துரை,**
**தலைவர்.**

**இ.கிருஸ்ணசாமி**
**செயலாளர்.**

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 28
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2017.09.27
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,786,805/-
வெற்றி இலக்கங்கள் 15 24 28 40 W
03 04 39 55
www.dlb.lk

## Galaxy Star

வெற்றி வாரம் 198
திகதி 27.09.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
09 23 31 38 53
12 20 37 39
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2, 441, 156/-
2017.10.01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுகளாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## DLB CAR PLUS

சீட்டிழுப்பு வாரம் 25
சீட்டிழுப்பு திகதி 2017.09.27
வெற்றி இலக்கங்கள் 01 11 18 R வியாழன்
14 17 45
- 16
3,993,440/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2935 திகதி 27.09.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
03 08 41 73 W
போனஸ் இல. 50
சனிக் கிழமை ஜக்பொட் 43, 795, 595/-
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 13 15 49 55
பச்சை நிற டிக்கட்டுக்கள்
2017.09.30 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் காவலாளி பதவிக்கான வெற்றிடம்

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் வெற் றிடமாகவுள்ள மேற்படி பதவிக்கு பின்வரும் தகைமையுடையவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**01. சிறந்த உடலாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.**
**02. வயதெல்லை : 40 - 50 வரையாகும்.**
**03. கல்வித்தகைமை : ஆகக்குறைந்தது 08 ஆம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.**
**04. விடுமுறை நாட்களில் பகலிலும் இரவிலும் தொடர்ச்சியாகவும் ஏனைய நாட்களில் இரவிலும் காவல் கடமையில் ஈடுபடுதல் வேண்டும்.**
**05. முன்னனுபவமுடையவர்களும் ஜெய்ப்பூர் நிறுவனத்தை அண்டிய பகுதிகளில் வதிவோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.**
**06. வேலை செய்யும் நாள் ஒன்றுக்கு ரூபா 650 .00 படியாக வழங்கப்படும்.**

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிவரங்களை உள்ளடக்கிய விண்ணப்பத்தினை தாமே தயாரித்து எதிர்வரும் 13.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு நேரில் கையளித்தோ அல்லது தபால்மூலமாகவோ அனுப்புதல் வேண்டும்.

**நேர்முகப் பரீட்சை மூலமாகவே தெரிவுகள் இடம் பெறும்.**
**டாக்டர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி. கௌரவ தலைவர்.**

## JAFFNA SOCIAL ACTION CENTER
### Vacancy announcement for District Project officers & Program Assistants

JSAC

Jaffna Social Action Center (JSAC) is a national non-governmental organization providing services in the northern province of Sri Lanka. JSAC is currently recruiting staff for rebuilding and revitalizing project for resettles. The projects lie under the sectors of child protection, inclusive education, gender, women empowerment, political participation, and livelihood. Therefore, JSAC is looking for multi-dynamic and committed individuals for the above posts.

**Availability of Vacancies(Districts)**

- Jaffna - 04 Positions
- Mannar - 04 Positions
- Kilinochchi - 03 Positions
- Mullaitivu - 02 Positions
- Vavuniya - 02 Positions

***(Some cadres are only allocated for women.)***

**Qualifications:**

- Preferably graduates in related subjects OR Non-graduates: Working experiences with A/L completion
- Age : more than 22 Years– 45 Years
- Other qualifications which prove the knowledge and skills

**Competencies:**

- Ability to speak and write local languages (Tamil and Sinhala); English language skill will be preferable.
- Ability to engage with local leadership;
- Good planning and implementation ability;
- Good understanding of broader development themes such as Protection, Gender, Child protection, livelihoods, reconciliation and Human rights;
- Ability to network, lobby and advocate on behalf of Social issues;
- Knowledgeable and understanding of the dynamics in context, politics and culture of Northern Province
- Having a valid driving license for motorcycles;
- Ability & willingness to travel to all part of the country is essential.
- Ability to report writing (preferably English)

**Applications must be reached to JSAC Head office with the following documents.**

1. A covering letter addressing to the coordinator (Indicate your preference of district and field of expertise)
2. CV with two non-related referees

Only short listed candidates will be notified. The recruitment process will consist of interviews, written assessment and 2 days compulsory training.

Individuals of all ethnic background are encouraged to apply. As an equal opportunity employer, JSAC also strongly encourages the application of women.

**The application needs to be submitted directly at the head office or through registered post or email by October 9, 2017, 05.00pm SLT.**

**Contact:**
Coordinator,
Jaffna Social Action Center,
18/1, KailasapillaiyarKovil Road,
Nallur, Jaffna.
jsacjaffna@gmail.com


## மரண அறிவித்தல்



### திருமதி தையலாம்பாள் உருத்திராபதி

யாழ்ப்பாணம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையலாம்பாள் உருத்திராபதி நேற்று (27.09.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான் மாணிக்கம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - அன்னம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற உருத்திராபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வயலின்வித்துவான் இராதாகிருஷ்ணன் மற்றும் பாலகிருஷ்ணன் (நாதஸ்வரம்), ஸ்ரீரஞ்சன் (ஆஸ்திரேலியா), கோகுலஸ்துவனி (கொழும்பு), V.R.கிருஷ்ணன் (சந்தாண கிருஷ்ணன் வயலின் ஓமான்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாசுகி, சுதாதேவி, காலஞ்சென்ற மிருதங்க வித்துவான் சந்தாணகிருஷ்ணன் மற்றும் ராமானந்தம், கலாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2017) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில், காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கந்தசாமி கோவிலடி,**
**இணுவில் மேற்கு, இணுவில்.**
**R.சந்தானகிருஷ்ணன் (V.R.கிருஷ்ணன்)**
**ஓமான் - +96 899 429 816, இலங்கை - +9477 992 7768**
**மது - 077 611 9934, குட்டி - 077 915 4196**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி விசாலாட்சி மாரிமுத்து



யாழ். காரைநகர் கள்ளித்தெருவை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு தாமரைக் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி மாரிமுத்து 26.09.2017 செவ்வாய்க்கிழமை சிவபமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - பார்வதி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தப்பு மாரிமுத்துவின் அன்பு மனைவியும் சறோஜினிதேவி, காலஞ்சென்ற கமலாம்பிகை .சித்தியாம்பாள்.வசந்தகுமாரி(ஜேர்மன் ).ஸ்கந்தராசா (இத்தாலி) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ் சென்றவர்களான பரமசாமி, தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மோகனச்சந்திரன் காலஞ்சென்ற இரத்தினசபாபதிப் பிள்ளை, ஆனந்தரெட்ணசாமி,சற்குணராசா (ஜேர்மன்). சத்தியரூபி(இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று(28.09.2017) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3.30 மணிக்கு கள்ளியங்காடு பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.56 /14. 1 ஆம் குறுக்கு. சங்கீத லேன்.**
**தாமரைக்கேணி. மட்டக்களப்பு.**

**தகவல் : குடும்பத்தினர்.**

## யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல் - 2017

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.
(விண்ணப்பங்களுடன் தகைமை சான்றிதழ்களின் பிரதியினை இணைத்து அனுப்பிவைக்கவும்)

**01. பதவி : அதிபர் (Principal)** ஒப்பந்த அடிப்படை
**தகைமைகள் :**
I. டிப்ளோமா/பட்டதாரி (சுதேச மருத்துவம்)
II. ஆயுள்வேத பாரம்பரிய பின்னணியினைக் கொண்டிருத்தல்.
III. ஆயுள்வேத மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
IV. சுதேச மருத்துவக் கல்வி வழங்கலில் முன் அனுபவம் 05 வருடங்கள்.
V. நோயாளர் கவனிப்பில் முன் அனுபவம் 05 வருடங்கள்
**வயது எல்லை :** 11.10.2017 அன்று 30 வயதுக்கு குறையாமல் 60 வயதுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
**மாதாந்த கொடுப்பனவு :** ரூபாய் 27020/=

**02. பதவி : பிரதி அதிபர் (Vice Principal)** ஒப்பந்த அடிப்படை
**தகைமைகள் :**
I. டிப்ளோமா /பட்டதாரி (சுதேச மருத்துவம்)
II. ஆயுள்வேத பாரம்பரிய பின்னணியினைக் கொண்டிருத்தல்.
III. ஆயுள்வேத மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
IV. சுதேச மருத்துவக் கல்வி வழங்கலில் முன் அனுபவம் 05 வருடங்கள்.
V. நோயாளர் கவனிப்பில் முன் அனுபவம் 05 வருடங்கள்
**வயது எல்லை :** 11.10.2017 அன்று 30 வயதுக்கு குறையாமலும் 60 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.
**மாதாந்த கொடுப்பனவு :** ரூபாய் 23460/=

**03. பதவி : பதிவாளர் (Registrar)** ஒப்பந்த அடிப்படை
**தகைமைகள் :**
முகாமைத்துவம் தொடர்பான சேவையில் 15 வருடங்கள் முன் அனுபவம் அல்லது பட்டதாரியாக இருப்பதுடன் முகாமைத்துவ சேவையில் 05 வருட முன் அனுபவம் இருக்கவேண்டும்.
**வயது எல்லை :** 11.10.2017 அன்று 67 வயதுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
**மாதாந்த கொடுப்பனவு :** ரூபாய் 23550/=

**04. பதவி : வருகைதரு விரிவுரையாளர் (Lecturer)** ஒப்பந்த அடிப்படை
**தகைமைகள் :**
I. பட்டதாரி அல்லது டிப்ளோமா (சுதேச மருத்துவம்)
II. ஆயுள்வேத பாரம்பரிய பின்னணியினைக் கொண்டிருத்தல்
III. ஆயுள்வேத மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
IV. இரண்டுவருட கற்பித்தல் அனுபவம்.
V. இரண்டுவருட நோயாளர் கவனிப்பு அனுபவம்.
**வயது எல்லை :** 11.10.2017 அன்று 30 வயதுக்கு குறையாமலும் 65 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.
**மாதாந்த கொடுப்பனவு :** வருகைதரு விரிவுரையாளர் ரூபாய் 22340/=

**05. பதவி : வருகைதரு போதனாசிரியர் (Instructor)** ஒப்பந்த அடிப்படை
**தகைமைகள் :**
I. பட்டதாரி அல்லது டிப்ளோமா (சுதேச மருத்துவம்)
II. ஆயுள்வேத பாரம்பரிய பின்னணியினைக் கொண்டிருத்தல்
III. ஆயுள்வேத மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
**வயது எல்லை :** 11.10.2017 அன்று 30 வயதுக்கு குறையாமலும் 65 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.
**மாதாந்த கொடுப்பனவு :** வருகைதரு போதனாசிரியர் ரூபாய் 21800/=

**06. பதவி : முகாமைத்துவ உதவியாளர் (Asst. Management)** ஒப்பந்த அடிப்படை
**தகைமை :**
I. கல்வி பொது தராதரம் (சா/த) சித்தி 6 பாடங்கள் (கணிதம், தமிழ் திறமைச்சித்தி உட்பட 3 பாடம்)
II. கல்வி பொது தராதர (உ/த) மூன்று பாடங்கள் சித்தி
**வயது எல்லை :** 11.10.2017 அன்று 21 வயதுக்கு குறையாமல் 40 வயதுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
**மாதாந்த கொடுப்பனவு :** 19990/=

**07. பதவி : நூலக உதவியாளர் (Asst. Librarian)** ஒப்பந்த அடிப்படை
**தகைமை :**
I. கல்வி பொது தராதரம் (சா/த) சித்தி 6 பாடங்கள் (கணிதம், தமிழ் திறமைச்சித்தி உட்பட)
II. கல்வி பொது தராதர (உ/த) சித்தி
III. 2 வருட துறைசார் அனுபவம்
IV. நூலக விஞ்ஞான பாடம் கற்றிருத்தல் விரும்பத்தக்கது.
**வயது எல்லை :** 11.10.2017 அன்று 21 வயதுக்கு குறையாமல் 40 வயதுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
**மாதாந்த கொடுப்பனவு :** 19700/=

**08. பதவி : சாதாரண தொழிலாளி (Office Labourer)** ஒப்பந்த அடிப்படை
**தகைமை :**
கல்வி பொது தராதரம் (சா/த) சித்தி
**மாதாந்த கொடுப்பனவு :** 17730/=
**வயது எல்லை :** 11.10.2017 அன்று 18 வயதுக்கு குறையாமல் 40 வயதுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.


ஆயுள்வேத பாரம்பரிய பின்னணியினைக் கொண்டிருத்தல் என்பதனை அந்தப்பிரிவு ஆயுள்வேத பாதுகாப்பு சபையினாலும், குறித்த பிரதேச ஆயுள்வேத சமூக மருத்துவ உத்தியோகத்தரினாலும் இல்லாதவிடத்து குறித்த பிரதேச அரச ஆயுள்வேத வைத்தியசாலையின் மருத்துவப் பொறுப்பதிகாரியினால் உறுதிப்படுத்த வேண்டும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை 11.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பிரிவு கிராம சேவை உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் - 2017" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**விண்ணப்பம் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -**
**தலைவர்,**
**வட இலங்கை சுதேச மருத்துவ சபை,**
**லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
20 . 05 . 1947



இறப்பு
27 . 09 . 2017

### சோமசுந்தரக்குருக்கள் பரமேஸ்வரன் (சிவம் ஐயா)

இலக்கம் 420 காங்கேசன்துறை வீதி,யாழ்ப்பாணத்தை ( பன்றிக்கோட்டு பிள்ளையார் முன்பாக) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரக்குருக்கள் பரமேஸ்வரன் (சிவம் ஐயா) நேற்று (27.09.2017) புதன்கிழமை இறைவனடி சேந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரக்குருக்கள் நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இரங்கநாதன் (கொழும்பு) அவர்களின் பாசமிகு தம்பியும் சர்வேஸ்வரன் (விற்பனை ஆலோசகர், செலிங்கோ லைவ் இன்சுரன்ஸ் லிமிட்நெல்லியடி ,04) பிரகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதீஸ்வரி ,திருமகள் ஆகியோரின் மாமனாரும் துவாரகன்,சாணுகா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2017) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 3.00 மணியளவில் கோம் பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : ப. சர்வேஸ்வரன் (மகன்)**
**077 186 2468**

## இது புதுசு



பெண்களுக்கான சாறி வகைகள் சில அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## மரண அறிவித்தல்

பிறப்பு
08 . 08 . 1933



இறப்பு
27 . 09 . 2017

### திருமதி சரஸ்வதி சிதம்பரப்பிள்ளை

யாழ். சுழிபுரம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிதம்பரப்பிள்ளை நேற்று (27.09.2017) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை(ஒலுமடு மாங்குளம்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம், நடராஜா, ராசம்மா, மற்றும் பாக்கியம், வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தரமூர்த்தி (தொல்புரம்,ஒலுமடுமாங்குளம்), சத்தியமூர்த்தி (ஜேர்மனி), கிருஷ்ணமூர்த்தி(ஜேர்மனி), பத்மா(தொல்புரம்), கணேசமூர்த்தி(ஜேர்மனி), உமா (தொல்புரம்), சச்சிதானந்தன் (ஜேர்மனி), ரேவதி (லண்டன்), கந்தநாதன் (நோர்வே), விஜயகாந்தன் (சுவிஸ்), சிறிகாந்தன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிரஞ்சனா (தொல்புரம்), குமாரி (ஜேர்மனி), இன்பராணி (ஜேர்மனி), ஶ்ரீராம் (இளைப்பாறிய பொறியியலாளர் லங்கா சீமெந்து நிறுவனம், தொல்புரம்), ஜெயந்தினி (ஜேர்மனி), வேலுப்பிள்ளை (இளைப்பாறியமாவட்ட புள்ளிவிவரவியல் க்ச்சேரி முல்லைத்தீவு, தொல்புரம்), சுசானா(ஜேர்மனி), தில்லைவாசன்(லண்டன்), சிறிரஞ்சனி(நோர்வே), ஜெயகௌரி(சுவிஸ்), சிவரஞ்சனி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஜன், நிரோஜா, நிரஞ்சன், லியோனி, கிரிசாந்தினி, நிமலினி, குகன், ராகவராம், ராகினி, ராஜாராம், கஜனி, நிதுசா, லக்சனா, திவ்யா, ஜனார்த்தனன், வினோர்த்தனன், சாந்தன், சுபானுஜா, ஆடியர், லக்சுமி, தினேஷ், தணிக்கா, தர்சன், சரண்யா, விதுஷன், இந்துசன், அபிஷன், சிந்துஜா, கவுதமன், சரண், சகானா ஆகியோரின் அன்புப் பேத்தியும் யசிந்தினி, லோஜன், லோஜினி, சரவன், சாருஜன், அபிஷேக், அஷ்வின், ஜோகீஷ், விருத்தன் ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொல்புரம் , சுழிபரம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்**

## 7 பேருக்கு...

சென்று கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தியமை, குற்றச்செய லுக்குச் சதித் திட்டம் தீட்டியமை ஆகியன உட்பட அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்காக அவர்கள் 7 பேருக்கும் 30 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

குற்றவாளிகள் 7 பேரும் மாணவியின் குடும்பத்துக்கு தலா 10 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் மேலும் 2 ஆண்டுகள் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பாயம் உத்தரவிட்டது. இழப்பீட்டுக்கு மேலதிக தண்டமாக 2,3,5 மற்றும் 6ஆம் எதிரிகள் 40 ஆயிரம் ரூபாவைச் செலுத்த வேண்டும். தவறின் 2 மாத கால சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும். 4, 8 மற்றும் 9ஆம் எதிரிகள் 70 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாகச் செலுத்த வேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 4 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்" என்றும் தண்டனைத் தீர்ப்பை அறிவித்தது தீர்ப்பாயம்.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டுவன்புணர்வின் பின் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். மாணவி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதையடுத்து யாழ்ப்பாணக் குடாநாடு மட்டுமல்லாமல் இலங்கை முழுவதும் பெரும் கொத்தளிப்பை ஏற்படுத்தியது. பல இடங்களில் மாணவிக்கு நீதி கோரி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மாணவியின் தாயாரை யாழ்ப்பாணத்தில் சந்தித்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, சிறப்பு தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) அமைத்து நீதி பெற்று தரப்படும் என உறுதியளித்திருந்தார்.

**விசாரணை ஆரம்பம்**

இரண்டு வருடங்களாக சுருக்கமுறையற்ற விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய சிறப்புத் தீர்ப்பாயம் முன்பாக விசாரணைகள் ஆரம்பமாகின. வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விசாரணை இடம்பெற்றது.

கடந்த மே 29ஆம் திகதி முதல் ஆரம்பமான தீர்ப்பாய விசாரணை கடந்த 13ஆம் திகதி எதிரிகள் தரப்புச் சட்டத்தரணிகளின் தொகுப்புரையுடன் நிறைவடைந்தன. தொகுப்புரை முன்வைக்கப்பட்டு 14 தினங்களில் தீர்ப்பு வழங்கப்படும் என்று நேற்றைய தினம் தீர்ப்பாயத்தால் நிர்ணயிக்கப்பட்டது.

வழக்கு தொடுநர் தரப்பில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமாரரட்ணம் தலைமையில் அரச சட்டவாதிகள் நாகரத்தினம் நிஷாந்த், மாதினி விக்னேஸ்வரன் ஆகியோர் மன்றில் தோன்றினர்கள்.

எதிரிகள் தரப்பில் 1ஆம்,2ஆம், 3ஆம், 6ஆம் மற்றும் 8ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன , 5ஆம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் , 4ஆம், 7ஆம் , மற்றும் 9ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரன் மற்றும் ஒன்று தொடக்கம் 9 வரையான எதிரிகள் சார்பில் தீர்ப்பாயத்தால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி விக்னேஸ்வரன் ஜெயந்தா ஆகியோர் மன்றில் தோன்றினார்கள். பாதிக்கபபட்டவர்கள் மற்றும் சாட்சியங்கள் நலன் காக்கும் பொருட்டு சட்டத்தரணிகள் வி.மணிவண்ணன் மற்றும் ரஞ்சித்குமார் ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர்.

**எதிரிகள் முற்படுத்தப்பட்டனர்**

பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார், மகாலிங்கம் சசிதரன், தில்லைநாதன் சந்திரகாசன் , சிவதேவன் துஷாந்த் , பழனி ரூபசிங்கம் குகநாதன் , ஜெயதரன் கோகிலன் மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய ஒன்பது எதிரிகளும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

**132 பக்கங்களில் தீர்ப்பு**

தீர்ப்பாயத்தின் தலைவர் மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் தீர்ப்பை வாசித்தார். அவரது தீர்ப்பு 132 பக்கங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

"இந்த வழக்கில் ஒன்பது எதிரிகளுக்கும் எதிராக, சதித்திட்டம் தீட்டியமை , கடத்தல் , வன்புணர்வு, கொலை , உடந்தை உள்ளிட்ட 41 குற்றச்சாட்டுகள் வழக்கு தொடுநர் தரப்பால் சுமத்தப்பட்டன. 53 சாட்சியங்களை வழக்கில் அணைத்திருந்ததுடன் வ -01 தொடக்கம் வ -27 வரையிலான சான்றுப் பொருள்களும் முன்வைக்கபட்டன. வழக்கின் 2ஆம் , 3ஆம் , 5ஆம் மற்றும் 6ஆம் எதிரிகளுக்கு எதிராக கண்கண்ட சாட்சியங்களான உதயசூரியன் சுரேஷ்கரன் மற்றும் மாப்பிள்ளை என அழைக்கப்படும் நடராஜா புவனேஸ்வரன் ஆகியோர் சாட்சியம் வழங்கினர்.

**சாட்சியங்கள் ஒப்பீடு**

அவர்களின் சாட்சியங்கள் தவிர 2ஆம் எதிரியை குற்றச்செயல் இடம்பெற்ற தினத்தன்று சம்பவ இடத்துக்கு அருகில் கண்டதாக பாடசாலை மாணவனான ஒன்பதாவது சாட்சியான மணிவண்ணன் தனுராம் சாட்சியம் அளித்துள்ளார். அத்துடன் அதே இடத்தில் 2ஆம் மற்றும் 3ஆம் எதிரிகளை கண்டதாக நான்காவது சாட்சியமான பாலசிங்கம் பாலசந்திரன் சாட்சியம் அளித்துள்ளார். இவர் 2ஆம் எதிரியின் மைத்துணன். இவரின்கூட பிறந்த தங்கைதான் எதிரியின் மனைவி. அத்துடன் 15ஆவது சாட்சியமான சதானந்த ரூபிணி சம்பவ தினத்தன்று சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் 5ஆம் எதிரியை கண்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த வழக்கில் கூட்டு வன்புணர்வு , கொலை , கடத்தல் , சதித்திட்டம் தீட்டியமை , உடந்தை அளித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் 2ஆம் , 3ஆம் , 4ஆம் , 5ஆம் , 6ஆம் , 7ஆம் மற்றும் 9ஆம் எதிரிகளை குற்றவாளியாக தீர்ப்பளிக்கிறேன்" என்று தீர்ப்பாயத்தின் தலைவர் மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் அறிவித்தார்.

அவர் 2 மணி நேரமாக 132 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பை வாசித்தார்.

அதனை அடுத்து தீர்ப்பாயத்தின் நீதிபதிகளில் ஒருவரான அன்னலிங்கம் பிரேமசங்கர் , சகோதர நீதிபதியான பாலசந்திரன் சசிமகேந்திரன் வழங்கிய தீர்ப்புடன் தான் ஒத்துப்போகிறார் எனவும் , தனது தீர்ப்பும் அதுவே என அறிவித்தார்.

**நீதிபதி இளஞ்செழியன்**
**345 பக்கங்களில் தீர்ப்பு**

அதனை தொடர்ந்து தீர்ப்பாய நீதிபதிகளில் ஒருவரான மாணிக்கவாசகர் இளஞ்செழியன், தனது தீர்ப்பை மதியம் 12.05 நிமிடத்துக்கு வழங்க ஆரம்பித்தார். அவர் 345 பக்கங்களில் தீர்ப்பை எழுதியிருந்தார்.

2, 3, 4, 5, 6, 8 மற்றும் 9ஆம் எதிரிகளை குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கிறேன் என அவரும் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து வழக்கில் இருந்து நிரபராதிகள் என தீர்ப்பாயத்தால் விடுவிக்கப்பட்ட முதலாம் எதிரியான பூபாலசிங்கம் இந்திரகுமார் மற்றும் ஏழாம் எதிரியான பழனி ரூபசிங்கம் குகநாதன் ஆகியோர் எதிரி கூண்டில் இருந்து இறக்கப்பட்டனர்.

அதன் பின்னர் எதிரிகளிடம் உங்களுக்கு ஏன் தூக்குத் தண்டனை விதிக்க கூடாது என தீர்ப்பாயம் வினவியது. அதற்கு அவர்கள் தனித்தனியே பதில் அளித்தனர்.

**எதிரிகள் உருக்கம்**

இரண்டாம் எதிரியான பூபாலசிங்கம் ஜெயக்குமார், "இந்த குற்றத்துக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. சந்தேகத்தில்தான் என்னைப் பிடித்தார்கள். எனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.நான் நிரபராதி"" எனக் கண்ணீருடன் தெரிவித்தார் .

மூன்றாம் எதிரியான பூபாலசிங்கம் தவக்குமார், "இந்த வழக்குக்கும் எனக்கும் தொடர்பில்லை. நான் எந்த குற்றமும் செய்யவில்லை. சிஐடியும், பொலிஸாரும் சேர்ந்து எங்களை மாட்டிவிட்டார்கள்" எனத் தெரிவித்தார்.

நாலாம் எதிரியான மகாலிங்கம் சசிதரன், "எனக்கும் இந்தக் கொலைக்கும் எந்த தொடர்பும் இல்லை. நான் 12ஆம் திகதி கொழும்பில் நின்றேன். அதற்கு வெள்ளவத்தை சிக்னல்கள், வீதிகள், ஏஞ்சல் லொட்ஜ் உள்ளிட்ட இடங்களில் உள்ள சி.சி.ரி.வி. கமராக்களை சோதனையிட்டால் தெரியும். எனக்காக யாரும் வெளியில் இல்லை. அம்மாதான் இருந்தார். அவரையும் வித்தியாவின் தாயாரை மிரட்டினார் எனக்கூறிச் சிறையில் அடைத்தார்கள். அவர் சிறையிலேயே உயிரிழந்துவிட்டார். எனக்கு மனைவி பிள்ளைகள் உள்ளனர். நான் நிரபராதி" என தெரிவித்தார்.

**குற்றவாளிகள்**
**வெளியிலுள்ளனர்**

ஐந்தாம் எதிரியான தில்லை நாதன் சந்திரஹாசன், "நான் 5 பெண் பிள்ளைகளுடன் பிறந்தவன். எனக்கும் பிள்ளைகள் உள்ளனர். நான் இந்தக் குற்றத்தைச் செய்யவில்லை. எமக்கு எதிராக இந்த மன்றில் கொண்டுவரப்பட்ட சாட்சியங்கள் கண்கண்ட சாட்சியங்கள் இல்லை. அவர்கள் கண்கெட்ட சாட்சியங்கள். சட்ட மருத்துவ அதிகாரி ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் ஐந்து பேரின் விந்தணுக்கள் எடுக்கப்பட்டதாகக் கூறினார். பின்னர் அதற்கு என்ன நடந்தது? எனத் தெரியவில்லை. இந்த வழக்கில் எம்மை சிக்க வைப்பதற்காக அதனை அழித்துவிட்டார்களோ தெரியவில்லை.

இதேபோன்ற குற்றங்கள் எங்கள் பிரதேசத்தில் பல நடந்துள்ளன. அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எமக்காக சட்டத்தரணிகள் முன்னிலையாக முன் வரவில்லை. சட்டத்தரணிகள் முன்வந்து இருந்தால் எமது நியாயங்களையும் எடுத்து கூற முடிந்திருக்கும். ஒரு சாட்சியங்கள் கூட உண்மையான சாட்சியங்கள் இல்லை.

வெளியில் இருப்பவர்கள், குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு விட்டார்கள் என நினைக்க வேண்டாம். இங்கே தண்டிக்கப்பட்டுள்ளவர்கள் நிரபராதிகளே. குற்றவாளிகள் வெளியில் தான் உள்ளார்கள். அவர்கள் தொடர்பில் கவனமாக இருங்கள்"" எனத் தெரிவித்தார்.

**கடவுள் கண்ணை**
**மூடிக்கொண்டு**
**இருக்கவில்லை**

ஆறாம் எதிரியான சிவதேவன் துஷாந்த், "மாணவியின் தாய் தனது சாட்சியத்தின் போது , மகள் தன் பின்னால் யாரும் வருவது பற்றியோ, தொல்லை கொடுத்தார்கள் என்றோ கூறவில்லை என சாட்சியம் அளித்தார். ஆனால் நான் மாணவியை ஒரு தலையாக காதலித்து தொந்தரவு செய்ததாக இங்கே கூறுகின்றார்கள். நான் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு வாக்குமூலம் கொடுக்கவில்லை. அவர்கள் தாம் எழுதிய வாக்குமூலத்தில் என் கையெழுத்தை சித்திரவதை புரிந்து வாங்கினார்கள்" என்றார்.

"அதேபோலவே கண்கண்ட சாட்சியம் என சாட்சியம் அளித்த உதயசூரியன் சுரேஷ்கரனை சித்திரவதை புரிந்து துன்புறுத்தி எனக்கு எதிராக சாட்சி கூறவைத்தனர். உண்மையான குற்றவாளிகள் வெளியில்தான் உள்ளனர். கடவுள் கண்ணை மூடிக் கொண்டு இருக்கவில்லை. எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றார். உண்மைக் குற்றவாளிகள் மிக விரைவில் பிடிபடுவார்கள். அப்போதே எங்களுக்கும் உயிரிழந்த மாணவிக்கும் நீதி கிடைக்கும்"" எனத் தெரிவித்தார்.

எட்டாம் எதிரியான ஜெயதரன் கோகிலன், "நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. நான் 12ஆம் திகதி கொழும்பில் நின்றேன். அதற்கு சாட்சியங்கள் உள்ளன. எமக்கோ அந்த மாணவிக்கோ நீதி கிடைக்கவில்லை"" எனத் தெரிவித்தார்.

**செய்மதியைப் பரிசோதித்து**
**குற்றவாளிகளைப் பிடியுங்கள்**

ஒன்பதாம் எதிரியான , மகாலிங்கம் சசிக்குமார் (சுவிஸ்குமார்),

இந்தக் குற்றங்களை நான் செய்யவில்லை. சி.ஐ.டி எங்களுக்கு எதிராகப் பொய் சாட்சியங்களை கொண்டு வந்தது. இந்த நீதிமன்றால் முடியுமானால் குற்றச் சம்பவம் நடந்த தினத்தன்று , குற்ற செயலில் ஈடுபட்டவர்கள் யார் என்பதைச் செய்மதி ஊடாகக் கண்டறியுங்கள். பொலிஸையும் சி.ஐ.டியையும் நம்பாதீர்கள் எனத் தெரிவித்தார்.

அதனை அடுத்து தீர்ப்பாயத்தால் குற்றவாளிகள் எனக் கண்டறியப்பட்டவர்களுக்கான தீர்ப்பு வாசிக்கப்பட உள்ளதாக நீதிபதிகள் அறிவித்தனர்.

**தூக்குத் தண்டனை**

திறந்த மன்றின் மின்விளக்குகள் அணைக்கப்பட்டன. நீதிபதிகள் உள்பட அனைவரும் எழுந்து நின்றனர்.

"அரச தலைவர் நிர்ணயிக்கும் இடத்தில், தினத்தில், நேரத்தில் குற்றவாளிகள் 7 பேருக்கும் உடலிருந்து உயிர் பிரியும்வரை கழுத்தில் சுருக்கிட்டு தண்டனை நிறைவேற்றப்படும்"" என்று தீர்ப்பாயத்தின் தலைவர் அறிவித்தார். நீதிபதிகள் பேனாவை உடைத்து வீசி எறிந்தனர். மன்று கலைந்தது.

**அரச சாட்சி விடுவிப்பு**

மாணவி கொலை வழக்கில் 11ஆவது சந்தேகநபராகக் கைது செய்யப்பட்ட உதயசூரியன் சுரேஷ்கரனுக்கு சட்டமா அதிபர் நிபந்தனைகளுடன் கூடிய பொது மன்னிப்பு வழங்கியதை அடுத்து அவர் அரச தரப்பு சாட்சியமாக மாறி (கண்கண்ட சாட்சி) சாட்சியம் அளித்திருந்தார்.

இதுவரை காலமும் சாட்சியத்தின் பாதுகாப்பு கருதி சுரேஷ்கரன் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவர் நேற்று தீர்ப்பாயத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

தூக்குத் தண்டனைக் கைதிகள் 7 பேரும் கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (உ,வ,37)

## கண்ணீருடன்...

டணை விதிக்கப்பட்டது.

அதன்பின்னர் கருத்துக் கூறியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நீதிபதிகள் மூவருக்கும் நன்றிகள். விசாரணைகள் முன்னெடுத்த பொலிஸ் அதிகாரிகளுக்கும். சட்டத்தரணிகளுக்கும் நன்றிகள். வித்தியாவுக்காக கஷ்டங்களை அனுபவித்த, அடி வாங்கிய அனைவருக்கும் வித்தியா சார்பில் நன்றி கூறுகின்றேன்.

கடந்த இரு ஆண்டுகளாக வித்தியாவுக்காகக் குரல் கொடுத்த ஊடகங்கள் அனைத்துக்கும் நன்றிகள்.

அனைவருக்கும் இரு கரம் கூப்பி நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். என்னைப் போன்று ஒரு தாயும் இனி அழக் கூடாது. வித்தியாவுக்கு நடந்த கொடுமை யாருக்கும் இனி நடக்கக் கூடாது." என்று அவர் குறிப்பிட்டார். (ற-32,37,8,26)

## வித்தியா...

உள்ளதனால் அவர் தொடர்ந்து சிறையிலையே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கொலை மிரட்டல் தொடர்பிலான வழக்கு விசாரணை எதிர்வரும் 3ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நடைபெறவுள்ளது. (ற-32)

## மேன்முறையீடுக்கு...

மன்றில் முன்னிலையான சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தனவே மேற்கண்டவாறு கூறினார்.

"எமது தரப்பினர் இந்தக் குற்றத்தைச் செய்யவில்லை. எமக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. நிரபராதிகள் தண்டிக்கப்பட்டுவிட்டார்கள். இந்த தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றுக்கு செல்வோம்" என எதிரிகள் தரப்புச் சட்டத்தரணி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (வ-5,32,37)

## பொங்கல்...

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் பெண்கள் வித்தியாவின் உருவப் படத்துக்கு முன்பாகப் பொங்கல் பொங்கி ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளுக்கு அதி உச்ச தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவை விரைவாக வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (ற-8)

## தமிழக...

கான பின்னூட்டல்களில் பதிவிட்ட தமிழகத்தைச் சேர்ந்த இளையோர், இந்தத் தீர்ப்பை எமது நாட்டு நீதிபதிகளும் வாசிக்க வேண்டும். எமது ஊரில் என்றால் இவர்களுக்கு பிணை கொடுத்திருப்பார்கள் என்று குறிப்பிட்டிருந்தனர். (5)

## யாழ்...

குவிக்கப்பட்டனர். நீதிமன்றுக்குள் சென்றவர்கள் தீவிர உடற்சோதனையின் பின்னர் அனுமதிக்கப்பட்டனர். நீதிமன்றத்தைச் சுற்றியுள்ள வீதிகளில் ஆயுதம் தரித்த சிறப்பு அதிரடிப் படையினரும், பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

எதிரிகள் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டபோது கடும் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டனர். (ற-32,37,8,26)

## மன்றில்...

தன் சரஸ்வதி உணர்ச்சி மேலீட்டால் மூர்ச்சையடைந்தார். அதனால் அங்கு சற்றுப் பரபரப்பு ஏற்பட்டது. (ற-32,26,8)



# குத்துச்சண்டையில் வடமாகாணத்துக்கு ஏழு பதக்கங்கள்

யாழ்ப்பாணம், செப். 28

தேசிய மட்ட குத்துச் சண்டைப் போட்டியில் வடமாகாணத்துக்கு ஒரு வெள்ளி பதக்கம், 6 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 7 பதக்கங்கள் கிடைத்தன.

43ஆவது தேசியமட்ட இருபாலாருக்குமான குத்துச்சண்டைப் போட்டி மாத்தறை அக்குரல்ல குருப்பிட்டிய உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வெள்ளிப் பதக்கத்தை 69 கிலோ எடைப் பிரிவில் வி.நிகாலஸ், வெண்கலப் பதக்கத்தை 56 கிலோ எடைப் பிரிவில் செந்தூரன், 75 கிலோ எடைப் பிரிவில் ரமேஷ், 81 கிலோ எடைப் பிரிவில் கேசவன், 91 கிலோ எடைப் பிரிவில் நிகாசன் ரூபராஜ் ஆகியோரும் பெண்கள் பிரிவில் 60 கிலோ எடைப் பிரிவில் எம்.பிரியந்தி 67 கிலோ எடைப் பிரிவில், கே.பிரசாந்தினி ஆகியோரும் பெற்றனர். கடந்த ஆண்டு 9ஆவது இடத்தில் இருந்த வடமாகாணம் இந்த வருடம் எட்டாவது இடத்தைப் பிடித்தது. (ம-422)

## இன்றைய மோதல்கள்

**வவு. மாவட்ட கால்பந்தாட்டம்**
வவுனியா மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்சைன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திருக்குமரன் வி.க. கால்பந்துத் தொடர்**
உரும்பிராய் திருக்குமரன் விளையட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பைஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சிறி முருகன் வி.க. கால்பந்துத் தொடர்**
கோட்டைக்காடு மல்லாகம் சிறி முருகன் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புததூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## மனோகரா அணி அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், செப். 28

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மனோகரா அணி வெற்றிபெற்றது.

சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:3 என்ற கோல் கணக்கில் மனோகரா அணி வெற்றி பெற்றது. (ம- 23)

## குறிஞ்சிக்குமரன், சரஸ்வதி அணிகள் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், செப். 28

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் குறிஞ்சிக்குமரன், சரஸ்வதி அணிகள் வெற்றிபெற்றன.

திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## பல்கலை வென்றது வெண்கலம்

பல்கலைக். கழகங்களுக்கு இடையிலான தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது.

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான கூடைபந்தாட்டத் தொடர் கொழும்பு பேராதனை பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் பெண்கள் பிரிவில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஊவா பல்கலைக் கழக அணி மோதியது. இதில் யாழ். பல்கலைக் கழக அணி 47:39 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது. (ம-422)



## ஜெகமீட்பர் சம்பியனானது

யாழ்ப்பாணம், செப். 28

உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி சம்பியனாது.

உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கனகபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவு செய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது ஜெகமீட்பர் அணி. (ம-23)



பங்களாதேஷ் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகும் நிலையில், இந்தத் தொடருக்காக நேற்று கடும் வலைப் பயிற்சியில் ஈடுபட்டது பங்களாதேஷ் அணி. "ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை ஆகிய அணிகளுக்கு எதிராக அண்மையில் டெஸ்ட் வெற்றிகளைப் பதிவுசெய்துள்ள பங்களாதேஷ் அணி தென்னாபிரிக்காவையும் வீழ்த்தும்" என்று அந்த அணியின் தலைவர் ரகழும் நம்பிக்கை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இங்கிலாந்து - தீவுகள் 5ஆவது ஆட்டம் நாளை

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

முன்னதாக முடிவடைந்த டெஸ்ட் தொடரை 2:1 என்ற அடிப்படையில் இங்கிலாந்து கைப்பற்றியதை அடுத்து ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரையும் இங்கிலாந்து அணி கைப்பற்றுவது உறுதியாகிவிட்டது. இதனால் நாளை ஆட்டம் தொடரைத் தீர்மானிக்கப் போகும் ஆட்டமாக அமையாது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# இன்றாவது வெல்லுமா ஆஸ்திரேலிய அணி

இந்தியாவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில், இந்த ஆட்டத்திலாவது ஆஸ்திரேலிய அணி வெற்றிபெறுமா என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களிலும் இந்திய அணி வெற்றிபெற்று தொடரில் 3:0 என்று முன்னிலை வகிக்கிறது. இதனால் அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றாலும் அந்த அணியால் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், உலகச் சம் பியனான ஆஸ்திரேலிய அணி இந்தியாவிடம் படுதோல்வியடை வதைத் தவிர்ப்பதற்கு இன்றைய ஆட்டத்திலாவது வெற்றிபெற வேண்டும் என்ற கௌரவச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. (ம)






# தொடர்ச்சியாக 10 வெற்றிகளை பதிவுசெய்யுமா இந்திய அணி?

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இன்று நடைபெறும் நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றால் தொடர்ச்சியாக பத்து வெற்றிகளைப் பதிவுசெய்த அணியென்ற அடைவை அது நிலைநாட்டும். தொடர்ந்து பத்து வெற்றிகளை ஆஸ்திரேலிய அணி 6 தடவையும், தென்னாபிரிக்க அணி 5 தடவையும், இலங்கை, பாகிஸ்தான் அணிகள் தலா இரு முறையும், இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் தலா ஒரு முறையும் பதிவுசெய்துள்ளன. இந்திய அணி ஒருமுறையேனும் இந்த அடைவைப் பதிவுசெய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# வெற்றி வெற்றிதான்; கிரீமர் கடும் காட்டம்

சிம்பாப்வேக்கு எதிரான தொடரை இலங்கை இழந்தமை தொடர்பாக சூதாட்டம் ஏதேனும் நடைபெற்றதா என்ற கோணத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், "இலங்கை அணியின் வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்க வாய்ப்பில்லை. இலங்கைக்கு எதிராக கிடைத்த வெற்றியை இவ்வாறான இடைச் செருகல் காரணங்கள் கெடுத்து விடமாட்டா" என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார் சிம்பாப்வே அணியின் தலைவர் கிரீமர்.

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் நேரடிக் கண்காணிப்பில்நடைபெற்றுவரும்இந்தவிசாரணைகள் கிரிக்கெட் உலகில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், சிம்பாப்வேயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார் கிரீமர்.

"சூதாட்டம் போன்ற விடயங்களில் இலங்கை வீரர்கள் ஈடுபட்டிருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் தங்கள் நாட்டையும் கிரிக்கெட்டையும் அதிகம் நேசிக்கிறார்கள். நாங்கள் சிறப்பாக விளையாடியதால்தான் இலங்கைத் தொடரை வென்றோம். இந்த வெற்றியின் மூலம் கிடைத்த புகழை இவ்வாறான இடைச்செருகல் காரணங்கள் தட்டிப்பறித்துவிட முடியாது" என கிரீமர் மேலும் தெரிவித்தார். (ம)

# தோல்விகளில் இருந்து மீண்டுவருமா இலங்கை




இலங்கை அணி தனது தொடர் தோல்விகளில் இருந்து, பாகிஸ்தானுக்கு எதிரான தொடரிலாவது மீண்டு வருமா என்பதுதான் இலங்கை ரசிகர்களின் எதிர்பார்ப்பு. இந்தப் பின்னணியில் இன்று ஆரம்பமாகும் பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கு இடையில்லான டெஸ்ட் தொடர் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்துள்ளது.

இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. அங்கு இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூவகை ஆட்டங்களையும் கொண்ட தொடர்கள் நடைபெறுகின்றன. இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது. அபுதாபியில் இன்றை ஆட்டம் நடைபெறுகிறது. இரண்டாவது ஆட்டம் டுபாயில் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகிறது. இரண்டாவது ஆட்டம் பகலிரவு டெஸ்ட் ஆட்டமாக நடைபெறவுள்ளது. இலங்கை அணி இதற்கு முன்னர் பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடிப் பழக்கமில்லை என்ற காரணத்தால் இந்த ஆட்டம் சவாலாகவே இருக்கும்.

டெஸ்ட் தொடரை அடுத்து ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகிறது. பின்னர் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. (ம)

# கிரிக்கெட்டிலும் சிவப்பு அட்டை வெளியேற்றம் ரி-20 ஆட்டங்களிலும் மறுபரிசீலனை முறைகள்

## இன்று முதல் நடைமுறைக்கு

பன்னாட்டு கிரிக்கெட் சபை, சில புதிய விதிகளை இன்று அறிமுகப்படுத்துகிறது. அவற்றில் கிரிக்கெட் ஆட்டங்களிலும் சிவப்பு அட்டை காண்பித்து வெளியேற்றுதல், ரி-20 ஆட்டங்களிலும் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறைகள் ஆகியன முக்கியத்துவம் மிக்கவையாக அமைந்துள்ளன.

கிரிக்கெட்டில் சுவாரஸ்யத்தை அதிகரிப்பதற்காக பன்னாட்டு கிரிக்கெட் சபை தொடர்ந்து பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. பகலிரவு டெஸ்ட் ஆட்டங்கள், நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறைகள் ஆகியவற்றைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம். இந்த வரிசையில்தற்போதுமேலும்சிலவிதிமுறைகளை பன்னாட்டு கிரிக்கெட் சபை நடைமுறைப்படுத்தவுள்ளது. இந்தப் புதிய திட்டங்கள் இன்று முதல் நடைமுறைக்கு வருகின்றன.

கால்பந்தாட்டத்தில் வீரர்கள் மோதல் போக்கைக் கடைப்பிடித்தால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்படுவார்கள். இதேபோன்று கிரிக்கெட்டி லும் வீரர்கள் மோதல் போக்கைக் கடைப்பிடித்தால் அவர்கள் மைதானத்தில் இருந்து வெளியேற்றப்படும் திட்டம் இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது.

ரி-20 ஆட்டங்களைப் பொறுத்தவரை நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறைகள் இதுவரை இருந்ததில்லை. தற்போது ரி-20 ஆட்டங்களிலும் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறையும் புதிதாக அறிமுகமாகிறது.



துடுப்பாட்ட மட்டையின் அளவில் மாற்றங்கள், ரண் அவுட், பிடியெடுப்பு முறைகளிலும் புதிய மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன. (ம)

## கபில்தேவின் வாழ்க்கை படமாகிறது

இந்திய கிரிக்கெட் அணி முதன்முதலாக உலகக்கிண்ணம் வென்றபோது, அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்தவரான கபில்தேவின் வாழ்க்கை படமாக எடுக்கப்படவுள்ளது.

விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் வாழ்க்கையை படமாக எடுப்பது தற்போது வழக்கமான ஒன்றாக மாறியுள்ளது. இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனி, இந்திய கிரிக்கெட்டின் கடவுள் என்று அழைக்கப்படும் சச்சின் ஆகியோரின் வாழ்க்கையை வைத்து எடுக்கப்பட்ட படங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன. இந்த நிலையில் கபில்தேவின் வாழ்க்கையும் தற்போது படமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இயக்குனர் கபீர்கான் இந்தப் படத்தை இயக்க இருக்கிறார். இதில் நடிக்க ஹிந்தி நடிகர் ரன்வீர்சிங் ஒப்பந்தமாகி இருக்கிறார். (ம)

## ஸ்ரோக்ஸுக்கு இடமில்லை



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நேற்று நடைபெற்ற நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் ஸ்ரோக்ஸுக்கு இடம் கொடுக்கப்படவில்லை. ஒழுக்காற்று நடவடிக்கையின் அடிப்படையிலேயே அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

ஸ்ரோக்ஸ் கடந்த திங்கட்கிழமை பிரிஸ்பெய்னில் ஒரு நபரைத்தாக்கினார் என்று தெரிவித்து அவர் மீது முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்திவரும் நிலையில் ஒழுக்காற்று நடவடிக்கைக்காகவே ஸ்ரோக்ஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

ஆண்டுகள் 200 இனை
நோக்கிய பயணத்தில் ....
உடுவில் மகளிர் கல்லூரியின்
"பரதரிதா"
(நடன நிகழ்ச்சி)

பிரதம விருந்தினர் :
சிறி.ஆறுமுகம் நடராஜன்
(இந்தியத்துணைத்தூதுவர்)
&
திருமதி சாந்தி நடராஜன்

செப்ரெம்பர் 30 சனி
மாலை 4 மணி
யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வேலையாள்கள் தேவை
பின்வரும் வேலைகளுக்கு தேவை
01. ரொட்டி/கொத்து /றைஸ் போடுபவர்
02. சமையல் வேலை பெண் /ஆண்
03. உதவியாள்கள் பெண்/ஆண்
ஆரியகுள சந்தி, யாழ்ப்பாணம், 071110 0066

ஆங்கிலம்
இம்முறை A/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 30.09.2017 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வார நாள் ( திங்கள், புதன் ) பிரிவுகள் ஆரம்பம் 02.10. 2017
1. காலை 8.00-10.00 2. காலை 10.00-12.00
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்
SAAMSON
403, வெலிங்டன் சந்தி அருகில், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

# இரட்டைச் சதத்தை தவறவிட்ட லூயிஸ்





இங்கிலாந்துக்கு எதிராக நேற்று நடைபெற்ற நான்காவது ஒருநாள் ஆட்டத்தில், இரட்டைச் சதத்தைப் பதிவுசெய்வதற்குரிய வாய்ப்பு மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லூயிஸுக்கு இருந்த போதிலும் அதை அவர் தவறவிட்டார்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து ஓட்டங்களைக் குவித்தது. ஆரம்ப வீரரான லூயிஸ் ஆட்டமிழக்காது 176 ஓட்டங்களை விளாசினார். அவர் 130 பந்துகளில் இந்த ஓட்டங்களைப் பெற்றார். 17 பவுண்டரிகள், 7 சிக்சர்கள் ஆகியன லூயிஸின் துடுப்பு மட்டையில் இருந்து சீறிப் பாய்ந்தன.

47ஆவது பந்துப்பரிமாற்றத்தை போல் வீசினார். இரண்டாவது பந்தை எதிர்கொண்டபோது லூயிஸ் உபாதைக்கு உள்ளானார். இதனால் அவர் ஆட்டமிழப்பற்ற ஓய்வை அறிவித்துச் சென்றார். அவர் தொடர்ந்து துடுப்பெடுத்தாடியிருந்தால் இரட்டைச் சதம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருந்தன. உபாதை காரணமாக இந்த வாய்ப்பு லூயிஸுக்கு சாத்தியமில்லாமல் போனது. (ம)

## டொட்மன்டை வீழ்த்தி ரியல் மட்ரிட் அபாரம்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டத்தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.

ரியல் மட்ரிட் அணியை எதிர்த்து டொட்மன்ட் அணிமோதியது. ரியல் மட்ரிட்டின் சார்பாக ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார் பேல். வேறெந்த மாற்றமும் முதல் பாதியில் ஏற்படவில்லை. முதல் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது ரியல் மட்ரிட் அணி. இரண்டாவது பாதியின் 49ஆவது நிமிடத்தில் ரொயால்டோ, மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 54ஆவது நிமிடத்தில் டொட்மன்ட் சார்பாக முதலாவது கோல் பதிவானது. தற்போது நிலைமை 2:1. 79ஆவது நிமிடத்தில் ரொனால்டோ மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது ரியல் மட்ரிட் அணி. (ம)






டொட்மன்டுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம், ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் ரொனால்டோவின் 400ஆவது ஆட்டமாக அமைந்தது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.